
கல்கி
KALKI
22.7.2001
ரூ. 5.00
தடுமாறிய
அறிவாலயம்!
ஏமாற்று
இலக்கியம்!

வாங்கிவிட்டீர்களா?

இறை ஜோதிடம்

A COMPLETE ASTROLOGICAL MONTHLY MAGAZINE

★ எந்த ராசிக் குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும்?

★ ஷேர்மார்க்கெட்டில் எப்போது முதலீடு செய்யலாம்?

★ ஜெயலலிதா ஆட்சி நிலைக்குமா?



★ திருமணத்தடைக்குப் பரிகாரங்கள்!

★ வித்வான் வே.லட்சுமணனின் விரிவான நட்சத்திரப் பலன்கள்!

★ கண்ணன் பட்டாச்சாரியாவின் ஜோதிட பதில்கள்!



A to Z ஜோதிட சாஸ்திரத்தின் துல்லியமான பலன்களைத் தரும் இறையருள் நிறைந்த ஜோதிட மாதஇதழ்

கௌரவ ஆசிரியர் :

விருட்ச சாஸ்திர வித்வான்

ஸ்வாமி கண்ணன் பட்டாச்சாரியா

“மற்ற நேரத்திலும் பாடுகிறேன்...”

“மச்சான் மீசை வீச்சருவா...” என்ற ‘தில்’ படப் பாடல் மூலம் தமிழ்த் திரையிசைக்கு அறிமுகமாகி யிருக்கிறார் புஷ்பா ஸ்ரீராம். இவரும் கர்நாடக சங்கீதத்திலிருந்து திரையிசைக்கு வந்தவர்.

“பாதி அனுத்தமா, பாதி மால்குடி சுபா குரல்களை மிக்ஸ் பண்ணியது மாதிரி உங்கள் குரல் இருக்கிறதே?” என்றால் வேகமாகத் தலையை ஆட்டி மறுக்கிறார்.

“தில் படப் பாடலைக் கேட்டுவிட்டு இப்படிச் சொல்லாதீங்க. அது என் உண்மையான குரலல்ல. அந்த மாதிரி வேண்டுமென்றதால் என் குரலை மாற்றி அதைப் பாடினேன்” என்று தன்னிலை விளக்கம் தந்தார் புஷ்பா.

இவர் இசைத் துறைக்கு வந்ததில் ஆச்சர்ய மில்லை. குடும்பமே இசைக் காதலர்கள்தான். மயிலாப்பூரிலுள்ள இவரது வீட்டில் டி.ஆர். மகாலிங்கம், மகாராஜபுரம் சந்தானம் உட்பட பல பெரிய பாடகர்கள் பாடி யிருக்கிறார்களாம்.

“நான் பாடகியா ஆனதுக்கு ஹரிதாஸ் கிரி சுவாமிகள்தான் கார ணம். அவரது கச்சேரியில் நான் தம்புரா போட்டுக்கிட்டிருந் தேன். ஒரு நாள் எம்.எல்.

கல்கி இண்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com







''நேத்து குன்னக்குடி வயலின் வாசிச்சார் கேட்டியா?''


''கேட்டேன்டா தரமாட்டேன்னுட்டார், ஏன்னு தெரியலை!''

''கடிமன்னன் ஒருத்தன் வயலின் கேட்க வருவான் தராதீங்கன்னு நான்தான் சொல்லி வைச்சிருந்தேன்!''

- லால்குடி, வெ. நாராயணன்



''பதினாறு குழந்தைகளோடு கிராமத்திற்குப் பொன்னுத்தாய் வந்தபிறகு பெண்கள் அரசமரத்தைச் சுற்றுவதை விட்டு விட்டு பொன்னுத்தாயியைச் சுற்றிசுற்றி வர ஆரம்பிச்சுட்டாங்க!''



''இந்த மலையிலிருந்து நீங்க கீழே குதிச்சு நொண்டியாயிடறீங்க!''

''ஐயோ, செத்துப் போயிட்டா?''

''கதையிலே மாற்றம் செய்துடுவோம். அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம்!''

- து. பூவராகன்

வசந்தகுமாரி அம்மாட்ட என்னை அறிமுகப்படுத்தி, இவளை, நீங்கதான் பாடகி ஆக்கணும்னு சொன்னாங்க சுவாமிகள். அதிலிருந்து அவங்ககிட்டதான் பாட்டு கற்றுக் கொண்டேன். அப்புறம் மியூசிக் காலேஜ்ல எம்.ஏ. படிச்சேன்.'' என்கிற புஷ்பா, பரத நாட்டியத்திலும் கலக்கியிருக்கிறாராம்.

இவர் ஏழாம் வகுப்பு படிக்கும்போது 'புரந்தர தாசர்' என்ற நடன சினிமாவில் ஆடி, 'பிரசிடென்ஷி'யல் அவார்டையும் பெற்றிருக்கிறார். நடனமாடினால் வியர்வை அதிகமாக வெளியேறி குரலை பாதிக்குமாம். இதனால் பரதத்துக்குக் குட்பை சொல்லிவிட்டு, பாட்டுக்கு வந்துவிட்டார்.

சினிமாவுக்கு வந்தது எப்படி?

''பால் ஜேக்கப், ஜெய்சங்கர், சுனில், சுரேஷ்பீட்டர் இவங்களோட 'ஜிங்கிள்ஸ்' பாடிட்டு இருந்தேன். 'பான்ட்ஸ், நெஸ்கேப், பிரின்ஸ் ஜுவல்லரி, கிளினிக் ஷாம்பூ' போன்ற விளம்பரங்களுக்கும் பாடினேன். அப்போ பாலசந்தர் சாரோட 'மரபுக் கவிதைகள்' தொடர்ல பத்து பாரதியார் பாடல்கள் பாட வாய்ப்புக் கிடைச்சது. அப்புறம் நிறைய ஆல்பம் பண்ணியிருக்கேன். இதுல, 'எம்.ஜி.ஆர். 2000'ங்கற ஆல்பத்தைக் கேட்டுட்டு இசையமைப்பாளர் வித்யாசாகர் சார், 'சினிமாவுக்குப் பாடறீங்களா'ன்னு கேட்டாரு. எனக்குச் சின்ன வயசுலயே சினிமா பாட்டுன்னா விருப்பம். சரின்னு சொன்னேன். உடனே தெலுங்குல, 'வீடு சாமான்யலு காது' என்ற படத்துல பாடினேன். அது கிராமிய பாடல் டைப். நல்ல ஹிட்டாச்சு. பிறகு மலையாளத்துல ஜேசுதாஸ் சாரோட ஒரு பாடல் பாடினேன். இப்ப தமிழ்ல 'தில்' படப் பாடல்.'' என்கிற புஷ்பாவுக்கு எம்.எல்.வி. மாதிரியும் எம்.எஸ். மாதிரியும் வர வேண்டும் என்று ஆசையாம்.

''மக்களுக்கு இசையின் முக்கியத்துவம் புரிய மாட்டேங்குது. படிச்சிட்டு வேலைக்குப் போகாம வீட்ல என்ன பண்றீங்கன்னு கேட்கறாங்க! பாடறேன்னு சொன்னா மற்ற நேரத்துல என்ன பண்ணுவீங்கன்னு கேட்கறாங்க. மற்ற நேரத்திலும் பாடிக்கிட்டுத்தான் இருக்கேன். இதை எப்படிப் புரிய வைக்கறதுன்னு தெரியலை. மியூசிக்கோட தீவிரம் புரியலை. அது மற்ற எல்லாத்தையும்விட பெரிய விஷயம்தான். கடவுள் கொடுக்கற வரப்பிரசாதம்'' என்கிறார்.

- சலாம்ஜி

படங்கள் : ஜரிஸ்

திமுகவில் சலசலப்பு!

• ராஜ்ய சபாவுக்கு சரத்குமாரை அனுப்புவது குறித்து தி.மு.க.வில் நிறையவே புலம்பல்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட அரை டஜன் பிரமுகர்களுக்கு மேல் அந்த வாய்ப்புத் தமக்குக் கிடைக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், ஆலந்தூர் பாரதி, மிசா கணேசன் ஆகியோர் முன்னாள் மாண்புமிகுவான ஆலடி அருணாவும், அதிர்ஷ்டம் அடிக்குமா? என்று பார்த்துக் கொண்டிருந்தார். கலைஞரைப் பொறுத்த மட்டில் தேர்தலுக்கு முன்னர் சரத்துக்குக் கொடுத்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றியிருக்கிறார். இது ஒரு பக்கம் இருக்க, கலைஞர் கைது காரணமாக தலைமைக்கும், மு.க. அழகிரிக்கும் ஏற்பட்டுள்ள புதிய நெருக்கம், பல தென் மாவட்டப் பிரமுகர்களைச் சங்கடப்படுத்தி இருக்கிறது. அந்தச் சங்கடத்தைப் பயன்படுத்தி சில தி.மு.க பிரமுகர்களை இழுக்க ஆளும் கட்சிப் பிரமுகர்கள் கையில் பெட்டியுடன் அலைகிறார்களாம்.



• சரத்குமார்



• சுதாகரன்

• த.மா.கா சார்பில் யாரை ராஜ்ய சபா உறுப்பினராக்குவது என்ற முடிவெடுக்கும் விஷயத்தில் த.மா.கா பிரமுகர்கள், கோவிந்தவாசனுக்கு முன்னுரிமை கொடுத்தது, மூப்பனாரின் மகன் என்ற காரணத்தினால் மட்டுமில்லையாம். ஜெயந்தி நடராஜனின் முயற்சியை முறியடிக்கத்தானாம். "வேறு யாரைப் போட்டியாளராக நிறுத்தினாலும் ஜெயந்தி சாப்பிட்டு விடுவார். அதனால்தான் கோவிந்தவாசனைத் தூக்கி நிறுத்துகிறோம்" என்றார் ஒரு த.மா.கா பிரமுகர். ஆனால் அடித்தது லக் ஞானதேசிகனுக்கு.

• இன்னும் ஆறு மாத காலத்துக்கு ஜெயிலை விட்டு வெளியே வராத அளவுக்கு மாஜி வளர்ப்பு மகன் சுதாகரன் மீது அடுக்கடுக்கான வழக்குகள் போடுவது என்று போயஸ் தோட்ட வட்டாரத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம். "ஜெயிலில் இருந்தபடியே ஆளும் கட்சி எம்.எல்.ஏக்களைக் 'பிடிக்க' முயற்சிக்கிறார் சுதாகரன்" என்று தி.மு.க ஆதரவு பத்திரிகை ஒன்றில் செய்தி வந்தது. அதைப் படித்த அம்மா, அன்றே இரண்டாவது போதை மருந்து வழக்குப் போட பச்சைக் கொடிக் காண்பித்து விட்டாராம். இந்த வழக்கில் இரண்டு பாஸ்கரன்கள் சம்பந்தப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதில் 'ரிசர்வ் பாங்க்' பாஸ்கரன் தலைமறைவாகிவிட்டார். மற்றொரு பாஸ்கரன் சரண்டராகியும்கூட, போதை மருந்து வழக்கு அவர் மீது போடப்பட்டிருக்கிறது. இவர் ஒரு பத்திரிகையாளரும் கூட, பல விவகாரங்களில் கருத்துக் கணிப்பு செய்து கொடுக்கும் ஏஜென்ஸியும் நடத்தி வருகிறார். நான்கு வருடங்களுக்கு முன்னர் அம்மாவுக்கு மிகவும் வேண்டியவராக இருந்தவர். சசிகலா மூலமாக தோட்டத்துக்குள் நுழைந்தவர். சென்ற சட்டசபை தேர்தலின்போது தி.மு.க சார்பாக கருத்துக் கணிப்பைச் செய்து கொடுத்ததுதான் அம்மாவுக்கு இவர் மீது கோபம் வரக் காரணமாம்!

— சஞ்சயன்



கல்கி
ஆகஸ்ட் 5
வைரவிழா
சிறப்பிதழ்
'வைரமுடைய
நெஞ்சு
வேண்டும்!'
வியப்பூட்டும் வாழ்க்கை அனுபவங்கள்
படிக்க,
பாதுகாக்க
ஆச்சர்யமூட்டும்
பக்கங்கள்!
பாஸ்கர் சக்தி எழுதும்
பழைய வீடு
- இளமைத் தொடர்
ஆரம்பம்!
வாரம் ஒரு மெகா பரிசு

அமரர் கல்கி எழுதிய



சிவகாமியின் சபதம்

— வரலாற்றுத்
தொடர்கதை
ஆரம்பம்!

சிக்கல்-65

(பக்கா வெஜிடேரியன்
தொடர்!)

இன்னும்
நிறைய...
எதிர்பாருங்கள்!

சுமி சூப்பர் மார்க்கெட்



ஆட்டுக்குட்டி ஆடு!

சுவிட்சர்லாந்துன்னு சொன்னதுமே உங்களுக்கு என்ன ஞாபகம் வருது...? ஸ்விஸ் பேங்க் அக்கவுன்ட், போஃபர்ஸ், அரசியல்... இல்லைன்னா ஆல்ப்ஸ் மலைத்தொடர், ஜெனீவா ஏரி...?

நல்ல புக்ஸ் படிக்கற சின்ன பசங்க கிட்டே இதே கேள்வி கேட்டா ஹெய்டீ கதை ஞாபகம் வருதுன்னு சொல்லு வாங்க. ஜோஹானா ஸ்பைரி என்ற ஸ்விஸ் ரைட்டர் உருவாக்கின கேரக்டர் ஹெய்டீ. நாவல் பேரும் அதுவே. அந்த ரைட்டர் காலமாகி நூறு வருஷம் ஆகுதாம். அவர் ஞாபகமா சுவிட்ஸர்லாந்துல ஒரு வித்தியாசமான கொண்டாட்டம்.

ஹெய்டீ ஸ்டோரி ஆல்ப்ஸ் மலையில ஆட்டுக்குட்டிகளோட துள்ளி விளையாடி வளர்ற ஒரு சின்னப் பெண்ணைப் பத்தினது... இப்போ ஸ்விஸ் டூரிஸம்ல 'ஹெய்டீ வாழ்ந்த பகுதிகள்'னு அடையாளப்படுத்தி அங்கெல்லாம் சுற்றுலா பயணிகளை ஈர்க்க பிரமாதமான ஏற்பாடு பண்ணியிருக்காங்க. அதோட, ஹெய்டீ கதையைச் சினிமாவா எடுக்கறதுக்குப் பயன்பட்ட 'லொகேஷன்'கள்ல சுற்றுலா திருவிழாவே நடத்தறாங்க. 2001ஆம் வருஷம் 'ஹெய்டீ ஆண்டு'ன்னு அறிவிப்பே பண்ணியாச்சு.

ஒரு லட்சம் பயணிகளாவது 'ஹெய்டீ யாத்திரையை' மேற்கொண்டு ஸ்விட்சர்லாந்து வருவாங்கன்னு எதிர்பார்க்கறாங்க. இந்த 'யாத்திரிகர்கள்'ல பெரும்பாலானவங்க ஜப்பானியர்கள்தானாம்.

குழந்தைகள் வந்தா வரவேற்க, ஹெய்டீ வேஷம் போட்ட குழந்தை நட்சத்திரங்கள் காத்திருப்பாங்க. ஆடுகளோட விளையாடி, வைக்கோல் மெத்தையில ஹெய்டீ தூங்கின மாதிரி இந்த டூரிஸ்ட் குழந்தைகளும் விளையாடவும், தூங்கவும், ஆட்டுப்பால் குடிக்கவும் ஏற்பாடு ஆகியிருக்கு!

இந்த ஐடியாவை அப்படியே தர்ஜுமா பண்ணி இங்கே வந்தியத்தேவன் ரூட் போட்டு, டூரிஸம் போர்ட் ஏன் பயணிகளை ஈர்க்கக் கூடாது! இன் ஃபாக்ட் ஸ்ரீலங்கா டூரிஸமோட ஒரு டை-அப் கூட வைச்சுக்கலாம்...! சமுத்திரத்துல படகுவிட பூங்குழலி கிடைக்கறதுதான் கொஞ்சம் கஷ்டம்!

நம்ம டூரிஸம் அவ்வளவு சுறுசுறுப்பாகவும் கற்பனையோடும் எங்கே இயங்கும்னு கேட்பீங்க... சரிதான். பட் மேலை நாடுகள் மாதிரி ஏழை நாடுகளும் முன்னேறிக்கிட்டு வரதைக் கொண்டாட நியூஸ் வீக் ஒரு ஸ்பெஷல் ஸப்ளிமென்டே வெளியிட்டிருக்கு. அஃப்கோர்ஸ் அதுல சைனாவுக்குத்தான் முதல் வந்தனம். அந்த நாட்டோடப் பேரைச் சொன்னாலே எழுந்து நின்னு சல்யூட் அடிப்பாங்க போலிருக்கு... இந்தியாவுல சிலாகிக்கப்பட்டிருக்கற விஷயம் பயோடெக் பூம்! – அதாவது பயோடெக்னாலஜின்ற உயிரியல் தொழில் நுட்பத் துறைல நாம கண்டிருக்கற வளர்ச்சி.

கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் துறையோட மவுசுகூட கொஞ்சம் குறைஞ்சு இப்போ பயோடெக்தான் கோலோச்சுது. இதனால ஃபாரின் இன்வெஸ்டர்ஸ் இங்கே பயோடெக் கம்பெனி ஆரம்பிக்க படையெடுத்து வராங்களாம். பிஜி கோர்ஸ்ல மட்டும் வருஷத்துக்கு ஆயிரம் இந்தியர்கள் பயோடெக் படிச்சு வெளி வராங்க. அமெரிக்காவுக்கு அடுத்தபடியா இந்தியாலதான் இந்த எண்ணிக்கை அதிகம். இந்தியாவுல மனித வளத்தோட இயற்கை வளமும் தாராளமா இருக்கறதாலே இந்தத் துறைக்குப் பிரமாதமான எதிர்காலமாம்.... பிளஸ்டூ சேர்ந்திருக்கற பசங்களோட அம்மாக்களே! காதுல விழுந்ததா...

— சுமி

உ

|| ஸ்ரீ மாத்ரே நம: ||


ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா

ஸற்குணேஸ்வரபுரம் : கருவேலி. (Via)எரவாஞ்சேரி – 609 501.

ஸ்ரீ மஹாருத்ர யக்ஞம்: த்ரிதின லக்ஷார்ச்சனை

அன்புடையீர்!

கருவேலி என்கிற சர்குணேச்வரபுரத்தில் ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா பல நற்பணிகளை ஆற்றி வருகிறது. **கடந்த தை மாதம் மூன்று தினங்கள் ஸ்ரீ சதசண்டி ஹோமம் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. இவற்றின் தொடர்ச்சியாக ஆடி மாதம் 23–ஆம் தேதி முதல் 25–ஆம் தேதி முடிய (08.08.2001 முதல் 10.08.2001 முடிய) மூன்று தினங்கள் ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரி ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருக்கோயில் வளாகத்தில் ஸகல நலனை முன்னிட்டு ஸ்ரீ மஹாருத்ர யக்ஞம், த்ரிதின லக்ஷார்ச்சனை நடைபெற இருக்கின்றன.** இவை தவிர இந்த மூன்று தினங்களிலும் தினசரி விசேஷமான ஹோமங்களும், ஸ்ரீ ருத்ரத்ரிசதி, லலிதா த்ரிசதி மற்றும் க்ரமார்ச்சனைகள், ஸ்ரீசிவ கவச, இந்திராக்ஷி, விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ர பாராயணங்களும் ஸங்கல்ப பூர்வகமாக நடைபெற இருக்கின்றன. நாட்டின் அமைதியற்ற சூழ்நிலையைக் கருதியும், ஸநாதன தர்மத்தில் மக்களுக்கு மாறுபாடில்லாத நம்பிக்கை உண்டாக விரும்பியும் இவை நடத்தப்பட இருக்கின்றன.



இன்றையச் சூழ்நிலையில் எல்லா வகை பாவங்களையும் நீக்கி புண்ணியம் பெருக்கும் இவற்றை அனுஷ்டிப்பது தனி நபராலோ அல்லது குடும்பத்தாலோ இயலாமலிருக்கிறது. எனவே மெய்யன்பர்கள் அனைவரும் இந்த யக்ஞங்களில் உற்றார் உறவினர்களோடு கலந்து கொண்டு நலம் பெற வேண்டுகிறோம்.

தர்மத்தைவிட்டு விலகிக் கொண்டிருக்கும் சமூகத்தின் மேல் பரமேச்வரனுக்கு ஏற்படும் சினத்தைத் தணிக்கும் பொருட்டும், அதர்மத்தின் ஆக்கிரமிப்பினால் தோன்றும் தீய விளைவுகளிலிருந்து சமூகத்தைக் காக்கவும் ஆன்றோர்கள் அருளிய வண்ணம் இவை நடத்தப்படுகின்றன.

இவைச் சிறப்பாக நடப்பதற்கு அனைவரும் தங்களால் இயன்ற ஹோம, பாராயண, ஜப, அர்ச்சனைகளுக்கான கட்டணங்களையோ, அல்லது நன்கொடைகளையோ **ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபாவின்** பெயருக்கு மணியார்டராகவோ, காசோலையாகவோ, அல்லது டிமாண்ட் டிராப்டாகவோ அனுப்பக் கோருகிறோம்.

ரூபாய் 500/-ம் அதற்கு மேலும் நன்கொடை அளிப்பவர்களுக்கு பூஜையில் வைத்து அபிமந்திரிக்கப்பட்ட 10 கிராம் வெள்ளி டாலர் வழங்கப்பட உள்ளது.

குடந்தை பூந்தோட்டம் நெடுஞ்சாலையில் குடந்தையிலிருந்து 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது கருவேலிநாதர் ஆலயம். விழா நாட்களில் சிறப்புப் பேருந்து வசதிகளும், உணவு மற்றும் இருப்பிட வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கருவேலி
9.5.2001

இங்ஙனம்
ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா

பொருளாகவோ, பணமாகவோ நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரிகள் :

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா

1) G.குஞ்சிதபாதம், FCA.,
G. நடேசன் & கோ
டபீர் மேல்த்தெரு, கும்பகோணம்–612001
போன்: (0435–) 420 047

2) R. வைத்தியநாதன்
மேனேஜர், ஐ.ஓ.பி.,
111, காசிராமன் தெரு, கும்பகோணம்,
போன்: (0435)–426512

3) N. ராமசர்மா
18, டபீர் புதுத் தெரு,
கும்பகோணம்–612001
போன்: (0435–) 423297

4) G. கண்ணன்,
D/127-A, ராஜமன்னார் சாலை
கே.கே.நகர், சென்னை –78
போன்: 4836495/4848995.

“நம்ம வீட்டிலும், நமக்குத் தெரியாமலேயே தெஹல்கா வேலை நடந்திருக்குன்னு நினைக்கிறேன்.” என்று ஆரம்பித்தான் சங்கர். “இல்லைன்னா, போன மாசம் நம்ம வீட்ல நடந்த விஷயத்தை, எப்படி சுகி. சிவம் நேரில் பார்த்த மாதிரி விவரிச்சார்”

“எனக்குக் கூட அப்படித்தான் தோணுது.” என்றாள் அம்மா.

“சன் டீ.வி.யில் இந்தியத் தொலைக் காட்சிகளிலேயே முதல் முதலாக, ஹிட் படமான ரிதம் ஒளிபரப்பியும்கூட நாரத கான சபா ஹால் நிரம்பி, கேலரி பகுதியும் ஹவுஸ் ஃபுல் பார்த்தியா!” - சுமதி ஆச்சர்யத்தோடு சாதத்தை அளைத்து கொண்டேயிருந்தாள்.

“எனக்கொண்ணும் ஆச்சர்யமில்லை! கல்கி - ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் ப்ரோக்ராம்னாலே ரொம்ப கலர்ஃபுலா சுவாரஸ்யமா இருக்கும்னு இப்போ பேர் வாங்கியாச்சு. ஆறு மாசமா நடத்திக் காமிச்சுட்டாங்களே...” - சிலாகித்தார் அப்பா.

“இறை வணக்கம்னு, டாபிகலா, குருவாயூரப்பன்போல அந்த குட்டிப் பெண் சுருதி ரொம்ப ஜோரா பாடித்து இல்லே?” அம்மா சாப்பாட்டில் கவனமாயிருந்தாலும் மகிழ்ச்சி பொங்கச் சொன்னாள்.





• விளக்கேற்றி...



• சிவசங்கரி

• சுகி. சிவம்

“சுகி. சிவம் வக்கீலுக்குப் படிச்சவர்னு எனக்கு இன்னிக்குத்தான் தெரியும். ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் முரளி, வரவேற்புரையில் வக்கீலுக்குப் படிச்ச சுகி. சிவம், ‘மைலார்டு’ன்னு கோர்ட்ல நீதிபதியை அழைக்காம, உலகத்துக்கே லார்டு ஆன ஆண்டவனைப் பற்றி சொற்பொழிவு நிகழ்த்திக்கிட்டிருக்காருன்னு



தாழ்ப்பாள் ரகசியம்!



• சுவீட்டுப் பரிசு...

ஒரு போடு போட்டார் பார்த்தியா...?"

"சுகி. சிவமும்தான் கலக்கிட்டார். எல்லார் வீட்லயும் நடக்கற விஷயங்களை அழுத்தம் திருத்தமா தெளிவா அவர் சொன்னது அசத்தல்" என்ற சுமதி "அம்மா எனக்குக் கொஞ்சம் குருமா" என்றாள். குருமாவை அவளுக்கு வைத்துவிட்டு, "அதுவும், ஜாலியா வெளியில போகலாம்னு அப்பா சொன்னதும் குடும்பத்துல ஏற்படுகிற உற்சாகத்தில் ஆரம்பிச்ச நிஜமான 'ஜாலி' எதுன்னு அவர் சொன்னது ரொம்ப யதார்த்தம்" என்றாள் அம்மா.

"வீட்டுக்குள்ளேயே சந்தோஷத்தைத் தேடாம வெளியில போனாதான் 'ஜாலி'ன்னு நினைக்கறதுக்குப் பழகிட்டோம்... இதை அவர் அப்படியே மோனோ ஆக்டிங்பண்ணி ஒரு மேடை நாடகம் மாதிரி அப்பா குரல் அம்மா டயலாக்னு மாத்தி மாத்திப் பேசி..."

"சொல்லாதே சங்கர்! நினைச்சாலே சிரிப்பு சிரிப்பா வருது..." என்று சுமதி சிரிக்க ஆரம்பிக்க, அப்பா நீதிபதி அசோக் குமார் ரேஞ்சுக்கு ஒரு கமெண்ட் அடித்தார் :

"பார்த்தியா! வழக்கமா, சண்டைக் கோழிகளா இருக்கற உன்னையும் சங்கரையும் ஒரே விஷயத்துக்குச் சிரிக்க வைச்சுட்டார் சுகி. சிவம் - ஓங்குக குடும்ப ஒற்றுமை!"

"போன வருஷம் நம்ம கல்யாண நாள் அன்னிக்கு என்ன ஆச்சு! எங்க அவுட்டிங் போலாம்ன்றதுக்கே சண்டை...!" சமயம் பார்த்து இடித்தாள் அம்மா.

"அந்தச் சண்டையைப் பற்றி இப்ப எதுக்கு...?

ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் இணைந்து வழங்கிய நிகழ்ச்சி

கூடு, கூண்டு இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை முரளி எத்தனை அழகா எடுத்துச் சொன்னார் கவனிச்சீங்களா! கூடு மழைக்குப் பாதுகாப்பு. வெயிலுக்கு நிழல், பனிக்குப் போர்வை; ஆனால் இப்படி இருக்கிற எல்லாமே கூடு ஆயிடாது. இரும்புக் கூண்டுல எல்லாம் கிடைச்சாலும் அது கூண்டு-சிறை! அங்கே அன்பு மிஸ்ஸிங்... இப்போல்லாம் கூண்டுகள்தான் கூடுகளைவிட அதிகம்.."

அப்பா கொஞ்சம் சீரியஸாகவே அசை போட ஆரம்பிக்க, அம்மாவும் தன் பங்குக்கு ஒத்துப் பாடினாள். "காரணம், அவசர யுகமாயிடுச்சுன்றதுதானேங்க..."

"டேய்! சங்கர்! இந்த வீடு ஜெயில் மாதிரி ஆயிட்டது. எதற்கும் சுதந்திரம் கிடையாதுன்னு அடிக்கடிக் கோபிச்சிப்பியே! வீட்டுக்கும், ஜெயிலுக்கும் என்ன வித்தியாசம்னு சுகி. சிவம் சொன்னதைக் குறிச்சு வைச்சுக்கோ..."

- சுமதி கொஞ்சம் சூழ்நிலையை இலேசாக்க முயன்றாள். "நாளைக்கு, காலேஜ்ல போய் இந்தக் கேள்வியை என் பிரண்ட்ஸ்கிட்டே கேட்டு, 'தாழ்ப்பாள் உள்ளே இருந்தால் வீடு; வெளியில் இருந்தால் ஜெயில்'னு அவர் கொடுத்த விளக்கத்தையும் எடுத்து விடப் போறேன்!"

"அப்பா! எனக்கு ஒரு உண்மை தெரியணும். இன்னிக்கு, மீட்டிங்க்ல, "கம்ப ராமாயணத்தில் மிகப் பிரபலமான 'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' வரிகளைச் சொல்லி விட்டு, தமிழ்நாட்டில் எல்லாருக்கும் இந்த வரி மனப்பாடம். ஆனால் அதற்கு முந்தின வரியை யாருமே கண்டு கொள்றதில்லைன்னு சொன்னாரில்லே... ராமனும், சீதையும் விரல் நகங்களால் ஒருத்தரையொருத்தர் தொடறதுக்கு முந்தியே உணர்வுகளால் ஒன்றிவிட்டார்கள்னு கம்பர் சொல்லிருக்காராம். இப்போ கல்யாணமாகி கால் செஞ்சுரி போட்ட உங்கள் இரண்டு பேரிடம் அந்த அண்டர்ஸ்டாண்டிங் எவ்வளவு தூரத்துக்கு இருக்கு? எனக்கு இந்த உண்மை தெரிஞ்சாகணும்...?" கண்களை உருட்டினான் சங்கர்.

"உங்க அப்பாவுக்கு முணுக்குன்னா செம கோபம் வந்திடும்னு நான் நன்னா புரிஞ்சி வைச்சிருக்கேன்" என்று அம்மா சொல்ல, "என்னை எப்பவும் ஏதாவது குறை சொல்லாவிட்டால், இவளுக்கு ராத்திரி தூக்கம் வராதுன்னு நானும் புரிஞ்சி வெச்சிருக்கேனே!" என்று பதிலடி கொடுத்தார் அப்பா.

"புரிந்து கொள்ளுதல் மட்டுமில்லே; புரிய வைத்தலும் முக்கியம்ன்னு அவர் சொன்னதை மறந்துடாதீங்க" - சுமதி ஞாபகப் படுத்தினாள்.

"திருப்பாவையில வர்ற 'கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா'வுக்கு சுகி. சிவம் தந்த விளக்கம் ரொம்ப அற்புதம். கோவிந்தன் எதிரிகளை ஜெயித்தாலும், வேண்டுபவரிடத்திலே தோற்றுப் போகிறவன்'ன்னு சொன்னது எத்தனை அழகான உண்மை! அதை கணவன் - மனைவி உறவுக்கு



ஒப்பிட்டுச் சொன்னாரே! ஈகோ உள்ள கணவனும், மனைவியும் நீயா? நானான்னு நடந்துகிட்டா எல்லா நாட்களும் பிரச்னை தான். விளைவு? அந்தக் குடும்பமே வீணாகிறது' என்று அவர் சொன்னது அட்சர லட்சம் பெறும்." அப்பா சர்டிபிகேட் தர, "ஒரு வீட்டில் பெண்ணே எப்போதும் ஜெயிக்கிறாள் என்றால், அங்கே ஒரு பிடாரி ஜெயிக்கிறாள் என்று அர்த்தம். எப்போதும் ஆண் ஜெயித்தால், மிருகம் ஜெயிக்கிறது என்று அர்த்தம்!" சுகி சிவம் போலவே குரல் மாற்றி சங்கர் பேச, சுமதி இடது கையால் மேஜையில் தட்டித் தட்டிச் சிரிக்க... "சரி சரி அப்பப்போ சாப்பாடும் உள்ளே இறங்கட்டும்" - ஞாபகப்படுத்தினாள் அம்மா!

"கணவன், மனைவிக்கிடையே இருதரப்பு உறவினர்களும் மூக்கை நுழைக்கறதால வரும் பிரச்னைகளை அழகா அலசிட்டார்.

'உறவுக்காரர்கள் நடந்துக்கற விதத்துக்குக் கணவனோ, மனைவியோ எப்படிப் பொறுப்பாக முடியும்?'னு ஒரு பாயின்ட் சொன்னார் இல்லே... உண்மையில அந்த ஆங்கிள்ல இதுவரை நான் யோசிச்சதே யில்லே..."

"உணர்ச்சிவசப்படுற ஒரு ஆணைக்கூட நெறிப்படுத்தக் கூடிய வலிமை ஒரு பெண்ணுக்கு உண்டுங்கறதை உதாரணங்களோட சொல்லி, கிளைமேக்ஸா அவர் வைச்ச கருத்து ஞாபகமிருக்கா? எதிர்ப்பு உணர்ச்சி மூலம் ஒரு போதும் எதையும் சாதிக்க முடியாது. அளவில்லாத அன்பின் மூலமே எதுவும் சாத்தியம்..."

''அதுவும் எதிர்பார்ப்பு ஏதுமில்லாத அன்புன்னு சொன்னது கிளாஸிகல் டச்! - கொஞ்சம் எமோஷனலாவே ஆயிட்டேன் அதைக்கேட்டு..." அப்பா, அம்மா மாறி மாறிப் பொழிந்தார்கள்.

"சிவசங்கரிகூட எமோஷன்ஸை ரொம்ப அழகா ரைட்டிங்ல கொண்டு வர்ற எழுத்தாளர். ஆனா பேசும்போது எப்படி எல்லா உணர்ச்சியையும் தர்க்க ரீதியா அணுகறாங்க பார்த்தியா...'' - சுமதி ஆச்சர்யத்துடன் கேட்டு விட்டு கை கழுவ எழுந்தாள்.


• முரளி


• வீ. ஜோதிநிலா

''அன்பு, உறவு, விட்டுக் கொடுக்கறது, அனுசரித்துப் போறது, அரவணைத்துச் செல்வது, இதம், கண்டிப்பு, சுமையைப் பகிர்ந்து கொள்வது என்று அத்தனையும் ஒருவருக்குக் கற்றுக் கொடுப்பது குடும்பம்தான்னு சொல்லிட்டு, அந்த குடும்பம் என்கிற கான்ஸெப்ட்டே இன்றைய ஒரு குடும்பம், ஒரு குழந்தை கோஷத்தில் அடிபட்டுப் போய் விட்டதையும் சொன்னாங்க. அடுத்த தலைமுறைக்குச் சித்தி சித்தப்பா, அத்தை, மாமா உறவெல்லாம் தெரியாமலே போயிடும்னு எல்லாம் விவரமாச் சொன்னாலும் எமோஷனலாகிப் புலம்பாம இந்த மாற்றங்கள்லாம் வாழ்க்கையின் முக்கியமான பகுதின்னு பாஸிடிவ்வா எடுத்துக் காட்டினது சூப்பர்."

''அவங்க சொன்ன இன்னொரு பாயிண்ட்டும் ரொம்ப சுவாரசியமா இருந்தது. உலக சரித்திரத்துல தொழில் புரட்சி நிகழ்ந்த பிறகுதான் குடும்ப அமைப்புல மாறுதல்கள் வர ஆரம்பிச்சுது. அதுவும், கடந்த அரை நூற்றாண்டு காலமாகத்தான் ஏகப்பட்ட மாறுதல்கள். இதைச் சீரழிவுன்னு சொல்ல முடியாது. ஆல்வின் டாப்ளர் என்ற மேலை நாட்டு அறிஞர் சொன்ன மாதிரி, அந்தக் காலத்துல சமூகத்தோட போராடி, காயப்பட்டு, நைந்து போனவர்கள் ஆறுதல் தேடி குடும்பம் என்கிற அமைப்புக்கு வந்தாங்க. ஆனால் இன்னைக்கு அந்தக் குடும்பம் என்கிற அமைப்பே நைந்து போயிடுச்சு..."

"கூட்டுக் குடும்பம் பத்தி சிவசங்கரி பேசினப்போ எங்க மன்னார்குடி டேஸ் ஞாபகம் வந்துடுச்சு..." என்றாள் அம்மா. "ஒரு நல்லது நடந்தா வேற சில நல்ல விஷயங்கள் அடி வாங்கும்; இல்லேன்னா கலைஞ்சு போகும் போலிருக்கு... படிப்பறிவு காரணமா வேலை தேடி வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் போக ஆரம்பிச்சு பெண்கள் படிச்சு, வேலைக்குப் போக ஆரம்பிச்சு, குடும்பச் சுமையை முழுமையாகச் சுமக்க முடியாமல் போறது, கிராமத்து வீடுகள் போல இல்லாமல், நகர்ப்புறத்து சின்னஞ்சிறு வீடுகள், அபார்ட்மெண்ட்களில் இடப் பற்றாக்குறை, இப்படிப் பல்வேறு காரணங்களுக்காக, மரத்தின் காய்ந்த கிளைகளை வெட்டற மாதிரி கூட்டுக் குடும்பங்கள் சிறுத்துப் போயாச்சு..." என்ற அம்மாவை இடைமறித்தார் அப்பா. "குடும்பம் சிறுத்துப் போனா பரவாயில்லே; மனம் சிறுத்துப் போகறது தானே ஆபத்து... வேலை, மற்ற பொறுப்புகளைக் காரணம் காட்டி, பெற்றோர்களைக் கூட சுமைன்னு நினைச்சு ஒதுக்கித் தள்ளும் மனப்பான்மை வந்துருச்சு... இது வேரில் பிடித்துள்ள விஷப்பூச்சி. மரத்தையே நாளடைவில் அழிச்சுடும்னு ரொம்ப டைம்லியா எச்சரிக்கை பண்ணிட்டாங்கப்பா."

"ஆனால் இப்படி ஒதுக்கி வைக்கப்படற பெற்றோர் பேரன், பேத்திகளைப் பார்த்துக்க மட்டும் தேவைப்படறாங்க!'' - அம்மா கோபாவேசப்பட, சுமதி "பாயிண்ட் நோடட் அம்மா! சங்கரும் நானும் ஜாக்கிரதையா இருப்போம்!" என்று ஒரு போடு போடவும் குடும்பம் சிரிப்பில் மூழ்கி மகிழ்ந்தது.

கையைத் துடைத்தபடி ஹாலில் வந்து

உட்கார, சங்கர் டீவியை ஆன் பண்ண, அதை 'மியூட்'டில் போட்டுவிட்டு அப்பா பேசிக் கொண்டிருந்தார்.

"சாதாரணமா இந்த மாதிரி ப்ரோக்ராம்ல கேள்வி - பதில் நேரம் போர் அடிக்கும்... ஆனா இவங்க அதையும் விடாம இன்ட்ரஸ்ட்டிங்கா பண்ணிடறாங்க."

"எத்தனை பேருக்கு, என்னென்ன விதமான சந்தேகங்கள், எண்ணங்கள்! இன்னிக்கிருக்கற வேகமான வாழ்க்கையில் பணம் சம்பாதிக்கறது முக்கியமாயிருந்து ஒருவரையொருவர் புரிந்து கொள்ள அவகாசமில்லை'ன்னு அப்பா... நீங்க அடிக்கடிச் சொல்லுவீங்க, அதையே ஒரு லேடி கேள்வியா கேட்டாங்களே!'

திடீர்ப் பரிசுப் போட்டி-16



கட்டுரையைப் படித்தீர்களா? ஓகே 'அன்பெனும் கூட்டினிலே...' என்று முடியுமாறு நான்கு வரி கவிதை ஒன்றை எழுதி அனுப்புங்கள். 'நச்' சென்ற கவிதைக்கு ரூ.100 பரிசு. 29.7.01க்குள் எங்களுக்கு வந்து சேரவேண்டும். ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி.

"அதுக்கு சிவசங்கரியின் பதிலில் யதார்த்தம் இருந்ததை கவனிச்சீங்களா? போட்டிகள் நிறைஞ்ச உலகில் நாம இருக்கோம். இந்தத் தலைமுறைக்கு எல்லாவற்றிலும் எக்ஸ்போஷர் அதிகம். நிறைய விஷயம் தெரிஞ்சிருக்கு. நிறைய ஆசை இருக்கு. லட்சியம் இருக்கு. நிறைய பணம் சம்பாதிக்க வேண்டியது அவசியம்னு நினைக்கிறாங்க. ஆனால் பணத்தால் சௌகரியங்களை வாங்கலாமேயொழிய, சந்தோஷத்தை வாங்கிவிட முடியாது. இது புரிஞ்சா லைஃபை பாலன்ஸ் பண்ணலாம். ரொம்ப அழகான சிந்தனை." - அம்மா ஏறத்தாழ வார்த்தை மாறாமல் சிவசங்கரியின் பதிலை மறு ஒலிபரப்பினாள்.

"அதைப் புரிய வைக்க சுவாமி சுத்தானந்தா பேசினதைச் சொன்னாங்களே. படிக்கணும்னா எங்கே போகணும்? பள்ளிக்கூடத்துக்கு. சாமான்கள் வேணும்னா? கடைக்கு கேஷ் வேணும்னா பணத்தைப் போட்டு வைத்திருக்கிற பாங்க்குக்கு. வேலை வேணும்னு ஃபாக்டரிக்கு, ஆபீசுக்கு. சந்தோஷம் வேணும்னா? எங்கேயும் போய்ப் பிரயோஜனமில்லை. அதை உங்களுக்குள்ளேயே தேடினால்தான் கிடைக்கும்."

"சில சமயம் பெரிய பிரச்னைகள் குடும்ப வாழ்க்கைல ஏற்படுது... கணவன் குற்றம் செய்யறான். மனைவி பொறுத்துக்கறதா... இல்லே விட்டுப் பிரியறதா... இது ரியலி இன்ட்ரஸ்டிங் கேள்வி... சுகி சிவம் எத்தனை தெளிவா பதில் சொன்னார். தவறு செஞ்சவுடனே விலகிப் போய்விட இது ஒன்றும் அரசியல் கூட்டணி இல்லை. தவறு செய்தால் முதலில் அவனுக்கு, தவறைத் தவறு என்று புரிய வைக்க வேண்டும். அதன்பிறகு திருத்தப் பார்க்க வேண்டும். அது பலனளிக்கும். சட்டத்தின் கரங்களால் திருத்த முடியாத பலர், தம் மனைவியின் அரவணைப்பினால் திருந்தியது உண்டு. கடைசி பட்சமாகத்தான் உறவைத் துண்டிக்க முன்வர வேண்டும்."


சங்கர், சுகி. சிவம் போலவே குரல் மாற்றிப் பேச, மற்ற மூவரும் கைதட்டித் தீர்த்தனர்.

"பக்கத்து வீட்டு மாமா, மாமியோட பிரச்னையைக்கூட ஒருத்தர் கேள்வியா கேட்டார். பார்த்தியா... அன்பெனும் கூட்டிலிருந்து, குஞ்சுகளை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்துவிட்டு, காலிக் கூட்டில் கிடந்து அல்லாடும் பெற்றோர்களுக்கு என்ன அறிவுரை?..."

"ஆமாம்! அதுக்கு சிவசங்கரி சொன்ன பதில் ஞாபகமிருக்கா? முதுமைன்றது விபத்து இல்லே... ஒவ்வொரு நாளும் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிற ஒரு விஷயம். அதற்காக நம்மை உடல் ரீதியிலும், மனரீதியிலும் நாம் தயார்ப்படுத்திக்கணும். பொதுவா நாமே ஆசைப்பட்டு தானே பிள்ளைகளை அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கிறோம். அங்கே அவங்க சௌக்கியமா வாழறதைப் பெருமையோட சொல்லிக்கறோம். 'குறையொன்றுமில்லை மறை மூர்த்தி கண்ணா'ன்னு சொல்லி மனத்தைத் தேற்றிக் கொள்ள வேண்டியதுதான்... - "அம்மா நான் நாளைக்கு அமெரிக்கா போனா இதை ஞாபகம் வைச்சுப்பியா இல்லை ஏர்போர்ட்ல பிழியப் பிழிய அழுவியா..?" என்று சங்கர் கிண்டலடிக்க, அம்மா அவன் காதைத் திருகிப் பிடித்துக் கொண்டிருந்ததைக் கண்டு சுமதியும் அப்பாவும் சிரித்துக் கொண்டார்கள்.

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **யோகா**





2001 ஜூலை 22
விஷு ஆடி 6
மலர் : 59
இதழ் : 51

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ஜெ. படைத்த 'ஏமாற்று இலக்கியம்!'

கேள்வியும் நானே பதிலும் நானே என்ற ரீதியில் ஜெயலலிதா அளித்துள்ள அறிக்கை, பரபரப்பு அரசியலின் பறைசாற்றல் தொழில்நுட்பமன்றி வேறெதுவுமில்லை! துணைக் கேள்விகளுக்கு இடமளிக்காத ஒரு சுயபேட்டியைக் கொண்டு ஊர் வாயை அடைக்கலாம் என்ற நோக்கில் கவனமாகத் தயாரிக்கப்பட்டு, மிகச் சாமர்த்தியமாக வெளியிடப்பட்டுள்ளது அவ்வறிக்கை.

கருணாநிதி கைது விவகாரத்தைத் தொடர்ந்து மத்திய அரசு மட்டும் இன்னும் உறுதியுடனும் வேகமாகவும் செயல்பட்டிருந்தால் இப்பேர்ப்பட்ட 'ஏமாற்று இலக்கியத்'தைப் படிக்கும் துர்பாக்கியம் தமிழக மக்களுக்கு நேர்ந்திருக்காது.

'நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன்; நீ அழுகிற மாதிரி அழு' என்பது மாதிரி மத்திய அரசு, தமிழக அரசின் பேரில் ஒரு உப்பு பெறாத கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தது. தவறிழைத்த காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது நீங்கலாக அதில் எந்தவிதமான உத்தரவும் இல்லை. அந்த நடவடிக்கைக்கும் காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

தமிழக ஆளுனரை நீக்கும் அளவுக்குத் தவறு நேர்ந்திருக்கிறது எனில் அது சாமானிய தவறு அல்ல. அந்தத் தவறைத் தட்டிக் கேட்கவும் தவறு இழைக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவும் தவறு இழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்கவும் உடனடியாக என்ன செய்ய



வேண்டும் என்பதை மத்திய அரசே நிர்ணயித்துச் செயல்பட்டிருக்க வேண்டும். மாறாக, ஃபாத்திமாபீவியின் இடத்தில் ஒரு 'ஆக்டிங்' ஆளுனரை அனுப்பி வைத்ததோடு நிறுத்திக் கொண்டுவிட்டது மத்திய அரசு.


வாஜ்பாய் அமைச்சரவையின் கழுநீர்க் கண்டனம் ஜெயலலிதாவுக்கு ரொம்ப வசதியாய் போய்விட்டது. தம் பங்குக்கு அதில் மேலும் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி அடியோடு சாரமிழக்கச் செய்துவிட்டார். மேலும் அவகாசம் பெறும்பொருட்டு, நீதிபதி ராமன் தலைமையில் கண் துடைப்புக்காக ஒரு கமிஷன் நிறுவி, இரு மத்திய அமைச்சர்கள் கைது செய்யப்பட்டது தவறல்ல என்று நிரூபிப்பதே தமது முக்கிய நோக்கமாக இருக்கும் என்றும் அறிவித்துவிட்டார்.

கமிஷன் நிறுவிய பிறகு ஜெயலலிதா தமது செயல்பாடுகள் அனைத்தையும் நியாயப்படுத்திப் பேசுவதும் எழுதுவதும் அறிக்கை விடுவதும் குற்றமாகும். நீதிமன்ற வழக்குகள் வெளியே அலசப்படக் கூடாது என்பது மரபு. ஆனால் ஜெயலலிதா திரும்பத் திரும்ப தீர்ப்புகளே வழங்கி வருகிறார், தமது அறிக்கைகள் மூலம்! தாம் தர்ம நியாயமாக நடந்து கொண்டிருப்பதாகத் தமது கேள்வி - பதிலில் சத்தியம் செய்கிற ஜெ. எதற்காக நீதிபதி ராமன் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்க வேண்டும்? கமிஷனுக்கோ விசாரணைக்கோ அவசியமேயில்லை என்று மத்திய அரசுக்கு விளக்கமளித்துவிட்டு, அராஜகம் நிகழ்த்திய காவல்துறைக்குப் பதவியுயர்வு கொடுத்துவிட்டுப் போயிருக்கலாம்!

ஜெ. செய்திருப்பதுபோல் ஒவ்வொரு சட்டவிளக்கமாக எடுத்தாண்டு காவல்துறையும் அரசும் தங்கள் செய்கைகளை நியாயப்படுத்துவது கஷ்டமேயில்லை. அதற்காகவே நிபுணர்களான வழக்கறிஞர்களின் உதவியை நாடி வெளுத்து வாங்கலாம்.

சட்டம், வாதங்களுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கும்; ஆனால் நீதியும் நியாயமும் தர்மமும் நிரந்தரமானவை. அவற்றை நிலைநாட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை, வெறும் வார்த்தை விளையாட்டாக்கி, அதில் ஓட்டைகளைக் கண்டுபிடித்துத் தப்பிப்பதும், நீதி வழங்குவதைத் தாமதப்படுத்துவதும் நம் நாட்டில் நடைமுறைகளாகிவிட்டன.

இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை பெற்ற ஒருவர், தமிழக முதல்வராக இன்று



இருக்க முடிகிறதென்றால், சட்டம் சௌகரியத்துக்கேற்ப வளைக்கப்பட்டிருக்கிறது என்பதும் சோம்பேறித்தனமான அமைப்பு, நீதியைத் தாமதப்படுத்துகிறது என்பதும்தான் காரணம்.

ஜூன் 29 அன்று இரவு நடந்தவற்றை எக்காரணம் கொண்டும் நியாயம் என்று கூற முடியாது. கைது செய்யப்பட்டவர்கள் குற்றமே இழைத்திருந்தால்கூட, அதற்கான ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே கைது நடந்திருக்க வேண்டும். அவ்வாறு எதுவும் செய்யப்படவில்லை. லஞ்ச - ஊழல் குற்றமே நடக்கவில்லை என்று விசாரணை அதிகாரியின் வாக்குமூலமாகவே நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாறன் காவல்துறையினரைத் தாக்கினாரா? காவல் துறையினர் மாறனைத் தாக்கினரா? டி.ஆர். பாலு நாடகமாடினாரா? பூட்டு உடைக்கப்பட்டதா இல்லையா? கைதாவதற்கு முன்பிருந்தே கருணாநிதிக்குத் தோள்வலி இருந்ததா இல்லையா? போன்ற கேள்விகளெல்லாம் முக்கிய பிரச்னையிலிருந்து கவனத்தைத் திசை திருப்புகின்றன.

ஆதாரமின்றிக் கைது செய்யப்பட்டதுதான் அடிப்படை அத்து மீறல். இதனை மத்திய அரசு தட்டிக் கேட்கவில்லை என்பதுதான் மிகப் பெரிய தவறு. சட்டரீதியாகவும் தார்மிக ரீதியாகவும் தவறான இந்தக் காரியத்துக்குப் பொறுப்பேற்க வேண்டிய தமிழக முதல்வரைப் பெயரிட்டுக்கூட குறிப்பிட மறந்தது மத்திய அரசின் அறிக்கை.

இன்று தேசிய மனித உரிமை கமிஷன் ஜெயலலிதாவை விளக்கம் கேட்கிறது. 'பதில் கூற இரண்டு வாரம் அவகாசம் வேண்டும்' என்று சொல்கிற அளவுக்குத் தமிழக முதல்வர் இந்தப் பிரச்னையை இலேசாகக் கருதுகிறார்.

மத்திய அரசு மட்டும் தமிழக சட்டசபையை ஆறு மாதங்களுக்குச் செயலிழக்கச் செய்து கவர்னர் ஆட்சிக்கு வகை செய்திருந்தால், நேர்மையான விசாரணைக்கு இடமிருந்திருக்கும்.

இப்போதோ, தார்மிக உரிமையற்ற ஒரு முதல்வர், தமது தவறுகளை நியாயப்படுத்த இடமளித்ததுடன், தமது அரசியல் அதிகார மையத்தைப் பலப்படுத்திக் கொள்ளவும் கைகொடுத்து உதவியுள்ளது மத்திய அரசு. ❍



> “போலீஸ் தரப்பு சொல்வதையெல்லாம் மறு கேள்வி இல்லாமல் ஒப்புக் கொள்வதும் மரபாகவே இருக்கிறது.”

'பகீர்' ஏன்?!

எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களுக்குக் கிலி பிடிக்க வைக்கும் 'பகீர்' கிழமையாக வெள்ளிக் கிழமைகள் மாறி விட்டன! வெள்ளிக் கிழமை இரவு, அவர்கள் கைது செய்யப்படுவதும், சனி ஞாயிறு கோர்ட் விடுமுறை என்பதால் ஜெயிலில் அடைக்கப்படுவதும் ஒரு மரபு மாதிரியே ஆகி விட்டது. நள்ளிரவு கைது செய்து சனிக்கிழமை நீதிபதியிடம் ஆஜர்படுத்தும்போதே பெயிலும் வழங்கினாலென்ன? இது பற்றிச் சட்டம் என்ன சொல்கிறது? என்பதை வழக்கறிஞர் அருள்மொழியிடம் கேட்டோம் :

'வெள்ளிக் கிழமை கைது செய்தால் அவர்களை உடனடியாக பெயிலில் விடக்கூடாது என்று எந்தச் சட்டமும் இல்லை. விடுமுறை நாட்களிலும், கிரிமினல் வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கு, நீதிபதிகள் வீட்டில் விசாரித்து 'பெயில்' வழங்கியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக 'தினகரன்' நாளிதழின் செய்தி ஆசிரியர் முத்துப் பாண்டியன் கைது செய்யப்பட்டபோது, மறைந்த நீதிபதி எம். சீனிவாசன் வீட்டில் பெயில் வழங்கியிருக்கிறார்.

ரிமாண்ட் ஆர்டர் போட்ட உடனேயே பெயில் பெட்டிஷனை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று எந்தத் தடையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை அதிகமாக கிரிமினல் வழக்குகளில் தேர்ச்சி பெற்ற வழக்கறிஞர்களுக்குத் தெரிந்திருந்தால் சொல்லலாம்.

பெயில் மனுவை உடனடியாக விசாரிக்காமல், அதற்குப் பதில் சொல்ல பப்ளிக் ப்ராசிக்யூட்டருக்கு அவகாசம் கொடுப்பது மரபு என்பது ஒருபுறம்.

இன்னொருபுறம் போலீஸ் தரப்பு சொல்வதையெல்லாம் மறு கேள்வி இல்லாமல் ஒப்புக் கொள்வதும் மரபாகவே இருக்கிறது.

அரசியல் தலைவராக இருந்தாலும் சாதாரண குடிமகனாக இருந்தாலும் கைது செய்ய வரும்போது வழக்கின் அடிப்படை, பலமாக இருக்கிறதா என்பதையும், அவருக்குப் பெயில் வழங்க வேண்டுமா? கூடாதா? என்பதையும் உடனடியாகத் தீர்மானித்தால், இந்த வெள்ளிக் கிழமை கைதுகள் குறைய வாய்ப்புண்டு.


கலைஞர் கைது செய்யப்பட்ட வழக்கில் கூட, நீதிபதி அசோக்குமார் நீதிமன்றத்தில் எழுப்பிய கேள்விகள் பாராட்டத்தக்கவை. ஆனால், கலைஞர் தம் முன்னே ஆஜர்படுத்தப்பட்ட உடனேயே கூட நீதிபதி இக் கேள்விகளைக் கேட்டிருக்க முடியும். அதற்கு எந்தச் சட்டத் தடையும் இல்லை.

பெயில் விண்ணப்பத்துடன் தம் முன் நிறுத்தப்படும் அக்யூஸ்டுகளை அவர்கள் யாராயிருந்தாலும் சரி – அடிப்படை உரிமைகள் உடைய மனிதர்களாக நீதிமன்றங்கள் கருத வேண்டும். அவர்களை அக்கறையுடன் விசாரிக்க வேண்டும். அப்படிச் செய்தால் வெள்ளிக்கிழமை கைதுகள் குறையும். சட்டத்தை மாற்ற வேண்டிய அவசியமெல்லாம் கிடையாது.

— ஏக்ஜி



படம் : ஜரிஸ்



திருப்பதி சேவைக்கு ரெடியா?

ஆண்டுதோறும், மாதந்தோறும் அல்லது மனத்தில் தோன்றுகிறபோதெல்லாம் திருமலை திருப்பதிக்குப் போவோம் என்று சொல்கிற திருமாலின் தீவிர பக்தர்களுக்கு, 'ஸ்ரீவாரிசேவா' வடிவில் ஆன்மிக அதிர்ஷ்டம் வீடு தேடி வந்திருக்கிறது. ஸ்ரீநிவாசபெருமாளைத் தரிசிக்க, திருப்பதி நோக்கிப் படையெடுக்கும் பக்தர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகிக் கொண்டே இருப்பதை மனத்தில் கொண்டு, இந்த சேவைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது தேவஸ்தான நிர்வாகம்.

ஸ்ரீவாரி சேவகராக ஒருவார காலம், திருப்பதி திருத்தலத்தில் தங்கி அங்கு ஒழுங்குப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு பெருமாள் சேவை செய்யலாம் என்பதுதான் இந்தத் திட்டத்தின் சாராம்சம்!

"அந்த ஏழு நாட்களில் கிடைத்த இறையருள், கடவுளுடன் நேரடித் தொடர்பு கொண்ட திருப்தியை ஏற்படுத்தியது" என்கிறார்கள் சென்னையிலிருந்து ஸ்ரீவாரி சேவகராக திருப்பதி சென்று வந்த பக்தர்கள். ஏழாவது நாள் இறைவனை மிக அருகாமையில் தரிசிக்கும் வாய்ப்பையும் ஸ்ரீவாரி சேவா பக்தர்களுக்கு இலவசமாக ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவார காலத்திற்கு உண்டான உணவு, மற்றும் தங்குமிடம் கூட இலவசம். அங்கே கூடும் பக்தர்களுக்கு நீங்கள் ஸ்ரீவாரிசேவா தொண்டர் என்பது தெரிய, மஞ்சள் நிற 'ஸ்கார்ஃப்' தரப்படும். அதைக் கழுத்தில் கட்டிக் கொண்டு உங்களுக்குப் பிடித்தமான ஒழுங்குப் பணியை நீங்களே தேர்வு செய்துகொள்ள வேண்டியதுதான். அன்னதானம், பக்தர்களின் வரிசையை ஒழுங்குப்படுத்துதல், கல்யாண வைபவம், பாதயாத்திரிகர்களுக்கு உதவி, பாதுகாப்புப் பெட்டக அறை, பார்க்கிங், முடிகாணிக்கை செலுத்தும் இடம் என்று அங்கே சேவை செய்ய, எதையும் நீங்கள் தெரிவு செய்து கொள்ளலாம்.

ஸ்ரீவாரி சேவகராக திருப்பதி சென்று இறைபணி செய்ய விரும்புபவர்கள் முதலில் முன் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம். சென்னையில் இருப்பவர்கள் வெங்கட் நாராயணா சாலையில் உள்ள திருப்பதி சென்டரில் பதிவு செய்து கொள்ளலாம். பிறகு அழைப்பு வீடு தேடி வரும். திருப்பதி செல்பவர்கள் அங்கேயே கூட பதிவு செய்து கொண்டு அப்படியே ஸ்ரீவாரி சேவகராக ஒரு வார காலம் சேவை செய்துவிட்டு வரலாம். ஆண், பெண், வயது என்று எந்தப்பாகுபாடும் இல்லை. தனியொருவராகவோ, குழுவாகவோ பதிவு செய்து கொள்ளலாம். சேவை செய்ய விரும்பும் முதியோர் ஒரு இளைஞரையும் உடன் அழைத்துச் செல்வதே உத்தமம்.

— ஸ்ரீ சக்கரம்

● இரா. ஆதிநாராயணன், தஞ்சை –9.

? தேர்தலின் போது ஜெயலலிதாவின் வேட்பு மனுக்களை நிராகரித்த நான்கு அதிகாரிகளும் மாற்றப் பட்டுள்ளார்களே– இதைப் பற்றித் தராசுவின் கருத்து....?

!Routine transfer என்ற அரசு அறிவிப்பை 'vengeance is mine' என்று திருத்தி வாசிக்கவும்.

● பஞ்சவண்ணமகன், கருப்பம்புலம்.

? சென்னை மாநகராட்சியைக் கலைக்கப்போறாங்களாமே...?

!அடுத்த நேர்த்திக்கடன் அதற்காகத்தான். ஆயிரம் மீட்டர் தங்க ஜரிகை ரிப்பனை ஏதாவது அம்மன் கோயி

சென்னை மாநகராட்சியைச்

லுக்குக் காணிக்கை தருவதாக வேண்டிக் கொண்டிருப் பார்கள்.

எஸ்.ஈ. தாஸ், சென்னை – 12.

? அன்னை தெரசாவாக நடிப்பதற்கு ஆங்கில திரைப்பட (டைட்டானிக்) கதாநாயகியைத் தேர்ந்தெடுத்திருப்பது பொறுத்தமாகவா இருக்கிறது?

! ஔவையாராக வாலிபத்தில் டி.கே. சண்முகம் நடிக்கக் கண்டு பரவசப்பட்டவர்கள் இதையும் தயங்காது வரவேற்பார்கள். ஆனால் ஔவையார் தமிழகத்தில் பெற்ற பெருவெற்றியை, தெரஸா உலக அளவில் சாதிப்பது நடிகையையும் டைரக்டரையும் பொருத்த விஷயம்.

● சு. கந்தையா, நாகர்கோயில்.

? ஜெயலலிதா ஆட்சி புரியும் முறை குறித்து...?

! உங்கள் கேள்வியில் 'ஆட்சி' 'முறை' என்றெல்லாம் சில கற்பனை வார்த்தைகள் இடம் பெற்றிருப்பதை ரசிக்கிறோம்.

● என்.கே. ஈச்வரி, பெங்களூர்–40.

? கல்கி வைர விழா வாசகர் திட்டத்தில், என்போன்ற 71 வயதான, நீண்ட நாள் கல்கி வாசகர்களுக்கு என்ன விதமான பரிசுத் திட்டங்கள் வைத்துள்ளீர்கள்?

! இதயத்தால் இளைஞரான நீங்களும் உங்களைப் போன்ற கல்கி அன்பர்களும் எல்லாப் போட்டிகளிலும் நிச்சயம் பங்கு பெறுவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியாதா? அதனால் வயதானவர்களுக்கு என்று தனிப் போட்டி கிடையாது.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
எம். செல்வராஜா
பட்டுக்கோட்டை
(முழு விலாசம் தேவை)

* ரூ. 25 பரிசு பெறுபவர்:
டாக்டர் எஸ். ஆர். கௌசிக்
B-106, K.T., அபார்ட்மெண்ட்ஸ்,
எல்.ஐ.சி. காலனி,
நாலாவது கிராஸ்,
பெங்களூர் – 560 011.

● ஜி.ஜி. கிருஷ்ணன்,
விசலூர்.

? 'ஜனாதிபதி, பிரதமரைக் கூட கைது செய்யத் தயங்க மாட்டோம்' என்கிறாரே


• அன்னையாக...


• கைதுமேனியா!


• தன்மானச் செம்மல்!

சட்ட அமைச்சர் பொன்னையன்?

? சமீபத்தில் தங்களை வேதனைப்படுத்திய விஷயம்..?

! அட! உங்கள் இரண்டாவது கேள்விக்கு முதலாவது கேள்வியையே பதிலாக வைத்துக் கொள்ளலாம் போலிருக்கிறதே. கேள்வியும் நீங்களே; பதிலும் நீங்களே!

கலைக்கப் போகிறார்களாமே?

● எஸ். அகிலா, மோரகனியனூர்.

? பெண்களைப் பலவற்றோடு ஒப்பிட்டுப் பாடுகின்றனர் கவிஞர்கள். அதே போல் ஆண்களை எவற்றோடு ஒப்பிடுவதாம்?

! புறநானூறு புரட்டுங்கள்!

● கல்லன் கிருஷ்ணராஜ், குன்னூர் – 5.

? சத்தியம், தேர்மை, உண்மை போன்ற நற்குணங்கள் பரவினால்தான் நாட்டுக்கு விமோசனம் என்று மகாபாரதம், இராமாயணம், கீதை, வேதங்கள், உபநிடதங்கள் போன்றவற்றின் துணையுடன் உபன்யாசம் செய்து வரும் 'சோ', சட்டம்–மரபுகளில் உள்ள விதிவிலக்குகளை மட்டும் வலியுறுத்தி, சிறு குழந்தைகள் கூட புரிந்து கொள்ளக் கூடிய 'ஜெ'யின் குற்றங்குறைகளை மறைக்க முயன்று வருகிறாரே? விந்தையாயில்லை?

! விந்தையாயில்லை; ஆனால் வருத்தமாயிருக்கிறது.

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

? சென்னை நகரில் குடிதண்ணீர் நிலைமை மேம்பட்டிருக்கிறதா..?



• 'ஆட்சிமுறை...'

! ஓ யெஸ்! முன்பெல்லாம் பட்டப் பகலில் மட்டும்தானே பெண்கள் கியூவில் நிற்பார்கள்; இப்போது நள்ளிரவு தாண்டி அதிகாலை இரண்டுமணிவரை கூட தண்ணீர் லாரிகளுக்காகக் காத்திருக்கிறார்கள்.

● பி.எல். ஸ்ரீநிவாஸன், அய்யம்பாளையம்.

? எஸ். எஸ். சந்திரன் ரொம்பப் பேசுகிறாரே?

! எம்பி எம்பிக் குதித்ததற்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது.

● என். சண்முகம், திருவண்ணாமலை.

? 'தன்மானம்தான் எங்களுக்கு முக்கியம். இனி அ.தி.மு.க.வுடன் உறவில்லை' என்று ராமதாஸ் சொல்லிவிட்டாரே...?

! இந்தத் தன்மானம் தேர்தலுக்கு முன்னும் பின்னும் எங்கே போய் ஒளிந்து கொண்டது?



• கைமேல் பலன்!

● எம். செல்வராஜா, பட்டுக்கோட்டை. ❐

? பத்தாண்டுகளுக்கு முன் ஒரு பத்திரிகையில் படித்தேன். காவல்துறை என்பது அரசாங்கத்தின் ரௌடி கும்பல் என்று... இது உண்மையா?

! உண்மையா இல்லையா என்பது ஆட்சியில் இருப்போர் காவல் துறையைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தைப் பொறுத்தது. IASஎன்றால் 'இந்தியன் அரசியல்வாதி சொல்படி' என்றும் IPSஎன்றால் Indian Politicians Service என்றும் அர்த்தமாகிறது என்று பெங்களூர் வாசகர் எஸ். ஆர். கௌசிக்* எழுதியிருப்பது இன்னும் கச்சிதமாய்ப் பொருந்துகிறது.

● எஸ். அப்துல்லா அஹமது, நாகூர்.

? பணக்காரன் செல்வம் பெற்றிருந்தும் எப்போது ஏழையாவான்?

! இருக்கும் செல்வம் போதாது என்ற மனநிலை உள்ள வரை அவன் ஏழைதான்.

● ஏ. ஷங்கர், பெங்களூர்–16.

? சன் டீ.வி. கருணாநிதியின் குடும்ப சேனல் சரி... ஜெயா டீ.வி?

! குழப்ப சேனல்!



★ மாணவ மாணவிகளுடன் இளங்கோ

★ திருமதி அனந்த கிருஷ்ணன்

50 டாலரிலிருந்து 50 மில்லியன் டாலர்!

பத்திலிருந்து பதினைந்து வயதிற்குட்பட்ட ஐம்பதிற்கும் அதிகமான மாணவ, மாணவிகள் ஆவலோடு அவர் முகத்தைப் பார்க்கத் தொடங்கினார்கள். இடம் லலித் கலா அகாடமி.

"உங்களைப் போன்று பள்ளிப் பருவத்திலேயே வரையத் தொடங்கிய ஓவியன் வேன்காக். முப்பத்தேழு வயதில் இறந்து போனான். ஆனால் அவனது ஓவியங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இன்று அவன் ஓவியம் ஒவ்வொன்றும் 50 மில்லியன் டாலர் விலை போகிறது. இப்போது உங்கள் முன் நிற்கும் கேள்வி, எப்படி நாமும் வேன்காக் போல ஓவியனாவது என்பதுதானே.. அப்படியொரு கேள்வி எழுந்தால், அதை உங்கள் உள்ளத்திலிருந்து உடனே துடைத்து விடுங்கள். வேன்காக்கின் ஓவியங்கள் உங்களை பாதிக்கலாம். ஆனால் உங்களுக்கென்று உழைத்து ஒரு தனித்துவத்தை உருவாக்கி கொண்டால் தான் நீங்களும் ஓவியர்." - இப்படித் தொடங்கி, நவீன ஓவியத்தைப் புரிந்து கொள்ளவும், அதைப் படைக்கவுமான உத்திகளைப் பகிரங்கப்படுத்தினார் ஓவியர் ஏ.வி. இளங்கோ.

நவீன ஓவியம் ஏதோ நவ பாஷாணச் சிலை ரகசியம் போல பொத்தி வைக்கப்படும் தமிழ்ச் சூழலில் இப்படியொரு பயிற்சிப் பட்டறை நடந்தது அனேகமாய் இது தான் முதல் முறை. தமது நவீன ஓவியங்களின் பெரும்பகுதியை ஸ்லைடு மூலம் மாணவர்களுக்கு ஒளிப்படமாக போட்டுக் காட்டினார் இளங்கோ. 'தாயும் சேயும்', 'கரகாட்டம்', 'பறைக் கலைஞர்', 'எருதுகள்' என்று அணி வகுத்த அவரது ஓவியங்களின் எளிமையும், நவீனமும் மாணவர்களை விழி விரிய வைத்தன.

"என்னிடம் ஒரு மாணவர் வந்து இந்த ஓவியத்தை வரைய எத்தனை ஆண்டுகள் பிடித்தன என்று கேட்டார். நான் இருபத்தைந்து ஆண்டுகள் என்று சொன்னேன். அவருக்கு விளங்கவில்லை. அதன்பிறகு அவருக்கு விளக்கினேன். எனக்கென்று ஓவியமொழி வசப்பட இத்தனை ஆண்டுகள் பிடித்தது. அதன்பிறகே நான் இப்படியொரு ஓவியத்தை வரைய முடிந்தது என்றேன். அதுதானே உண்மை. நாம் பேசுகிற மொழிக்கு எப்படி வார்த்தைகளும், எழுத்தும் முக்கியமோ, அதுபோல் நாம் வரைகிற ஓவியத்திற்கும் மொழி அவசியம். அதற்கு இளம் வயதிலேயே வரையத் தொடங்க வேண்டும். காலப் போக்கில் வண்ணங்களை மட்டுமல்ல, கோடுகளையும் நீங்கள் கட்டுப்படுத்த தொடங்கி விடுவீர்கள். தொடக்கத்தில் நான் ஆறு வண்ணங்களைப் பயன்படுத்தி வந்தேன். இப்போது ஆரஞ்சு, யெல்லோ, ஆகர் என்று குறைத்துக் கொண்டு விட்டேன். நவீன ஓவியத்தின் ஒளியும், நிழலும் ஒரு சில வண்ணங்களிலேயே வெளிப்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வண்ணத்திற்கும் தனித் தனி பிரஷ்களைப் பயன்படுத்த வேண்டும். ஓவியத்தில் இடம் பெறும் எக்ஸ்ட்ரா கோடுகள் படத்தின் இயக்கத்தைக் கூட்டும். அசையும் ஓவியம் என்றால் அதன் வேகம் தெரிய வேண்டும். அதற்குப் பொருத்தமான ஸ்ட்ரோக் எது என்பதை உங்கள் மனமும், விரலும் முடிவு செய்யும்" என்று எளிமையாக விளக்கினார் இளங்கோ. பயிற்சியின் இறுதியில் தண்ணீர் லாரிகளை நவீன பாணியில் விதவிதமாய் வரைந்து தள்ளி அசத்தினார்கள் மாணவ மணிகள். இந்த பயிற்சிப் பட்டறைக்கு ஏற்பாடு செய்திருந்தவர் இன்னொரு ஓவியர் திருமதி அனந்தகிருஷ்ணன்.

- ஸ்ரீ சக்கரம்

படங்கள் : ஐரிஸ்

சஹஸ்ரநாமத்தின் முதல் சுலோகத்தில் ஒன்பது நாமாக்கள்; இரண்டாவது சுலோகத்தில் எட்டு நாமாக்கள்; மூன்றாவது சுலோகத்தில் ஏழு திருநாமங்கள் உள்ளன என்று சொன்னேன்.

நாம் இங்கே ஒன்று நினைக்கலாம். காயத்ரியில் மூன்று வேதங்களின் ஸாரமாக எட்டு - எட்டு - எட்டு என்று மூவெட்டு அக்ஷரங்கள் தானே உள்ளன. அதே மாதிரி சஹஸ்ர நாம சுலோகங்களிலேயும் வரக் கூடாதா? ஏன் 9 - 8 - 7 என்று மாற்



துணையொன்றுமில்லை

றிக் கொடுத்தார்கள்...?

ஏன் என்று கேட்டால், மஹான்களான மஹரிஷிகள், இந்த காயத்ரி ரொம்ப ரகசியமான மந்திரம் என்று கருதினார்கள். அதனால்தான் அதை சஹஸ்ரநாமத்தில் இப்படிப் புகுத்திப் பூட்டி வைத்திருக்கிறார்கள்.

நம்மாழ்வார் வாக்கைப் பார்த்தால் தெரியும்... பிரணவத்தில் ஒலியமைப்பு அ, உ, ம என்று இருக்கிறது; அவருடைய பாசுரத்திலே எப்படி இருக்கிறது?

உயர்வு அற உயர் நலம் உடையவன்
எவன்? அவன்
மயர்வு அற மதி - நலம் அருளினன்
எவன்? அவன்
அயர்வு அறும் அமரர்கள் அதிபதி
எவன்? அவன்
துயர் அறு சுடர் - அடி தொழுது எழு
என் மனனே!



அ, உ, ம என்ற (பிரணவத்தின்) முதலெழுத்துக்கள் முதல் மூன்று வரிகளில் வருகின்றன. ஆனால் 'உ'வை மேலே போட்டு, 'ம'வை அடுத்துப் போட்டு, 'அ'வைக் கடைசியாய்ப் போட்டிருக்கிறார். பிரணவத்தை நேரே சொல்ல வேண்டாம் என்று, சஹஸ்ரநாமத்தில் எப்படி அக்ஷரம் மாற்றிப் பிரயோகம் பண்ணியிருக்கிறதோ அப்படித் தமிழ்ப் பாசுரத்திலும் மறைத்துப் பிரணவம் சொல்லப்பட்டிருக்கிறது.

இதிலேயும் ஒரு தாத்பர்யமானது அடங்கியிருக்கிறது.

ஒன்பது என்பதனால் எது சொல்லப்படுகிறது என்று கேட்டால், உயர்ந்ததான நரசிம்ஹ பீஜமானது அதில் அடங்கியிருக்கிறது.

நரசிம்ஹ பிரபாவத்திலே பார்த்தோமானால், உக்ரம், வீரம், மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம், சர்வதோமுகம், ந்ருசிம்ஹம், பீஷணம், பத்ரம், ம்ருத்யு ம்ருத்யும் என்று ஒன்பது பதங்கள் அந்த மந்திரத்துக்குள் அடங்கியிருக்கின்றன. ஒன்பது பதங்களை விவரிக்கக் கூடியதான ஒன்பது நாமாக்கள் சஹஸ்ர நாமத்திலும் முதல் சுலோகத்தில் அமைந்திருக்கிறது. காயத்ரியின் பெருமையையும் அது காட்டுகிறது.

அதற்கடுத்தது எட்டு! அது எதைக் காட்டுகிறது என்று கேட்டால் உபநிஷத்தில் சொல்லப்படுகிறது - இதை ஜபிக்கிறவன் அம்ருதத்தை அடைகிறான்.

ஸ்ரீமத் ரகஸ்யத்ரயஸாரம் என்ற உயர்ந்த கிரந்தத்திலே ஸ்வாமி தேசிகன் சொல்கிறார்:

பதரிகாசிரமத்திலே வந்து, பூலோகத்திலே உயர்ந்ததான பாரத தேசத்திலே, உத்துங்கமான உயர்ந்த இடத்திலே, பகவான் இந்த நாராயண மந்திரத்தை உபதேசம் பண்ணினான். அப்படிப்பட்ட மந்திரம் ஏற்றமுடைய மந்திரமானதனாலே, அந்த எட்டெழுத்து நாராயண மந்திரத்தை காயத்ரி மந்திரமும் குறிக்கிறது; சஹஸ்ரநாமத்தில் எட்டு நாமங்கள் அடங்கிய மூன்றாவது சுலோகமும் குறிக்கிறது. ஆகையினால்தான்,

குலம் தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும்; நீள்விசும்பு
அருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலம் தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம் தரும் சொல்லை நான் கண்டு
கொண்டேன் -
நாராயணா என்னும் நாமம்.

என்று திருமங்கை ஆழ்வார் பாடினார்.

'நலம் தரும் சொல் - ஆத்மாவுக்கு க்ஷேமத்தை உண்டாக்கக்கூடிய சொல் அது. அதை **அவன் அருளால்** நான் கண்டு

கொண்டேன்; திருநாமத்துடைய பிரபாவத்தை இன்று உணர்ந்தேன்-' என்கிறார்.

திருமங்கை ஆழ்வாருக்குப் பகவானே உபகரித்தான். அவனே கொடுத்தான்.

'குலம் தரும்' என்றால் உயர் குலத்தில் பிறப்பைக் கொடுக்கும் என்று அர்த்தம் இல்லை. 'தாஸ்ய குலம்' என்று அர்த்தம். அடியார்கள் குலம்! பகவானுக்கு எதிரிலே நாம் எல்லோரும் ஒன்றுதான் - அடி பணிந்துவிட்டால் எல்லோருமே ஒன்றுதான் - ஒரு குலம்தான். பாகுபாடு பார்த்து அவன் அருள் பண்ணுவதில்லை.

'செல்வம் தந்திடும்' - செல்வம்...?

எம்பெருமான் திருடியில் நித்ய கைங்கர்யம் என்ற செல்வம்! அதைக் கொடுக்க வல்லது நாராயண மந்திரம்.

அடியார் படுதுயரைப் போக்கும்- துக்கத்தைப் போக்கும். துக்கம் என்றால் என்ன..? நாம் உலகத்திலே சாமான்யமாக எல்லாவற்றையுமே துக்கம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

உயர்ந்த பதஞ்சலி யோக சூத்திரத்திலே என்ன சொல்லியிருக்கிறது என்றால், முதல் சூத்ரமே 'விவேகினா சர்வமேவ துக்கம்! உலகத்திலே விவேகிகள் இருக்கிறார்கள் பாருங்கள், அவர்களுக்கு எதைப் பார்த்தாலும் துக்கம்தான். அல்ப அஸ்திர பலன்!

எல்லாமே அல்பமானது; அ-ஸ்திரம் - அதாவது ஸ்திரமில்லாதது.

எதுவுமே சாச்வதம் இல்லை; பரமார்த்தம் இல்லை.

வியர்க்கிற காலத்தில் ஃபேன் வேண்டும் என்று கேட்கிறோம். மார்கழி மாதம் ஆனால் 'நிறுத்து ஃபேனை' என்கிறோம். இப்போது அந்த ஃபேன் நமக்கு முக்கியமா? இல்லை. ஆனால், ஒரு காலத்தில் வேண்டியதாக இருக்கிறது.

இது பரமார்த்தமாகாது. இப்படியே ஒவ்வொன்றையும் விசாரித்துக்கொண்டே போனோமானால், எதுவும் பரமார்த்தம் இல்லை. பரமாத்மா மட்டும்தான் பரமார்த்தம் என்பது தெரியவரும்.

ஆனால், இதெல்லாம் 'சுகம்' என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். 'இது சர்வமும் துக்கம்' என்று பதஞ்சலி மஹரிஷி சொல்கிறார்.

இந்த துக்கமாகிற சம்ஸார ஸாகரத்திலிருந்து நம்மை விடுவிக்கும் இந்த மந்திரம்.

நீள் விசும்பருளும் - வைகுண்டத்தைக் கொடுக்கும்.

பெற்ற தாயினும் ஆயின செய்யும் - தாயைக் காட்டிலும் மேம்பட்ட மந்திரம் இது. ஆகையினாலே இதை ஜபியுங்கள் என்கிறார்.


எட்டு அக்ஷரம் கொண்டது; மூல மந்திரம் என்பது, விசேஷமாக சஹஸ்ர நாமத்திலே மூன்றாவது சுலோகத்திலே எடுத்துக் காட்டப்படுகிறது.

காயத்ரியோ, நரசிம்ஹ மந்திரமோ, அஷ்டாக்ஷரியோ விசேஷமாய் விநியோகமாவது எங்கே...?

அக்னியிலேதான்!

அக்னிதான் தேவதைகளுக்கெல்லாம் அன்னாதனாய் இருக்கிறான். தேவதைகளுக்கெல்லாம் அக்னியைக் கண்டால் பிடிக்கும். ஏனென்றால் யக்ஞத்திலே தேவதைகளுக்கும் நமக்கும் சம்பந்தத்தை உண்டுபண்ணிக் கொடுக்கிறவன் அக்னிதான். ஏழு நாக்கு அக்னிக்கு. எம்பெருமான் நாமத்தைச் சொல்லி, அவன் திருவடியிலே ஆஹுதி பண்ணவேண்டும். அப்படிப் பண்ண ஏதுவாயிருக்கிற அக்னியின் ஏழு நாக்குகளை - அந்த அக்னியின் பிரகாசத்தை

அருள்வாக்கு!



பாலைவனங்களில் நிறைய மான் கூட்டங்கள் இருக்கும். அவற்றுக்கு வெயில் காலத்தில் ''ஹா ஹா'' என்று தாஹம் எடுக்கும். ஆனால் பாலை வனத்தில் ஜலம் கிடைக்குமா? கிடைக்காவிட்டால் போகிறது. அங்கே ஜலமே கிடைக்காது என்பதாவது தெரிந்து விட்டால் மான் கூட்டம் பாலைவனத்தை விட்டு வெளியிலே உள்ள நீர்வளமுள்ள நாட்டுக்கு ஓடிவந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால் இதையும் செய்ய முடியாமல் ஜலமே இல்லாத பாலைவனத்தில் ஜலம் இருக்கிற மாதிரி

ஒரு ஏமாற்று ஜாலம் நடக்கிறது. அது தான் கானல்நீர் என்பது. ப்ரதிபிம்பம் ஒளிச்சிதறல் 'தியரி'களைக் கொண்டு ஸயன்ஸில் இதை விளக்குகிறார்கள். மொத்தத்தில் இது என்னவென்றால், பாலைவனம் மாதிரியான ஒரு விஸ் தாரமான வெளியில் ரொம்பவும் உஷ்ணம் ஏறிப்போய், காற்று ப்ர தேசம் இலேசாகி விடுகிறபோது, தூரத்தி லிருந்து பார்க்கிறவர்களுக்கு ஜலத்திலே ப்ரதிபிம்பம் தெரிகிறமாதிரி மண்ணிலேயே தெரிகிறது. தூரத்திலிருந்து பார்க்கிற போது வெறும் மணற்பாங்கான பூமியே ஒரு நதி ஓடுகிற மாதிரி தெரியும். அதை நோக்கிப் போகப் போக, அதுவும் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கும்.

இப்படிப்பட்ட கானல் நீரைப் பார்த்து மான்கள் வாஸ்தவமான ஜலம் என்று நினைத்து அதைத் தேடித் தேடி ஓடி கடைசியில் ஓட முடியாமல் களைத்து, வெயிலின் உஷ்ணம் தாங்காமல், ரொம்பவும் பரிதாகமாக ஜீவனை இழக்கும். ஸம்ஸ்க்ருதத்தில் 'ம்ருக்' என்றால் 'தேடுவது' என்று அர்த்தம். ஓயாமல் எதையாவது தேடி ஓடிக் கொண்டே இருப்பதுதான் 'ம்ருகம்'. கானல் நீரைத் தேடி ஓடி மடிவது மான் என்ற ம்ரு கத்தின் பரிதாபமான காரியமாக இருக்கிறது.

லோகமெல்லாம் மாயை என்று அத்வைத சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. ''அதெப்படி மாயை? லோகம்தான் கண்ணுக்குத் தெரிகிறதே!'' என்று கேட்டால், கானல் நீர் கூடத்தான் கண்ணுக்குத் தெரிகிறது. அதனால் அது நிஜமாகி விடுமா? அப்படித்தான் இந்த லோகமும் ஒரு கானல் நீர்'' என்று அத்வைத க்ரந்தங்களில் சொல்லியிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

விவரிக்கிறது சஹஸ்ரநாமத்தில் ஏழு நாமாக்கள் கொண்ட வரி.

காயத்ரிக்குள்ளே அந்தர்யாமியாய் இருப்பவன் யார் என்பதை பீஷ்மாச்சார்யார் அழகாகச் சொல்கிறார். காயத்ரியில் 'பர்க': என்று ஒரு சொல் வருகிறது. 'பர்க' என்றால் ஒளிப் பிழம்பு! - தேஜஸ், மஹாதேஜஸ் என்று அர்த்தம்.

ஒளிப்பிழம்பு யார்...?
நரசிம்ஹ வபு ஸ்ரீமான்
கேசவ : புருஷோத்தம :

நரங்கலந்த சிங்கமதாக ஆவிர்பவித்தானே ஒளிப் பிழம்பாய்த் தோன்றினானே - அப்படிப்பட்ட எம்பெருமான் காயத்ரிக் குள்ளே அடங்கியிருக்கிறான்.

சாந்தோக்ய உபநிஷத்தானது அதை வர்ணிக்கிறது!

ஆதித்ய மண்டல அந்தர்வர்த்தியாய் பகவான் உள்ளுக்குள்ளே இருக்கிறான். 'பொன் போன்று ஸ்ம்ருகணீயமாய் ஜொலிப் பவன் யார் என்றால் நரசிம்ஹன்தான்' - நரசிம்ஹதாபனீய உபநிஷத் இப்படி விவரிக்கிறது.

இதற்கு வியாக்யானம் பண்ணிய ஆதிசங்கர பகவத்பாதாள், 'காயத்ரிக்குள் பிரகாசிப்பவன் ஹிரண்ய வர்ணனான எம்பெருமான்' என்கிறார். அதனால்தான் ஆழ்வாரும் 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்று லக்ஷ்மி உறையும்படியான சுவர்ணமயமான திருமேனியைப் பார்த்தேன் என்று சொல்கிறார்.

'அமிர்தம் வை ஹிரண்யம்' -

அழிவில்லாத திருமேனி - அமிர்தம் என்றாலே ஹிரண்யம்' என்கிறது வேதம். அப்படிப்பட்ட ஹிரண்ய ரூபியாய் பரமாத்மா காட்சி அளிக்கிறான் - காயத்ரிக்கு உள்ளே.

பஞ்சபாதக நாசினி எனறு காயத்ரியைச் சொல்லியிருக்கிறது. காயத்ரியை ஜபிக் கிறபோது ஐந்து இடங்களிலே நிறுத்தி ஜபிக்க வேண்டும் - அவ்வாறு நிறுத்திப் பண்ணினால் பஞ்சமா பாதகங்கள் அறவே நசிந்து ஒழியும். பிரணவத்தைச் சொல்லி நிறுத்த வேண்டும்; வியாக்ருதியைச் சொல்லி நிறுத்த வேண்டும்; ஒரு மாத்ரா காலம் முதல் வாக்யத்தைச் சொல்லி நிறுத்த வேண்டும். இரண்டாவது வாக்கியத்தைச் சொல்லி நிறுத்த வேண்டும்... இப்படியே நியமமாய்,

பத்து ஜபித்தாலும் ஐந்து இடங்களில் நிறுத்தி யார் ஜபம் பண்ணுகிறார்களோ... அவர்களுக்குச் சகல யக்ஞ பலன்களும் உண்டு. மற்ற யாகங்களிலெல்லாம் ஜீவ ஹிம்சை இருக்கிறது. உட்கார்ந்து ஏகாந்தமாக ஜபம் பண்ணுகிறபோது ஒரு ஹிம்சையும் இல்லை.

அதனால்தான் பரமாத்மாவே சொல்கிறான். 'ஜப-யக்ஞமாக நான் இருக்கிறேன்!' திரவிய யக்ஞத்தைக் காட்டிலும் ஜப யக்ஞம் உயர்ந்தது என்பதால்தான் ஜபத்தை பண்ணிவிட்டு ஹோமம் பண்ணுகிறார்கள்.

நின்ற தூண்கள்!



மஜ்னு படத்தின் பாடல் கேஸட் வெளியீட்டு விழா. விழா நடந்த தாஜ் கொரமண்டல் ஹோட்டலின் ஹால் நிரம்பி வழிந்தது. பத்திரிகையாளர்கள் பலர் உட்கார இடம் கிடைக்காமல், நிற்க வேண்டியிருந்தது. நிகழ்ச்சியில் பேசிய வைரமுத்து, "பத்திரிகையாளர்களைச் சமூகத்தின் நான்காவது தூண் என்பார்கள். அவர்கள் தூண்கள் என்பதால்தான், இங்கே நாற்காலி தராமல், நிற்க வைத்துவிட்டார்களோ!" என்றதும் பலத்த கைதட்டல்.

\- மானஸா

ஹோமத்தை நிறுத்தினாலும் நிறுத்தலாம்; ஜபத்தை நிறுத்தக் கூடாது. ஜபத்தில்தான் பூரணமான சித்தியை அடைய முடியும்.

'வஷட்காரரோ வை காயத்ரி' என்று சொல்கிறதனாலே, காயத்ரியின் பொருள் ஸஹஸ்ரநாமத்திலே அடங்கியிருக்கிறது என்று காட்டப்படுகிறது.

உபநிஷத்தானது காயத்ரி மந்திரத்தின் உயர்வைச் சொல்கிறபோது, சூர்யமண்டல அந்தர்வதியான பரமாத்மாவை காயத்ரியினாலே உபாஸனை பண்ணுகிறோம் என்கிறது. அங்கே இருக்கிற எம்பெருமான் ஹ்ருதயத்திலேயும் இருக்கிறான். - இதுதான் பிரும்ம சூத்திரத்திலேயும் நன்கு விசாரம் பண்ணப் பட்டிருக்கிறது.

வேதம் ஸ்பஷ்டமாகச் சொல்கிறது. - நாபிக்கு மேலே, ஹ்ருதய மத்யத்திலே, சஹஸ்ர தளபத்மம்! ஆயிரம் தளத்தோடு இருக்கிற அந்த பத்மத்திலே - ஹ்ருத் புண்டரீகம் என்று அதற்குப் பெயர் - அந்த ஹ்ருத் புண்டரீகத்திலே, புண்டரீகாக்ஷனான பரமாத்மா வீற்றிருக்கிறான். நம் ஹ்ருதயத்துக்குள்ளே நித்யவாஸம் பண்ணுகிறான்.

இது யாருக்காவது தெரியுமா என்றால், தெரியாது! கண்ணை மூடிக் கொண்டால் தெரிகிறதோ...?

இல்லை!

கண்ணைத் திறந்துகொண்டால் தெரிகிறதா என்றால், அப்போதும் தெரிவதில்லை.

ஹ்ருதயத்துக்குள் பார்க்கக்கூடிய சக்தி நமக்கு இல்லை.

விஞ்ஞான ரீதியான ஹ்ருதய ஆபரேஷன் நடக்கிறது - 'சஹஸ்ர தளபத்மத்தை டாக்டர் எடுத்து எங்கே வைத்தார்..?' என்று கேட்டார் ஒருவர்.

எல்லோரும் அவர் பண்ணுகிற காரியத்தைப் பண்ணிவிட முடியுமா...? அதற்கான ஞானமும் திறமையும் டாக்டருக்கு இருக்கிறது.

அதே மாதிரி, ஹ்ருதயத்திலே இருக்கிற எம்பெருமானைப் பார்க்க வேண்டுமானால், யம, நியம, பிராணாயாம, தியான, பிரத்யாஹார, தாரண, ஆஸன, சமாதி என்கிற அஷ்டாங்க யோக யுக்தர்களுக்குத்தான் பகவான் தெரிவானேயொழிய, நம்மைப் போன்றவர்களுக்குத் தெரியமாட்டான்.

த்ருவன் சரித்திரத்தில் பார்த்தால், சின்ன குழந்தை... நாரதர் அருளால் ஞானியாகியிருக்கிறது. எதிரே பரமாத்மா நிற்கிறான். அப்படியே பார்க்கிறது அவனை! ஸ்தோத்திரம் பண்ணத் தெரியவில்லை. வாக்பலம் இல்லை.

அப்போது பகவான் தனது கையிலே உள்ள சங்கத்தினால் குழந்தையின் கன்னத்தைத் தொட்டான். மஹா ஞானியாகப் போய்விட்டது குழந்தை!

அந்த சங்கத்தில் வேதம் நிரம்பியிருக்கிறது. அதன் நுனி இருக்கிறதே. அது பிரணவம். அது பட்டதும் மஹா ஞானியாகிவிட்டது குழந்தை!

(வளரும்)

"நான் உங்களுடன் இருப்பேன்!"

"இந்தியாவில், மசூதிகளே கிடையாது. இந்தியா சுதந்திரம் அடைந்த சமயம் இருந்த மசூதிகளும் ஒவ்வொன்றாக இடிக்கப்பட்டு விட்டன. முஸ்லிம் பெண்களைப் பலாத்காரம் செய்து இந்து இளைஞர்கள் திருமணம் செய்து கொண்டு விடுகிறார்கள்'' - இப்படியெல்லாம் துளியும் உண்மையில்லாத, விஷயங்களைக்கூட நிஜம் என்று பாகிஸ்தான் மக்களில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே பள்ளிக்கூட பாட புத்தகங்களில், இந்தியா பற்றிய தவறான கருத்துகள் இடம் பெற்றிருக்கின்றன.'' என்கிறார் நிர்மலா தேஷ் பாண்டே.

ஆசிய நாடுகளுக் கிடையே குறிப்பாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் நிலவி வருகிற பகை உணர்வு மறைந்து, நட்புறவு மலர வேண்டும் என்ற இலட்சியத்துடன் பாடுபட்டு வரும் ஆசிய மக்கள் அமைப்பு, தெற்காசிய நாடுகளில் அமைதி நிலவச் செய் வதற்கான பெண்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவர் இவர்.

பாகிஸ்தானின் தலைமை நிர்வாகியாக முஷாரஃப் பொறுப்பேற்றுக் கொண்டபின், இந்தியப் பெண்கள் குழுவுடன் பாகிஸ் தானுக்கு இரண்டு முறை பயணம் மேற் கொண்டு, முஷாரஃபைச் சந்தித்துப் பேசி இருக்கிறார் இவர்.



* முஷாரஃப்

"முதல் முறை பாகிஸ்தான் சென் றிருந்தபோது, முஷாரஃபைச் சந்தித்துப் பேச விரும்பினோம். அரபு நாடுகளில் சுற்றுப் பயணம் முடித்துத் திரும்பியிருந்த முஷாரஃப், மறுநாள் கிழக்காசியப் பயணம் புறப்பட்டுச் செல்லவிருந்தார். இடைப்பட்ட தினம் ஞாயிற்றுக் கிழமை. 'ஆனாலும், எங்களை, தமது இல்லத்துக்கு வரச் சொல்லி, அரை மணி நேரம் ஒதுக்கினார். அப்போது, "இரு நாடுகளுக்கும் இடையே அமைதி ஏற்பட்டு, நட்புறவு ஏற்படப் பாடுபடும் உங்களுடன் நான் எப்போதும் இருப்பேன். உங்கள் பிரதமரை எங்கே வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் நான் சந்தித்துப் பேசத் தயாராக இருக்கிறேன் என்று எங்களிடம் தெரிவித்தார் முஷாரஃப்.

"இரண்டாம் முறையாக, கடந்த பிப்ரவரி மாதம் ஒரு



* நிர்மலா தேஷ்பாண்டே



திடீர்ப் பரிசுப் போட்டி முடிவு - 13

படியில் ஏறும் குழந்தைக்குப் பொறுத்தமாக கமெண்ட் கேட்டிருந்தோம். தங்கள் கற்பனை ஹார்ஸ்களைத் தட்டிவிட்டு எழுதி எங்களைத் திக்குமுக்காடச் செய்து விட்டார்கள் வாசகர்கள். அதில் ரூ.100 பரிசு பெறுகிறது மும்பை, 'கொலபா' வைச் சேர்ந்த வாசகர் ரமேஷ் எழுதிய கமெண்ட்.

''வாஸ்து கீஸ்துன்னு சொல்லிக்கிட்டு மாடியிலே போய் பாத்ரூம் கட்டி வைச்சுருக்காங்க. ஒரு அவசரம்னா பத்துபடி ஏறி இறங்க வேண்டியிருக்கு.''

பெண்கள் குழுவுடன் முஷாரஃபைச் சந்தித்தேன். 'துப்பாக்கி குண்டுகள், பிரச்னைகளைத் தீர்க்காது, பேச்சு வார்த்தைதான் நட்புறவுக்குப் பாதை அமைக்கும்' என்று நாங்கள் வற்புறுத்தியபோது அவர், அதை ஆமோதித்தார். இந்த சமயத்திலும் அவர் அயல் நாட்டுப்பயணத்துக்காகத் தயாராகிக் கொண்டிருந்தார். அரை மணி நேரமே ஒதுக்கியிருந்தாலும், எங்களுடன் ஒரு மணி நேரத்திற்கு மேலாகப் பேசிக் கொண்டிருந்தார். எங்களை வாசல் வரை வந்து வழி அனுப்பி வைத்தார்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைவிட, ராணுவத்தின் தலைவர்தான் அதிகார பலம் கொண்டவர் என்று அந்நாட்டவர் பலர் என்னிடம் கூறினார்கள். ஒரு ராணுவத் தலைவரே, ஜனாதிபதி ஆகியுள்ள இன்றைய சூழலில் பேச்சுவார்த்தை நடப்பது, பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நல்லதொரு ஆரம்பம் என்றுதான் நான் நினைக்கிறேன்'' என்கிறார் நிர்மலா தேஷ்பாண்டே.

''இந்தப் பேச்சுவார்த்தையையே, பாக். தரப்பில் சில அமைப்புகள் எதிர்க்கின்றனவே.

''எதிர்க்கிறார்கள் என்றாலும், அவர்களுக்குப் பொது மக்கள் ஆதரவு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பத்திரிகைகளும், மீடியாவும் அத்தகைய பிரிவினருக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமில்லாதது.''

''எல்லா பிரச்னைகளையும் பேசித் தீர்த்துவிட முடியும் என்கிறீர்களா?''


''காஷ்மீர் பிரச்னை தொடங்கி, தளர்த்தப்பட்ட விசா விதிமுறைகள் உட்பட பல் வேறு விஷயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை இருக்கும். இந்த மூன்று நாள் சந்திப்பில், பல்லாண்டு கால பகை உணர்வு மறைந்து, நிலைமை சுமுகமாகிவிடும் என்பது எப்படி சாத்தியம்? ஒருவர்மீது மற்றவர் குற்றம் சாட்டிக் கொண்டு இருப்பதை விட்டுவிட்டு, நேருக்கு நேர் அமர்ந்து பேசுவது என்பதே நல்ல ஆரம்பம்தானே?

''உங்களுக்கு ஒன்று தெரியுமா? வட இந்தியாவின் பல நகரங்களிலும், பாகிஸ்தானின் சில இடங்களிலும் இந்தப் பேச்சுவார்த்தை வெற்றிபெற வேண்டும் என்று பல தரப்பு மக்களும் பிரார்த்தனை நடத்த ஆரம்பித்துவிட்டனர்.''

- சந்திப்பு :

எஸ். சந்திரமௌலி

கம்ப்யூட்டர் காசோலை!



அலுவலப் பணிகளில் அதிக பதற்றம் நிறைந்தது காசோலைகளை நிரப்பும் பணி. இப்போது இதற்கும் சாப்ட்வேர் சொல்யூஷன் வந்துவிட்டது. சென்னையைச் சேர்ந்த அவாண்டேஜ் சொல்யூசன் நிறுவனம் 'செக்மேட்' என்ற காசோலைகளுக்கான மென் பொருளை உருவாக்கி சந்தைப்படுத்தி வருகிறது. இந்த மென்பொருளைக் கொண்டு காசோலைகளில் இட வேண்டிய பெயர், தொகை போன்றவற்றை மிகவிரைவாக நிரப்பி, பிரிண்டர் மூலம் அச்சிட்டு எடுத்துக் கொள்ளலாம். தொகையை எண்ணால் அடித்தால்போதும், எழுத்தில் தானாகவே அச்சிட்டு தந்துவிடும்.

காசோலைகளைக் கையில் எழுதுவதை விட, பத்து மடங்கு விரைவாக அச்சிட்டு வழங்கலாம். இதற்காக அனைத்து வங்கி காசோலைகளின் மாதிரிகள் ஸ்கேன் செய்யப்பட்டிருப்பதால், எந்த வங்கிக் காசோலை என்றாலும் உடனக்குடன் அச்சிட்டுக் கொள்ளலாம். பாஸ் வேர்டு வசதியும் உண்டு.


- ஜெ.

"எரிஞ்சது தேர் மட்டுமில்லீங்க!"

மரச்சிற்ப வேலைபாடுகளுடனும், கலையழகுடனும் கம்பீரமாக காட்சியளித்த தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் தேர், இப்போது கரிக் கட்டையாகி நிற்பதைப் பார்த்துப் பரிதவிக்கிறார்கள் பக்தர்கள்.

கலைஞர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழகம் முழுவதும் ஜூலை இரண்டாம் தேதி முழு அடைப்பு செய்வதாக அறிவித்தது தமிழக தேசிய ஜனநாயகக் கூட்டணி. இதற்கு முதல் நாள் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஒரு கும்பல் தேரை தீக்கிரையாக்கிவிட்டு தப்பியிருக்கிறது. அவர்களில் இரண்டு பேர் இப்போது போலீஸ் பிடியில்.

"நடு ராத்திரிங்க... விடிஞ்சா பந்த் வேற... வெளியில பயங்கர சப்தம் என்னமோ ஏதோன்னு நினைச்சு அலறியடிச்சுத் தெருவுக்கு வந்தா... ஈஸ்வரன் தேர் மளமளன்னு பற்றி எரியுது. பகீர்னு ஆகிப் போச்சு. 'அடப்பாவிகளா'ன்னு கத்தல். இதுக்குள்ள கும்பல் கூடிட்டு. ஆளாளுக்கு ஓடிப் போய்த் தண்ணிய ஊற்றினோம். நெருப்பு அணைவனாங்குது. அப்புறம் தீயணைப்பு வண்டிக்கு ஃபோன் பண்ணினாங்க. அவங்க வந்துதான் தீயை அணைச்சாங்க. ஆனா அதுக்குள்ள எல்லாம் எரிஞ்சு முடிஞ்சிடுச்சிங்க. எரிஞ்சது தேர் மட்டுமில்லீங்க எங்க உசிரும்தான்.'' என்று சொல்லிவிட்டுக் கண் கலங்குகிறார் சன்னதி தெருவில் வசிக்கும் ஒரு பெரியவர்.



• கரியான தேர்

"எங்க ஊர்ல மூணு நாள் தேர்த் திருவிழா நடக்கும்ங்க. தைப்பூசத்தன்னிக்குத் தேர் இழுப்பாங்க. அந்த மூணு நாளும் சுத்துப்பட்டு கிராமமே தாரமங்கலத்துல தான் திரண்டு வந்து நிற்கும். அப்பேர்பட்டத் தேரை இப்படித் தீவச்சிக் கொளுத்திப்புட்டாங்களே!" என்று பொறுமுகிறார்கள் பக்தர்கள்.

எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இக்கோயிலின் தேர் செய்யப்பட்டு இருநூறு வருடங்கள் இருக்கலாம் என்கிறார்கள்.

"பழமையான இத்தேரைப் புதுப்பிக்க முப்பது லட்சம் ரூபாய் ஆகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. முதல்வர் இருபத்தைந்து லட்ச ரூபாய் வழங்குவதாக அறிவித்துள்ளார். இத்தேர் சிதைக்கப்பட்ட சோகம் அனைவரிடமும் இருக்கிறது" என்கிறார் கோயில் அலுவலக மேலாளர்.

சகலத்திலும் புகுந்துவிட்ட அரசியல், கோயில் தேர் வரை வந்திருப்பதை நினைத்து ஏக டென்ஷனில் இருக்கிறார்கள் தாரமங்கலம் பகுதி மக்கள்.

- திருநாவுக்கரசு



• கோயில்

தந்திரபூமியில் லகான்!

அமீர்கானின் 'லகான்' படத்தில் நடித்த டெக்னீஷியன்களை அப்படியே இறக்குமதி செய்து, தமது 'தந்திரபூமி' டி.வி. தொடரில் பயன்படுத்தியிருக்கிறார் இயக்குனர் சி.ஜெரால்டு.

"கொஞ்சம் கண்ணீர், கொஞ்சம் சென்டிமென்ட்னு போகிற தொடர்களிலெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை. ஒரு தொடரைப் பார்க்கிறோம்னா, ஏன் பார்க்கிறோம்? அதுல என்ன வித்தியாசம், புதுமை இருக்குங்கறதை ரசிகர்கள் பேசணும். அந்த அடிப்படையில சுதந்திரத்துக்கு முன்னால நடந்த மாதிரியான ஒரு கதையை ரெடி பண்ணி, அந்த கால கட்டத்துல பயன்படுத்துன பொருட்கள், மனிதர்கள்னு எல்லாமே தத்ரூபமா அமைக்க முயற்சி பண்ணினோம். அப்படி யோசிச்ச போது தான் 'லகான்' டெக்னீஷியன்கள் ஞாபகத்துக்கு வர, அவங்களை வைச்சே வேலை செய்தோம். ஒரு டி.வி. தொடருக்கு இவ்வளவு ரிஸ்க் எடுத்து பணியாற்றுவது இதுவே முதல் முறையாயிருக்கும்..." என்று கனீர் குரலில் பேசும் ஜெரால்டு, பல சினிமா கலைஞர்களைத் தந்திருக்கும் மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர்.



• ஜெரால்டு

இத்தொடரில் ஆங்கிலேய கவர்னராக நடித்திருப்பவர் ஜெப்ரி ஹோலர் என்கிற வெள்ளைக்காரர். தொடரில் அவரையே தமிழ்பேசவும் வைத்திருக்கிறார்கள்.

மந்திரவாசல், மாயவேட்டை, கங்கா யமுனா சரஸ்வதி போன்ற தொடர்களை இயக்கி இருக்கும் ஜெரால்டுக்கு 'திகில்' கதைகளின் மேல் ஏன் அவ்வளவு ஆர்வம்?

"கதை சொல்வதற்கும், கேட்பதற்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் விஷயங்கள் திகில் தொடருக்கு உண்டு.

"நடு ரோடு.... ரெண்டு பேர் விரட்டிட்டு வர்றாங்க. அதை பார்த்துப் பயந்து ஓடிட்டிருந்தால்... எதிர்ல இரத்த வெள்ளத்துல ஒருத்தன் புரண்டுட்டு இருக்கான்!" என்று சொல்லும் போதே ஒரு எதிர்பார்ப்பும், அடுத்தது என்னங்கற விஷயமும் தானாக வரும். அதனால கல்லூரி படிக்கும் போதே எனக்குப் பிடித்த கதையமைப்பா இது ஆகிடுச்சு!" என்கிறார் இவர்.

டி.வி தொடர்களும் கிராபிக்ஸுக்குள் இறங்கி விட்டதால் பெட்ஷீட்டில் கை முளைப்பது, நிலைக் கண்ணாடியிலிருந்து பூதம் உருவாவது போன்ற விஷயங்கள் சர்வசாதாரணமாகி விட்டன. 'தந்திரபூமி'யிலும் கிராபிக்ஸ் கலக்கல் இருக்கிறதாம்.

"கிராபிக்ஸ்னா நீங்க நினைக்கிற மாதிரியான விஷயங்களுக்கு நாங்க பயன்படுத்தலை. இந்த இடத்துல இப்படி வைத்தால் நல்லா இருக்கும்னு ரொம்ப யோசிச்சு ஒரு காமெடியா இல்லாம, எல்லாரும் ரசிக்கிற மாதிரி பண்ணியிருக்கிறோம்" என்று சொல்கிறார் ஜெரால்டு.

கதையோடு அழுது, சென்டிமென்டோடு கலந்து கரைந்து போகும் நம் தாய்க்குலங்கள் மத்தியில் இம் மாதிரியான 'திகில்' தொடர்களுக்கு வரவேற்பு எப்படி?

"சென்டிமென்ட், கண்ணீர்த் தொடர்களை விரும்பாத அல்லது அதிலிருந்து வேறு ரசனையை விரும்புறவங்க, இத்தொடர்களைப் பார்க்கிறாங்க. இது வரை வந்த எல்லா திகில் தொடர்களும் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கு. இது மாதிரியான தொடர்கள்ல புதுசு புதுசான விஷயங்களைச் சொல்லணும்; அது சிரமம்தான். இருந்தாலும் அதை இந்தத் தொடர்ல ரொம்ப சுவாரஸ்யமாப் பண்ணியிருக்கேன்" என்கிறார் ஜெரால்டு.



• தந்திரபூமியில் பல்லவி

— அப்பு

பேர் சொல்லும் தீ!



அழைப்பு மணியை இயக்கிய அடுத்த விநாடி காத்திருத் தலுக்கு வாய்ப் பின்றி கதவு திறக் கப்பட்டது. வெள்ளை நிற சுடிதாரில் வெளிர்நீல துப்பட்டாவை, தோள் பட்டையில் கச்சிதமாய் பின் செய்திருந்த பள்ளிச் சீரு டையில் கதவைத் திறந்தவர் ஸ்ருத்திகா! நடிகர் தேங்காய் சீனிவாசனின் பேத்தி. தாத் தாவின் முக அமைப்பில் முப் பது விழுக்காட்டை வரித்துக் கொண்டு நின்ற ஸ்ருத்தி காவின் கண்கள்... துப்பட்டாவைப் போலவே நீல நிறம். ''விழியாடி (கான் டக்ட் லென்ஸ்) பொருத்தி யிருக்கிறீர்களா ஸ்ருத்தி?'' சந் தேகத்தைக் கேட்டதும், ''இல்லவே இல்லை'' என்ற மறுப்பு. ''இது அம்மாவிடமிருந்து எனக்குக் கிடைத்த ஹெரிடடரி கிஃப்ட்'' என்று கூறுகிறார். ஒரு ஜோடி பட்டாம்பூச்சி களாக இமைகள் பட படக்கிறார்.



''படிக்கும் வயதில் நடிப்பதற்கு... அதுவும் தாத்தா

வுக்குப் பிறகு அப்பாகூட நடிக்க வில்லை. பிறகு பேத்திக்கு மட்டும் பேராசையா?'' என்றால், ''ம்ம்ம்... பேராசையென்றால் பண ஆசையெல்லாம் இல்லை... அப்பா சிவசங்கர் மார்க்கெட்டிங் துறையில் பெரிய ஹீரோ. கைநிறைய சம்பாத்யம். எனக்குப் புகழ் ஆசை. தாத்தா இருக்கும் போதே, அப்பாவுக்கு ஆக்டிங் ஆஃபர் நிறைய வந்ததாம்... ஆனால் அம்மா விடவில்லை'' என்று அருகில் அமர்ந்துள்ள அம்மா கல்பனாவைப் பார்த்துச் சிரிக்கிறார்....

''அப்போ உங்களுக்கு மட்டும் அதே அம்மா எப்படி அனுமதி கொடுத்தார்கள்?'' என்று மடக்கினால்...

''அதுக்குக் காரணம் எனது பரத நாட்டிய குரு, சித்ரா விஸ்வேஸ்வரன். அவங்ககிட்டேதான் ஐந்து வருடமாக பரதம் கற்றுக்கொள்கிறேன். வீட்டில் நான் செய்யும் அபிநய சேஷ்டைகளைப் பார்த்துவிட்டு, இவளுக்கு நடிப்பு நல்லா வரும் போலிருக்கு. அதை நாம் கெடுக்க வேண்டாமேன்னு அம்மா பச்சைக் கொடி காட்டினாங்க. இன்னொரு பக்கம் விஜய்காந்த் சார். இன்னும் நான் கைந்து நிறுவனங்களில் இருந்து வாய்ப்பு தேடி வந்தது. அதில் 'ஸ்ரீ' பட கதாநாயகி பாத்திரம் ரொம்ப டீசன்ட்டாக இருந்ததால் அப்பா ஒத்துக்கொண்டார். எனக்கும் பிடித்திருந்தது. இந்தப் படத்தை முடித்து விட்டுத்தான் அடுத்த படம் பற்றி யோசிப்பேன். மருந்துக்குக்கூட நோ கிளாமர்!'' என்று முகத்தில் கண்டிப்பு காட்டிய ஸ்ருத்திகாவிடம் ''தாத்தாவின் நகைச்சுவை உணர்வு உங்களுக்கும் உண்டா?'' என்றால், ''சுத்தமாகக் கிடையாது'' என்று வெட்கப்படுகிறார்.

ஆதர்ஷ் வித்யாலயாவில் பத்தாம் வகுப்பு படித்து வரும் ஸ்ருத்திகாவின் பொழுது போக்குகளில் ஒன்று தம்பி ஆதித்யா, பாட்டி லட்சுமி கூட்டணியுடன் வீட்டிற்குள்ளேயே கிரிக்கெட் விளையாடுவது... தமிழ் ரசிகர்கள் க்ளீன் போல்ட்?

— ஜெயந்த்

படங்கள்: சங்கர் சத்தியமூர்த்தி

மீண்டும் மம்மி!

உலக அதிசயம். உலகின் மிகப் பெரிய கல்லறை. கண்டுபிடிக்க இயலாத கட்டிடக் கலை ரகசியம். ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும் உள்ளே வைக்கப்படும் உடல்கள், அழுகிவிடாத 'மம்மிபிகேஷன்' மர்மம். எகிப்திய பிரமிடுகளின் இந்த விடுபடாத முடிச்சுகள், ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை அங்கே திசை திருப்பி விட்டுக் கொண்டிருக்க, பிரமிடுகளையும், பாரோ மன்னர்களையும் பின்னணியாக வைத்துக்கொண்டு, ஹாலிவுட்காரர்கள் எடுத்த 'மம்பி' படம், உலகம் முழுக்க வசூலை வாரிக் குவித்தது. 'கூடவே எகிப்துக்கு வரலாறு காணாத அளவு சுற்றுலா பயணிகளை வரவழைத்தது. இதனால் மம்மி படத்திற்கு எகிப்தில் வரிவிலக்கு என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.



இப்போது அந்தப் படத்தின் இரண்டாவது பாகமான 'தி மம்மி ரிட்டர்ன்ஸ்' வந்திருக்கிறது. இந்தப் படத்திற்கென்றே புரோகிராம் செய்யப்பட்ட, பிரத்தியேக சாஃப்ட்வேர் மூலம் 3டி அனிமேஷன் காட்சிகளை உருவாக்கி, வாய் பிளக்க வைத்திருக்கிறார்கள். அதுவும் கூட்டெரிக்கும் பாலைவனத்தின் நடுவில் கிரேட் பிரமிடுகள் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்ற, சுவாரஸ்ய கற்பனைக்கு உயிர் கொடுக்க உழைத்திருக்கிறார்கள். கணினியில் உருவாக்கப்படும் கதாபாத்திரங்கள் சினிமாவை ஆளும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதற்கு மம்மி மாதிரியான படங்கள் அடிக்கல்.

— ஜெ.

ஓங்கிய கை

உசேன் பாயின் கோபம் பிரசித்தமானது. கண்ணு மண்ணு தெரியாத மனிதர் என்று பெயர் எடுத்திருந்தார். கோபத்தின் அறிகுறி நடையிலேயே தெரிந்து விடும். 'ணங்... ணங்' கென்று தரை அதிர்கிற நடை. கலையா உஷாராகி விடுவாள். வீடு நிசப்தமாகி விடும். வெடிக்கப் போகும் வஸ்துவின் அருகிலிருக்கும் திகிலுடன் நொடிகள் கழியும்.

பெரியதாகக் காரணம் வேண்டாம்.

சாம்பாரின் பிடிக்காத வாசனையோ, பரிமாறலின் ஒரு நொடி தாமதமோ, ஏதாவது கேட்டு இல்லையென்று வருகிற பதிலோ போதும்.

எளிதில் கைக்குக் கிட்டுவது கலையாவின் தலைமுடிதான். கொத்தாகப் பற்றிக் கொண்டு ஓங்கி ஓங்கி அடிப்பார். முதுகிலும், தடுக்கும் முயற்சிகள் தோற்று, நெஞ்சிலும்கூட அடி விழும். கண்ணில் படும் பாத்திரங்களைத் தரையில் தூக்கி வீசுவார். மூலைக்கு ஒன்றாகப் பதுங்கும் குழந்தைகளைச் சாத்துவார்.

எல்லாம் தணிந்து அவர் வெளியேறிய பிறகு வீடு யுத்தம் நிகழ்ந்த பூமி மாதிரி தெரியும்.

இப்போது வயதாகி விட்டது.

சத்தம் போட்டால் மூச்சு வாங்குகிறது. வியர்வை வழிய நெஞ்சைப் பிடித்துக்கொண்டு உட்காருகிறார். ஆனாலும் அதே கோபம்தான். பேச்சுவாக்கில் கையை ஓங்கினாலும் கலையாவை முன்பு மாதிரி அடிப்பது கிடையாது.

அதற்கொரு காரணம் இருந்தது. இரண்டு வருஷம் முன்பு நடந்தது அது.

அன்றைக்கு வியாழக்கிழமை. மறுநாளுக்கும் மறுநாள் நரிக்கல்பட்டிச் சந்தை. ஆடுகள் சல்லிசாகக் கிடைக்கும். கசாப்புக் கடையிலும் கடன் சொல்லிப் போகிறவர்கள் பெருகி விட்டார்கள். பணத்திற்கு முடையாக இருந்தது.

சோர்வுடன் வீட்டிற்கு வந்தார். நிலைமையைச் சொல்லி விட்டு, "கலையா... உன் கம்மலைக் குடு..." என்றார்.

கலையா பதில் சொல்லவில்லை.

தனது பூர்வீகச் சொத்தை எழுதிக் கேட்கிற பாவியாக அவரைப் பார்த்தாள் அவள். "ஏன்... கைக்காசெல்லாம் என்னாச்சு?" எனக் கேட்டாள்.

"இந்த வாரம் அறுத்ததே மொத்தம் மூணு குட்டிக... சோத்துச் செலவு போக கொஞ்சம் வெளியநிக்கிது. தோலு வாங்கிட்டுப் போனவனும்



அடுத்த வாரம்தான் பணம் தருவான். கிராக்கி இல்லைங்கிறான்... என்ன செய்ய?"

"அதுக்கு... அட்டியலும் நெக்லஸும் பண்ணிப் போட்ட மாதிரி, என் நெனைப்பு வந்துருச்சாக்கும்?" வழக்கம் இல்லாத வழக்கமாக முகத்தைப் பார்த்துக் கேள்வி கேட்டான்.

"அவசரம்னுதானே கேக்கறேன்... பத்து நாள்ல திருப்பிரலாம். குடு..."

"எத்தனையோ அவசரத்தைப் பார்த்தாச்சு. இது வரைக்கும் ஒங் கைக்குப் போன எது திரும்பி வந்திருக்கு. பொட்டப்புள்ள இந்தா அந்தான்னு நிக்கிது. உள்ளதையும் குடுத்துட்டு என்ன செய்ய..."

பின் வாசலில் முகச் சவரம் செய்து கொண்டிருந்த பெரியவனும், திண்ணையில் உட்கார்ந்திருந்த நடுவுள்ளவனும் சத்தம் கேட்டு, "என்ன..." என்று எழுந்து வந்தார்கள்.

"பாருங்கடா... இதொண்ணைக் காதுல போட்டிருக்கேன்... பொறுக்கலை



மும்தாஜ் யாசீன்

பாவி மனுஷருக்கு..." என்றாள்.

"அவள் சொன்ன தோரணை அவரது 'ஆம்பளத் தனத்தை'த் தாக்க, "என்னடி சொன்ன... பாவியா?" எனப் பாய்ந்தார். கழுத்தில் கை வைத்து சுவரோடு மோதினார். மறுபடியும் கை ஓங்கியதுதான் தெரியும். பெரியவன் அவரைக் குண்டுகட்டாகத் தூக்கி நாலடி தள்ளி நிறுத்தினான். அவரால் திமிர முடியாத இரும்புப்பிடி.

"என்னது... எப்பப் பார்த்தாலும் அடிதடி பண்ணிக்கிட்டு ... முட்டாள்தனமா..." அண்ணன் தம்பிகள் இருவரும் குறுக்கே நின்றுகொண்டார்கள்.

அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. பையன்களே தன்னை எதிர்க்க முடியுமா? "என்னடா... கொழுப்பு ஏறிப் போச்சா... நாய்களா..." என ஆரம்பித்து சரம்சரமாகப் பேச ஆரம்பித்தார். கடைசிப் பையனும் அதற்குள் வந்துவிட, பொட்டப்புள்ளை ராபியாவும் அவர்களுடன் சேர்ந்துகொண்டாள். ஆளுக்கு ஆள் சத்தம் போட அவரால் எதுவும் செய்ய முடியாது போல இருந்தது. அவமானமாக நினைத்தார்.

தனக்கும்கூட பிள்ளைகள் புத்தி சொல்லவும் மிரட்டவும் ஒரு காலம் வரும் என்பது நம்ப முடியாததாக இருந்தது.

இந்த இரண்டு மூன்று வருடங்களில் வீட்டிலும் நிறைய மாறுதல்கள் வந்துவிட்டன.

பெரியவன் சொந்தமாக ஒரு பட்டறை போட்டிருந்தான். சின்னவன்களுக்கும் கணிசமாக சம்பளம் கூடியிருந்தது. வரவு செலவெல்லாம் அம்மாவிடம்தான்.

உள்ளார்ந்த பூரிப்பில் உடம்பும் சற்று மினுக்கம் கண்டிருந்தது. ஒவ்வொரு செயலுக்கும் இறை நாமத்தை உச்சரிப்பதும், நபிகளின் வாழ்க்கையிலிருந்து உதாரணம் சொல்பவளாகவும் ஆகி இருந்தாள் சுலையா. பெரியவன் அவளுக்கு வெல்வெட் துணியில் தைத்த தொழுகை விரிப்பு வாங்கிக் கொடுத்திருந்தான். அதில் உட்கார்ந்தபடி தஸ்பீஹ் மணிகளை உருட்டுவதை அடிக்கடிப் பார்க்க நேர்ந்தது. ராபியாவும் "அண்ணே..." என்று குழைவதும், அவன்களும் கைச் செலவுக்கும், ரவிக்கைத் துணிக்கோ வளையல் - ரிப்பன் வாங்கவோ பணம் கொடுப்பதும் நடந்தது.

அவரது இருப்பு ஒரு பொருட்டாக இல்லாத மாதிரிதான் வீட்டு நடப்பு போய்க்கொண்டிருந்தது.

டி.வி.யும் கட்டில் பீரோவும் வாங்கிப் போட்ட பெரியவன் அவரிடம் ஒப்புக்காகக் கூட ஒரு வார்த்தை கேட்கவில்லை. ரம்ஜான் பண்டிகைக்குத் துணிமணி எடுக்க அவரைக் கூப்பிடவில்லை. கணியூர் ஹாஜியார் மகன் கல்யாணத்திற்குச் சுலையாவும், பெரியவனும் மட்டும் போய் வந்தார்கள். நடுவுள்ளவன் நாலைந்து தினங்களாக மொபட்டில் போவதைக் கண்டு, "ஏதுடா..." என்று கேட்டார். "வாங்கிட்டேன்..." என்று சொன்னான். தகப்பனிடம் இதெல்லாம் கேட்டுச் செய்ய வேண்டாமா?

இவன்கள்தான் சின்னப் பையன்கள். இவள் எடுத்துச் சொல்லக் கூடாதா?

சுலையாவே அவர் மீதுள்ள ஈடுபாடு குறைந்தவள் மாதிரிதான் இருந்தாள்.

இதெல்லாம் பார்க்க, ஒவ்வொரு நாள் மண்டைச் சூடு ஏறி விடுகிறது.

இதுகளைக் காப்பாற்ற இத்தனை வருஷம் தான் பட்ட பாடெல்லாம் ஞாபகம் வரும். விருப்பாச்சி, மானூர் சந்தைகளுக்குப் போய் நடந்தே ஆடுகளை ஓட்டி வந்ததையெல்லாம் நினைத்துக் கொள்வார். ஒற்றையாளாக நின்று தோலை உறிக்கும்போது தோள்பட்டை கழன்று போகும். ஒருமுறை கத்தி தவறி விழுந்து காலில் பாதம் பிளந்து விட்டது. தன்னோடு இந்தப் பிழைப்புப் போகட்டும் என்று அப்போதுதான் முடிவு செய்தார். பையன்களை ஒர்க்ஷாப்பில் சேர்த்துவிட்டார். இன்றைக்கு வளர்ந்து ஆளாகி, தன்னையே பதம் பார்க்கிறான்கள்.

அடக்கி வைக்கும் ஆத்திரம் எப்போதாவது வெடிக்கவே செய்கிறது. எல்லாவற்றையும் சேர்த்து சுலையாவை ஒரு பிடி பிடிப்பார். அவர் கத்த ஆரம்பித்ததும் ராபியா கதவையும் ஜன்னலையும் சாத்தி விடுவாள். சுலையா எங்கோ மழை பெய்கிறது நமக்கென்ன என்ற தினுசில் கீரையைக் கிள்ளிக் கொண்டோ, அரிசியில் கல் பொறுக்கியபடியோ பேசாது இருப்பாள்.

அன்றைக்குக் கெட்ட நேரம்தான் போலும். இரண்டு வாரம் முன்பு ராபியாவைப் பெண் பார்த்துவிட்டுப் போயிருந்தார்கள். தகவல் எதுவும் தெரியாமலிருந்தது. சாப்பிட்டு விட்டு பீடி குடித்தபடி வாசலுக்கு வந்தவர், அங்கு சுலையா இருக்கவும் தானாகவே பேச்சை எடுத்தார்.

"போஸ்டல் ஸ்டிரைக் வந்ததுக்கு உங்க கணவர் சந்தோஷப் படறாரா?"

"ஆமா, இந்த இரண்டு வாரத்தில்தான் அவர் கதைத் திரும்பி வரலையாம்!"

— மங்கை

"ஏன் கலையா... மானூர்க்காரங்க எதுனா சொல்லி விட்டாகளா.. ஒண்ணுமே தெரியலையே..."

இதிலெல்லாம் கூட உமக்கு அக்கறை உண்டா என்பதைப் போல கலையா கொஞ்ச நேரம் அவரைப் பார்த்தாள். பின்னர், "அவுகளுக்கு இஷ்டம்தான். பெரியவன் வேணாம்ங்கிறான்" என்றாள்.

"வேணாமா... ஏனாம்?"

"பட்டிக்காடாம்..."

"ஓஹோ... இவரு பட்டினக்கரையாமா?"

"அதென்னமோ... அவனைக் கேளுங்க..."

"எல்லாம் அவருதானா... அப்ப... நான் எதுக்கு இருக்கேன்? குபுக்கென்று மண்டைக்குள் இரத்தம் பாய்ந்தது. "நல்ல இடம்னு வரச் சொன்னது நானு... வேணும் வேணாம்னு என் கிட்ட யாரும் ஒரு வார்த்தை சொல்லலை..."

"கேட்டு என்ன ஆகப் போவுது... அவனுக்குப் புடிக்காம?"

மீண்டும் பையனுக்கே முக்கியத்துவம்



கொடுத்து அவள் பேசியதைத் தாங்க முடியவில்லை.

"பாவம்... சின்னப் பசங்க. நாங்க செய்யறம்னு நிக்கிறானுக. பிடிக்கலைன்னா விட்டுரனும். வெத்து ஆட்டம் போடக் கூடாது." அவரது தன்மானத்தில் அவளது வார்த்தைகள் இடியாக இறங்கவும் என்ன செய்கிறோம் என்று கூடத் தெரியாமல் எட்டி உதைத்தார். உட்கார்ந்த நிலையிலேயே கையைத் திருகி தூக்க முயன்றார். முழங்கையில் படக்கென்று சப்தம் கேட்டது... "அல்லாவே நாயகனே... "கலையா அலறினாள். குரல்வளையில் கத்தியை அழுத்தியதும் துள்ளும் ஆட்டின் கடைசிக் கத்தல் போல, ஈரக்குலையைப் பதற வைக்கும் குரலாக இருந்தது. அவருக்குப் பயமாகி விட்டது.

"எனக்கு இந்தக் குடும்பத்தோட இனிமே எந்த சம்பந்தமும் இல்லை. எப்படியோ நாசமாப் போங்க..."

அச்சமயம் நடுவுள்ளவனின் மொபட் சத்தம் கேட்கவும் வீட்டை விட்டு அவசரமாக வெளியேறினார்.

வீதிக்கு வந்த பிறகு எங்கு போவது என்று தெரியவில்லை. கால் போன போக்கில் இங்கும் அங்குமாக அலைந்துவிட்டு, முத்துவின் டீக்கடைப் பெஞ்சில் வந்து அமர்ந்தார்.

"என்னண்ணே... இன்னைக்கு ஏவாரம் இல்லையா?" என்று கேட்டான் முத்து.

"ஆமாப்பா...." என்றார்.

"அப்ப சரி... கொஞ்ச நேரம் கடையைப் பாத்துக்குங்க. நான் வீடு வரைக்கும் போய்ட்டு வர்றேன்..."

"ம்..."

மனம் கலையாவின் மீதே நிலைத்திருந்தது. இத்தனை வருஷங்களில் நடக்காத சண்டை கிடையாது. ஒரு நாளும் அவள் இப்படி அலறியது கிடையாது. ஏதோ விபரீதம்தான் இது.

முத்து கொஞ்ச நேரத்தில் வந்துவிட்டான். சைக்கிளை விட்டு இறங்கும்போதே, "அண்ணே... உங்க சம்சாரம் கீழே விழுந்து கை உடைஞ்சு போச்சாம். ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போறாங்க... போங்க..." என்றான்.

ஒரு நொடி துடிப்பு நின்ற மாதிரி இருந்தது.

"எந்த ஆஸ்பத்திரி?" என்று கேட்டார்.

சொன்னான்.

ஓட்டமும் நடையுமாகக் கிளம்பினார்.

தன்னைக் கல்யாணம் செய்து கலையா என்ன சுகத்தைக் கண்டுவிட்டாள். பாவம் அடி உதையும், வறுமையையும் சகித்து காலத்தை ஓட்டி விட்டாள். பிள்ளைகள் தலையெடுத்த பிறகுதான் ஏதோ கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறது. அதையும் தனது மூர்க்கத்தனத்தால் அழிப்பது என்ன மடத்தனம்?

ஆஸ்பத்திரியை நெருங்கியதும் மனது படபடத்தது. பையன்களுக்குத் தன்னைப் பார்த்ததும் கோபம் எகிறப் போகிறது. கை வைத்தாலும் ஆச்சரியமில்லை.

வைக்கட்டும். பிள்ளைகளிடம் அடி வாங்கியாவது தனக்குப் புத்தி வரட்டும். வெள்ளை கவுன் போட்ட பெண்ணிடம் விசாரித்துக் கொண்டு முதல் மாடிக்குப் போனார்.

வார்டு பகுதிக்குத் திரும்புகிறபோது நடுவன்தான் முதலில் கண்ணில் பட்டான். உசேன் பாய் தலையைக் குனிந்துகொண்டார்.

"அஞ்சாம் நம்பர் ரூம்ல இருக்கு. இப்படிப் போங்க." கை காட்டிவிட்டு, விடு விடுவென்று கீழே இறங்கிப் போனான் நடுவன். தலைமுறைகளாக நீளும் தகப்பன் மகன் உறவின் கௌரவத்தைத் தனது விலகலில் அவன் உணர்ச்சி விட்டுப் போகிற மாதிரி இருந்தது உசேன் பாய்க்கு.

ஐந்தாம் நம்பர் அறைக்குப் போக முடியாமல் பாதங்கள் தள்ளாடுவதைப் போலிருந்தது அவருக்கு. ○









தொண்ணூற்று ஒன்றாம் அத்தியாயம்

மலர் உதிர்ந்தது!

வந்தியத்தேவன் ஓலையை வாங்கிக்கொண்டு வானதியைப் பார்த்து, "இளவரசி! என்னைத் தங்களுக்கு நினைவிருக்கிறதா? அடியோடு மறந்து விட்டீர்கள் என்றல்லவோ நினைத்தேன்?" என்றான்.

"ஐயா! தங்களை எவ்வாறு நான் மறக்க முடியும்? எனக்கும் என் கணவருக்கும் தாங்கள் செய்துள்ள உதவிகளைத்தான் எப்படி மறக்க முடியும்?" என்றான் வானதி.

"அதனாலேதான் நான் இல்லாத சமயம் பார்த்துத் தங்கள் திருமணத்தை நடத்திக் கொண்டீர்களாக்கும்!" என்றான்.

வானதி குறும்புப் புன்னகையுடன், "ஆமாம்; தாங்கள் இருந்திருந்தால் பொன்னியின் செல்வரின் மகுடாபிஷேகத்தைப் போல் திருமணமும் நடந்திருக்கலாம் அல்லவா? தாங்கள் என்ன சூழ்ச்சி செய்திருப்பீர்களோ, என்னமோ, அதை யார் கண்டது?" என்றாள்.

"நானா பொன்னியின் செல்வருக்கு மகுடாபிஷேகம் நடக்காதபடி செய்தேன்? பூங்குழலியிடம் போட்டி போட்டுக்கொண்டு தாங்கள் 'சிங்காதனம் ஏறுவதில்லை' என்று செய்த சபதம் அல்லவா அதற்குக் காரணம்? படகுக்காரப் பெண்ணுக்கு அதிர்ஷ்டம் அடித்தது! என் மீது குறைப்பட்டு என்ன பயன்?" என்றான் வந்தியத்தேவன்.

"அவளே அந்த அதிர்ஷ்டத்தை

அமரர் கல்கி





அநுபவிக்கட்டும்! அதற்காக அவள் பேரிலும் எனக்குக் குறை இல்லை; தங்கள் பேரிலும் குறை இல்லை. மகிழ்ச்சிதான். ஆனால் தங்களுடைய திருமணத்துக்கு நாள் குறிப்பிடும்போது மட்டும் நல்ல சோதிடராகப் பார்த்து நாள் குறிப்பிடச் செய்யுங்கள்!'' என்றாள்.

''குடந்தை சோதிடரையே நாள் வைக்கச் சொன்னால் போகிறது! தங்களுக்கெல்லாம் அவரிடத்திலே தானே நம்பிக்கை!'' என்று வானதியைப் பார்த்துச் சொன்னான் வந்தியத்தேவன்.

வானதி கவீர் என்று சிரித்துவிட்டு இளைய பிராட்டியை நோக்கி, ''அக்கா! இவர் குடந்தை சோதிடரைப் பற்றிச் சொன்னதும் ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது!'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் கலகலவென்று சிரித்தாள்.

''எதை நினைத்துக்கொண்டு சிரிக்கிறாய், வானதி! 'உன் வயிற்றிலே பிறக்கப் போகிற பிள்ளை மூன்று உலகத்தையும் ஆளப் போகிறான்' என்று அந்த ஜோசியர் உளறினாரே, அதை எண்ணிச் சிரிக்கிறாயா?'' என்றாள் குந்தவை.

''அதை ஏன் உளறல் என்கிறீர்கள், தேவி? அந்த ஜோசியம் பலிக்கப் போகிறது!'' என்றான் வந்தியத்தேவன்.

வானதி தன்னையறியாமல் ஏற்பட்ட கூச்சத்தில் சிரிப்பை அடக்கிக்கொண்டாள். பிறகு, ''அக்கா! நான் ஒன்று சொல்ல வந்தால், தாங்கள் பேச்சை வேறு பக்கம் திருப்புகிறீர்களே? குடந்தை சோதிடரிடம் நான் 'இளைய பிராட்டிக்குத் தகுந்த கணவர் எங்கிருந்து வரப் போகிறார்?' என்று கேட்டேன். 'இந்த நிமிஷமே ஆகாசத்திலிருந்து வந்து குதித்தாலும் குதிப்பார்!' என்றார்



ஜோசியர். மறுநிமிடம் இவர் ஜோசியருடைய சீடனுடன் சண்டையிட்டுக் கொண்டே உள்ளே வந்து குதித்தார்! அந்தச் சம்பவத்தை நினைத்துச் சிரித்தேன்!'' என்றாள்.

குந்தவை பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு கள்ளக் கோபத்துடன், "போதும் உன் விளையாட்டு! அவசரமாக வந்திருக்கும் ஓலையை இவர் படிக்கட்டும்!'' என்றாள்.

வந்தியத்தேவன் ஓலையைப் படித்தபோது அவனுடைய முகத்தில் தோன்றிய கவலைக் குறியை இரண்டு பெண்மணிகளும் கவனித்தார்கள்.

"என்ன சேதி? கந்தமாறன் என்ன எழுதியிருக்கிறான்?'' என்று இளைய பிராட்டி ஆர்வத்துடன் கேட்டாள்.

"தாங்களே படித்துப் பாருங்கள்!'' என்று வந்தியத்தேவன் ஓலையைக் குந்தவையிடம் கொடுத்தான்.

ஓலையில் பின்வருமாறு எழுதியிருந்தது:

"என் அருமைத் தோழனாகிய வல்லவரையன் வந்தியத்தேவனுக்கு, நான் உனக்குச் செய்த குற்றங்களையும் இழைத்த அநீதிகளையும் மன்னித்து விட்டு, என் சகோதரி மணிமேகலையைக் கடைசி முறை பார்ப்பதற்காக உடனே புறப்பட்டு வந்து சேரவும். இளஞ் சம்புவரையன் கந்தமாறன்.

"குந்தவை அதைப் படித்துவிட்டு, "ஒருவிதத்தில் இது நல்ல செய்திதான். மணிமேகலை அகப்பட்டு விட்டாள் என்று தெரிகிறது!'' என்றாள்.

"அது என்ன? மணிமேகலை எங்கே போயிருந்தாள்?'' என்று வந்தியத்தேவன் வியப்புடன் வினாவினான்.

"மணிமேகலையைப் பற்றிய செய்தி ஒன்றுமே தங்களுக்குத் தெரியாதா?''

"தெரியாது! தங்களைக் கேட்கவே எண்ணியிருந்தேன்.''

"நானும் சொல்ல விரும்பினேன். ஆனால் இவ்வளவு கல் நெஞ்சுடன் அவளைப் பற்றி விசாரிக்காமலிருப்பவரிடம் எப்படி அவள் பேச்சை எடுப்பது என்று தயங்கினேன்.''

"தேவி! மணிமேகலை விஷயத்தில் நான் கல்நெஞ்சனாவது எப்படி? அவளைப் பொறுத்த வரையில் நான் இறந்தவனாகி விட்டேன் அல்லவா?''

"இல்லை; அவளுக்குத் தாங்கள் இறந்தவராகவில்லை. இறவாத வரம் பெற்ற அமரராகி விட்டீர்கள்!''

"போகட்டும்; இப்போதாவது மணிமேகலையைப் பற்றிச் சொல்லுங்கள்.''

"சொல்லுவதற்கே வருத்தமாயிருக்கிறது. செம்பியன்மாதேவி, மணிமேகலை தம்முடன் இருக்கட்டும் என்று எவ்வளவோ சொன்னார். சம்புவரையர் அதற்கு இணங்கவில்லை. கந்தமாறன் எல்லைப் பாதுகாப்புக்குப் போய்விடுவான் என்றும், தம் புதல்வியாவது தம்முடன் இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி அழைத்துச் சென்றார். கடம்பூர் மாளிகை எரிந்து போய் விட்டபடியால் பாலாற்றின் வடகரையில் புதிய மாளிகை கட்டிக் கொள்ளச் சக்கரவர்த்தியின் அனுமதியும் பெற்றுக்கொண்டு புறப்பட்டார். வழியில் வீர நாராயணபுரத்துக்கு அருகில் இரவு நேரத்தைக் கழிப்பதற்காகக் கூடாரம் போட்டுக் கொண்டு தங்கினார். மறுநாள் பொழுது விடிந்து பார்த்தால் மணிமேகலையைக் காணவில்லையாம். ஒருவேளை இங்கே திரும்பி ஓடி வந்து விட்டாளோ என்று பார்ப்பதற்காக ஆள் அனுப்பினார். இங்கே வரவில்லை என்று சொல்லி அனுப்பினோம். அது முதல் எங்களுக்கெல்லாம் ஒரே கவலையாக இருந்தது. ஒருவேளை வீர நாராயண ஏரியில் விழுந்து உயிரையே மாய்த்துக் கொண்டிருப்பாளோ என்று நினைத்து நினைத்து வருந்தினோம். நாலா திசையிலும் ஆள்கள் தேடிக் கொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. கந்தமாறனுடைய ஓலையிலிருந்து மணிமேகலை இருக்குமிடந் தெரிந்து அவளைக் கண்டுபிடித்து விட்டார்கள் என்று தோன்றுகிறது.

"அவளை நான் போய்ப் பார்ப்பதி

லேதான் என்ன பயன்? என்னை அவள் தெரிந்து கொள்ளப் போவதில்லை!'' என்றான் வந்தியத்தேவன்.

''இருந்தாலும் தாங்கள் அவசியம் போக வேண்டும். 'கடைசி முறையாக' என்று கந்தமாறன் எழுதியிருக்கிறான். அதன் பொருள் என்னவோ தெரியவில்லை'' என்றாள் குந்தவை.

''அக்கா! இவர் கொஞ்சமும் ஈவு இரக்கம் அற்றவர். மணிமேகலையின் அன்புக்குக் கொஞ்சமும் பாத்திரமில்லாதவர். ஒவ்வொரு அன்புக்காகப் பெரிய சாம்ராஜ்யத்தையே தியாகம் செய்கிறார்கள். இவரோ ஒரு பிரயாணம் செல்வதற்குக் கூடத் தயங்குகிறார்!'' என்று வானதி ஒரு போடு போட்டாள்.

வந்தியத்தேவன், ''இளவரசி! உலகத்தில் இராஜ்யங்கள் கொஞ்சமாகத்தான் இருக்கின்றன. ஆகையால் அன்புக்காக இராஜ்யத்தைத் தியாகம் செய்கிற காரியம் சிலராலேதான் முடியும். ஆனால் முதலில் தாங்கள் கூறியது உண்மையே. மணிமேகலையின் அன்புக்கு நான் சிறிதும் தகுதியில்லாதவன். தெய்வத்தினிடம் வைக்க வேண்டிய காதலை அவள் என்னிடம் வைத்துவிட்டாள். நான் தேவனல்ல; குற்றம் குறைகள் உள்ள சாதாரண மனிதன். மணிமேகலையின் அன்பு கடவுளுக்கு அர்ப்பணமாக வேண்டியது!'' என்றான்.

''இருந்தாலும் தாங்கள் ஒரு தடவை அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வருவதில் தவறு ஒன்றுமில்லையே. கந்தமாறனும் 'கடைசித் தடவையாக' என்று தானே எழுதியிருக்கிறான்?'' என்றாள் இளையபிராட்டி குந்தவை.

''நான் போக மாட்டேன் என்று சொல்லவில்லையே? போவதில் பயன் உண்டா என்றுதான் சந்தேகிக்கிறேன். நான் அவளுக்கு இறந்து போனவன் ஆயிற்றே என்று தயங்குகிறேன். ஆயினும் 'கடைசித் தடவையாக' என்று கந்தமாறன் எழுதியிருப்பதின் பொருள் நன்றாக விளங்கவில்லை. அப்புறம் அவளைப் பார்க்கக்கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப் போகிறானா என்ன? அல்லது புத்த மதத்தாரின் கன்யா மாடத்தில் அவளைக் கொண்டு போய்ச் சேர்த்து விடப் போகிறானா?''

''தாங்கள் ஒருநாள் பிரயாணம் செய்தால் எல்லாம் தெரிந்து விடுகிறது!'' என்றாள் இளையபிராட்டி குந்தவை.

வந்தியத்தேவன் பழையாறையிலிருந்து வீர நாராயணபுரத்துக்கு ஒருநாள்தான் பிரயாணமும் செய்தான். ஆனால் முன் முறைகளில் போலன்றி இந்தத் தடவை அந்த ஒருநாள் ஒரு யுகம் செல்வது போல் சென்றது. அவனுடைய உள்ளத்தில் அவ்வளவு நினைவுகளும் அனுபவங்களும் குமுறிக்கொண்டிருந்தன. முதன்முதலில் அவன் இந்த வழியாகத் தஞ்சை சென்றபோது எத்தனையோ இனிய காட்சிகளைக் கண்டான்; எவ்வளவோ ஆகாசக் கோட்டைகள் கட்டினான். அவையெல்லாம் ஆகாசக் கோட்டைகளாகப் போய்விடவில்லை. நடக்க முடியாத பல காரியங்கள் நடந்தேறி விட்டன. சோழ நாட்டின் செல்வக் குமாரரை, தமிழகமெல்லாம் போற்றிக் கொண்டாடிய வீர இளவரசரை, தன் கையில் வந்த சாம்ராஜ்ய மகுடத்தை இன்னொருவர் சிரஸில் சூட்டி அதனால் மேருமலையை விட உயர்ந்து தியாக சிகரமாக விளங்கும் பொன்னியின் செல்வரை அவன் உயிர் நண்பராகப் பெற்றான். அத்தகைய பொன்னியின் செல்வர் போற்றி வணங்கும் இளையபிராட்டியின் இதயத்தில் இடம் பெற்றான். ஈழ நாட்டிலுள்ள சோழ சைன்யத்தின் மாதண்ட நாயகன் பதவியை அடைந்தான். இவ்வளவும் தன் சாமர்த்தியத்தினால் என்று சொல்ல முடியுமா? ஒரு நாளுமில்லை. கடம்பூர் மாளிகைக்கு அன்றிரவு தான் தற்செயலாகப் போய்ச் சேர்ந்ததும், அங்கே சிற்றரசர்கள் செய்த சதியாலோசனையை அறிந்ததும் பின்னால் தொடர்ந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணமாயின. இந்த எட்டு மாத

காலத்துக்குள் எவ்வளவு எவ்வளவோ காரியங்கள் நடந்துவிட்டன. அவற்றில் சில மிக முக்கியமானவை. வானத்தில் தோன்றிய தூமகேது தன்னுடைய விபரீதச் செயலைப் புரிந்துவிட்டு மறைந்தது. ஆதித்த கரிகாலர் மறைந்துவிட்டார். வால் நட்சத்திரத்துக்கும் ஆதித்த கரிகாலருக்கும் சம்பந்தம் இருக்க முடியுமா? லட்சக்கணக்கான மக்கள் அத்தகைய நம்பிக்கை கொண்டிருப்பது பொய்யாகுமா? வானத்தில் ஊழி காலம் சஞ்சரிக்கும் கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் இந்த மண்ணுலகில் இன்று தோன்றி நாளை மறையும் மனிதர் வாழ்வுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? ஆயினும், மனிதர்கள் அறிய முடியாத ஏதோ ஒரு அதிதமான சக்தி, ஏதோ ஒரு மாற்றுதற்கரிய நியதி மனிதர் வாழ்வை நடத்தி வைக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் சென்ற எட்டு மாதங்களில்தான் எத்தனையோ இடுக்கண்களில் அகப்பட்டுக் கொண்டு அவற்றிலிருந்து எவ்வாறு மீண்டிருக்க முடியும்? எத்தனை எத்தனை பேர் அந்தந்த இடுக்கண்களிலிருந்து தப்பித்துக் கொள்ளத் தனக்கு உதவி செய்திருக்கிறார்கள்! அவர்களையெல்லாம் அந்தந்தச் சமயத்தில் தனக்கு உதவி புரிவதற்காகக் கொண்டு வந்து சேர்த்தது யார்? அந்த அதிசயமான சக்தியைத்தான் பெரியோர்கள் இறைவன் என்று போற்றி வணங்குகிறார்களா? சிவன், திருமால், மகாசக்தி என்றெல்லாம் பெயர் கொடுத்துப் பாடிப் பரவுகிறார்களா?

மிக மிக நெருக்கமான சந்தர்ப்பங்களில் அவனுக்கு எதிர்பாராதவிதமாகக் கிடைத்த உதவிகளை நினைத்தபோது வந்தியத்தேவனுக்கு ஒரே வியப்பாயிருந்தது. உதவி செய்தவர்களை நினைத்தபோது உள்ளம் உருகியது. கந்தமாறன் பின்னால் தனக்கு எவ்வளவு தீங்கிழைத்தபோதிலும் முதலில் அவன் செய்த உதவியை என்றும் மறக்க இயலாது. ஆழ்வார்க்கடியான் அவனுக்கு எவ்வளவோ சகாயம் புரிந்தான். மோகினி உருக்கொண்ட ராட்சஸி நந்தினியும் அவனுக்கு உதவினாள்! அவளிடம் இளையபிராட்டி இன்னமும் கொண்டிருக்கும் உள்ளக் கனிவை நினைத்து நினைத்து அவன் வியந்தான். ஓடக்காரப் பெண் பூங்குழலி செய்திருக்கும் உதவியை ஈரேழு பிறவிகளிலும் மறக்க முடியாது. அவள் சோழ சாம்ராஜ்ய சிங்காதனத்தில் வீற்றிருக்கத் தகுதி வாய்ந்தவளே.



சேந்தன் அமுதனாக முதலில் அவன் அறிந்த உத்தமச் சோழர் செய்த உதவியை என்னவென்று சொல்வது? அதற்கு ஈடு இணை உண்டா? அவரை வைத்தியர் மகனின் ஈட்டியிலிருந்து காப்பாற்றியதனால் தன் நன்றிக் கடனைச் செலுத்தி விட்டதாகுமா? ஒரு நாளுமில்லை. தன் உடலில் உயிர் உள்ள வரையில் சோழ குலத்துக்குத் தொண்டு செய்வதின் மூலமாகத்தான் அந்தக் குலத்துக்குத் தான் பட்ட கடனைத் தீர்க்க முடியும். அப்புறம் தனாதிகாரி



பெரிய பழுவேட்டரையர்! தமது நெடிய திருமேனியில் அறுபத்து நாலு போர்க்காயங்களைத் தாங்கிய அந்த மகா வீரரைப் பார்க்கக் கொடுத்து வைத்தால், அதுவே தான் செய்த பெரும் பாக்கியம் என்று அவன் நினைத்திருந்த காலம் உண்டு. அவரைப் பார்த்ததுமல்லாமல் அவருடைய அநாவசியமான கோபத்துக்கும் துவேஷத்துக்கும் அவன் உள்ளாக நேர்ந்தது. கடைசியாக, அவ்வளவுக்கும் அவர் பரிகாரம் செய்துவிட்டார். தான் எறிந்த கத்தி குறி தவறி ஆதித்த கரிகாலரைக் கொன்று விட்டதாக ஒப்புக்கொண்டு அவனை விபரீதமான பழியிலிருந்தும் கொடுந் தண்டனையிலிருந்தும் காப்பாற்றினார்! அவர் அல்லவோ மகான்? இனி அவருக்கு எந்தவிதத்தில் அவனுடைய நன்றியைச் செலுத்த முடியும்?

இவர்கள் எல்லாருமிருக்கட்டும். அந்தப் பேதைப் பெண் மணிமேகலை! அவள் எதற்காக இவனிடம் இத்தகைய தெய்வீகமான அன்பு வைக்க வேண்டும்? ஏன் இப்படி பைத்தியமாக வேண்டும்? இவனைக் காப்பாற்ற வேண்டிக் கொலைக் குற்றத்தைத் தான் ஏற்றுக் கொள்ள ஏன் முன் வர வேண்டும்?

எல்லாம் அந்த மூடன் கந்தமாறனால் வந்த வினை. முதலில் கந்தமாறன் மணிமேகலையிடம் இவனைப் பற்றி இந்திரன் - சந்திரன், அர்ச்சுனன் - மன்மதன் என்றெல்லாம் புகழ்ந்திருக்கிறான். அப்போதே அந்தப் பேதைப் பெண் அவளுடைய உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாள் போலும்! அதெல்லாம் வந்தியத்தேவனுக்குத் தெரியாது.

''என் தங்கையை நீ மறந்துவிடு! பெரிய இடத்தில் அவளைக் கொடுக்கப் போகிறோம்!'' என்று கந்தமாறன் சொன்னதும் வந்தியத்தேவன் உண்மையாகவே அவளை மறந்துவிட முயன்றான். இளையபிராட்டியைச் சந்தித்ததும் அதற்குத் துணையாயிருந்தது. ஆனால் மணிமேகலையோ தன் மனத்தை மாற்றிக் கொள்ளவில்லை; மாற்றிக் கொள்ள முயலவும் இல்லை. பலர் அறிய அவள் உள்ளத்தை வெளிப்படுத்தத் தயங்கவும் இல்லை. ஆகா! என்ன இனிய குணம் படைத்த பெண்! எவ்வளவு அடக்கம், அமரிக்கை! அவளுடைய மனந்தான் எத்தனை தூய்மையானது! பச்சைக் குழந்தையைப் போன்ற உள்ளம்! உண்மையிலேயே அவள் குழந்தைதான்! பால் போன்ற மனம்; அதில் பல குறும்புத்தனம். தன்னை இறந்துவிட்டவனாக அவள் எண்ணிக் கொண்டிருப்பது மிக்க நல்லது. எப்போதுமே சித்தப் பிரமை கொண்டவளாக அவள் இருந்து விட மாட்டாளே! சில காலம் போனால் உள்ளம் தெளிந்து விடும். வேறொரு வீர வாலிபனை மணந்து அவள் ஆனந்த வாழ்க்கை நடத்துவாள்...! உண்மையில், இப்படி நடக்குமா? அல்லது என்னை நானே ஏமாற்றிக் கொள்கிறேனா? மணிமேகலையை இந்த நிலைக்கு உள்ளாக்குவதற்கு நான் பொறுப்பாளியாவேனா? 'கடைசி முறை பார்ப்பதற்கு வரவும்' என்று கந்தமாறன் எழுதி இருப்பதின் பொருள் என்ன? ஒருவேளை... ஒரு

வேளை... ஆகா! அந்த எண்ணமே எவ்வளவு வேதனை தருகிறது!

வந்தியத்தேவனுடைய எண்ணங்களின் வேகத்தையொட்டி அவன் ஏறியிருந்த புரவியும் வேகமாகச் சென்றது. நல்ல வேளையாக, கொள்ளிட நதியில் பெரு வெள்ளம் போகவில்லை. படகும் தேவையாக இல்லை; குதிரை மாற்ற வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. கரையோரமாகச் சென்றுகொண்டிருந்த சிறிய பிரவாகத்தில் குதிரையை இறக்கி விட்டுக் கடந்து, பரந்து விரிந்திருந்த வெண் மணல் திட்டுக்களையும் கடந்து அக்கரையை அடைந்தான்.

கடம்பூர் மாளிகை தீயில் எரிந்து கரி ஏறிய சில தூண்களும் சுவர்களுமாக நின்ற கோரக் காட்சியைத் தூரத்திலிருந்தே பார்த்துவிட்டு மேலே சென்றான். வீர நாராயணபுரத்துக்கு அருகிலேயே கந்தமாறனுடைய ஆட்கள் அவனுக்காகக் காத்திருந்தார்கள். "சின்ன எஜமானர் எங்கே?" என்று கேட்டதற்கு, "ஏரிக்கரையில் படகுடன் காத்திருக்கிறார்கள்!" என்று பதில் வந்தது.

ஏரிக்கரையில் எதற்காகக் காத்திருக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டே வந்தியத்தேவன் வீர நாராயண ஏரியை அணுகினான். அந்த ஏரியின் நெடிதுயர்ந்த கரை ஒரு பெரும் கோட்டைச் சுவர் போன்ற அப்பாலிருந்த தண்ணீர்ப் பரப்பை மறைத்துக்கொண்டிருந்தது. முதல் தடவை அந்த ஏரிக்கரைக்கு அவன் வந்தபோது, பதினெட்டாம் பெருக்கு விழாவுக்காக அங்கே மக்கள் திரண்டு இருந்ததையும், ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கோலாகலமாக ஆடிப் பாடி விளையாடி விருந்துண்டு மகிழ்ந்ததையும் நினைவு கூர்ந்தான். இப்போது அந்த ஏரிக்கரையில் அதிக ஜனங்களைக் காணவில்லை. அங்கொருவர் இங்கொருவர்தான் காணப்பட்டார்கள். ஏரியில் எல்லா மடைகளிலிருந்தும் அச்சமயம் தண்ணீர் குபுகுபுவென்று பாய்ந்துகொண்டிருந்தது. அவ்விதம் தண்ணீர் பாயும் ஓசை சந்தை இரைச்சல் போன்ற பேரொலியாகக் கேட்டது. இச்சமயம் ஒரு சில கணவாய்களிலிருந்து மட்டும் மெல்லிய சலசல ஒலியுடன் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. ஏதோ சோக கீதத்தைப் பாடிக்கொண்டு நடனம் ஆடும் நாட்டியப் பெண்ணின் சிலம்பின் புலம்பலைப் போல் அது தொனித்தது.

செங்குத்தாக உயர்ந்த ஏரிக்





கரையில் மேல் குதிரையை லாவகமாக வந்தியத்தேவன் ஏற்றி உச்சியை அடைந்தான். அங்கிருந்து அவன் கண் முன் தோன்றிய காட்சியும் மாறுதலாகவே இருந்தது. தண்ணீர் நிறைந்து ததும்பி ஏரிக்கரையை உடைக்க முயல்வது போல் அலைமோதிக் கொண்டிருக்கவில்லை. கரையின் அடிப் பகுதியிலிருந்துதான் தண்ணீர்ப் பரப்பு தொடங்கியது. தண்ணீரின் செங்காவி நிறம் அடியோடு மாறிப் பளிங்கு போல் தெளிந்திருந்தது. கரையோரமாக அல்லியும், செங்கழு நீரும், தாமரையும், நீலோத்பலமும் இளம் இலை, முற்றிய இலை, இளம் மொட்டு, பாதி விரிந்த மொட்டு, முழுதும் மலர்ந்த மலர் என்று இவ்வளவு பிரிவினையுடன் அடர்ந்து தழைத்திருந்தன. சிற்சில இடங்களில் தண்ணீரே அவற்றினால் மூடப்பட்டிருந்தது.

ஏரியின் தென் கரை ஓரமாக வடவாற்றிலிருந்து நீரோட்டம் சுழிகளும் சுழல்களுமாக வந்து ஏரி நீரில் கலந்து கொண்டிருக்கவில்லை. அந்த ஆற்று நீரோட்டத்தின் வழியாக வெண் சிறகு விரித்த அன்னப் பட்சிகளைப் போல் படகுகள் மிதந்து வந்து கொண்டிருக்கவுமில்லை. நதியின் வெள்ளம் ஓடிக் கொண்டிருந்த ஏரி ஓரப் பகுதிகளில் இப்போது மரங்களும் செடிகளும் நாணற் புதர்களுமாகக் காட்சி அளித்தன. அவற்றின் இடையிடையே வெள்ளைக் கொக்குகளும் நாரைகளும் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்து கொண்டிருந்தன.

இவற்றையெல்லாம் கவனிப்பதற்கு வந்தியத்தேவனுக்குச் சில வினாடிகளுக்கு மேலாகவில்லை. அதற்குள் சற்றுத் தூரத்தில் ஏரிக் கரையோரமாக நின்ற படகு அவன் காட்சிக்கு வந்தது. அந்தப் படகில் இருப்பவர்களில் ஒருவன் கந்தமாறன் என்பதையும் தெரிந்துகொண்டான். உடனே அந்த இடத்தை நோக்கிக் குதிரையை விரைந்து செலுத்தினான். குதிரையின் மேலிருந்து தாவிக் குதித்துப் படகை அணுகினான். கந்தமாறன் ஒரு கையை நீட்டி வந்தியத்தேவன் கரத்தைப் பிடித்துப் படகில் ஏற்றிக்கொண்டான். படகுக்காரர்களுக்குப் படகை விடும்படி சமிக்ஞை செய்துவிட்டு வந்தியத்தேவனைக் கண்ணீர் ததும்பிய கண்களால் சோகமாகப் பார்த்தான்.

''நண்பா! சீக்கிரமாகவே வந்துவிட்டாய்! மிக்க வந்தனம்! இன்று வராமல் நாளைக்கு நீ வந்திருந்தால் ஒரு வேளை மணிமேகலையை உயிருடன் பார்த்திருக்க முடியாது!'' என்றான்.

வந்தியத்தேவன் கல் நெஞ்சுபடைத்தவன் என்பது உண்மைதான்! நெஞ்சில் அவ்வளவு உறுதியில்லாவிட்டால், சென்ற எட்டு மாதத்தில் அவன் அத்தனை காரியங்களை- அலட்சியமாகச் செய்திருக்க முடியுமா? தனக்கோ மற்றவர்களுக்கோ நேரக்கூடிய அபாயங்களைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் உயிரைத் திரணமாக மதித்துப் பல நெருக்கடியான சந்தர்ப்பங்களில் நடந்து கொண்டிருக்க முடியுமா?

அத்தகைய நெஞ்சுறுதி படைத்தவன் கந்தமாறனின் வார்த்தைகளைக் கேட்டுக் கலங்கிவிட்டான். 'கடைசித் தடவை பார்ப்பதற்கு' என்று கந்தமாறன் எழுதியதின் பொருள் இப்போது ஐயமின்றி விளங்கிவிட்டது. அவனுடைய கண்களில் கண்ணீர் ததும்பிக் கலகலவென்று கன்னங்களில் வழிந்து ஓடியது.

"கந்தமாறா! மணிமேகலையின் உயிருக்கே ஆபத்தா? அது எப்படி? அவள் சித்தந்தானே தவறியிருந்தது? அதுவும் உன்னையும் என்னையும் பற்றித்தானே?" என்று தத்தளிப்புடன் வினவினான் வந்தியத்தேவன்.

''நண்பா! இப்போது மணிமேகலையின் சித்தம் தெளிந்துவிட்டது. ஆனால் இன்னும் எத்தனை நேரம் உயிரோடிருப்பாளோ தெரியாது. உன்னைப் பார்க்கும் வரையில் உயிரோடிக்க வேண்டுமென்று தெய்வங்களையெல்

லாம் வேண்டிக் கொள்கிறேன்!'' என்று சொன்னான் கந்தமாறன்.

பிறகு அவன் அறிந்தபடி நடந்த சம்பவங்களைப் பின்வருமாறு கூறினான்:-

காஞ்சியில் கந்தமாறன் சக்கரவர்த்தி வந்து தங்குவதற்காகப் பொன் மாளிகையைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தான். அப்போது சம்புவரையர் மணிமேகலையையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டதாகக் கேள்விப்பட்டான். அதற்குச் சற்றுப் பிறகு, வீர நாராயண ஏரிக் கரையில் மணிமேகலை காணாமற் போய்விட்டாள் என்ற செய்தியும் கிடைத்தது. உடனே பார்த்திபேந்திரனிடம் விடைபெற்றுக் கொண்டு தங்கையின்





கதியை அறிவதற்காகப் புறப்பட்டு ஓடி வந்தான். அவனுடைய தந்தை துயர மிகுதியினால் ஏறக்குறைய பித்துப் பிடிக்கும் நிலையிலிருந்தார். 'இரவில் கூடாரத்திலே படுத்தாள்; பொழுது விடிந்தால் காணவில்லை'' என்பதைத் தவிர அவரிடமிருந்து வேறு தகவல் எதுவும் கிடைக்கவில்லை. பழையாறைக்கு ஆள் விட்டிருப்பதாகக் கூறினார். எரிந்து பாழாய்க் கிடந்த கடம்பூர் மாளிகையிலும் சுற்றுப் புறங்களிலும் தேடிப் பார்த்தாகி விட்டதென்றும் சொன்னார். பழையாறைக்கு அவள் திரும்பிப் போயிருப்பாள் என்று கருத வில்லை. ஏரியில் விழுந்து முழுகியிருக்கலாம் என்றும், தேடிப் பார்த்து அவளுடைய உடலையாவது கண்டுபிடிக்க வேண்டுமென்றும் எண்ணினான். ஒரு வேளை உயிருடனே ஏரியைச் சூழ்ந்திருந்த காடுகளில் அவள் சுற்றி அலைந்து கொண்டிருக்கலாம் என்ற ஆசையும் அவன் மனத்தில் இருந்தது.

ஏரிக்கரையோடு சுற்றிச் சுற்றி அலைந்து தேடினான். ஏரியிலிருந்து கிளம்பிய கணவாய்களோடு சிறிது தூரம் சென்று தேடினான். ஏரியில் குறுக்கு நெடுக்காகவும் கரையோரமாகவும் படகு விட்டுக் கொண்டு போய்த் தேடினான். இம் மாதிரி சுமார் நாலு தினங்கள் பயனற்ற தேட்டத்தில் சென்ற பிறகு, ஏரியின் மேற்புறத்துத் தீவு ஒன்றில் அமைத்திருந்த நீராழி மண்டபத்தின் நினைவு கந்தமாறனுக்கு ஏற்பட்டது. வேட்டையாடப் போன கரிகாலனும் வந்தியத்தேவனும் நீர் விளையாடச் சென்ற நந்தினியும் மணிமேகலையும் அந்த நீராழி மண்டபத்தில் ஒருநாள் சந்தித்துப் பொழுது போக்கியதும் நினைவு வந்தது. மணிமேகலை அந்த இடத்துக்குப் படகின் உதவியில்லாமல் தனியாகப் போய்ச் சேர்ந்திருப்பது அசாத்தியமான காரியம். கரடி, சிறுத்தை முதலிய வனவிலங்குகள் நிறைந்த மேற்குப் பகுதிக் காட்டின் வழியாக அவள் தன்னந்தனியாக அங்கே சென்றிருக்க முடியுமா? காட்டைக் கடந்திருந்தாலும் வழியில் சிறு கால்வாய்கள் பலவற்றைக் கடக்க வேண்டியிருந்திருக்குமே? இருந்தாலும், அதையும் பார்த்து விடலாம்என்று எண்ணிக் கந்தமாறன் படகில் ஏறி அந்த நீராழி மண்டபத்தை அடைந்தான். மண்டபத்தை நெருங்கியதும் பழைய நினைவுகள் பல அவன் உள்ளத்தில் குமுறிக் கொண்டு தோன்றின. முதலில் மண்டபம் சூனியமாகவே காணப்பட்டது. யாரும் அங்கேயிருப்பதாகத் தோன்றவில்லை. மண்டபப் படித்துறையில் இறங்கி நின்று தான் கட்டிய மனக் கோட்டைகள் எல்லாம் வீணாய்ப் போனதை எண்ணிப் பெருமூச்சு விட்டான். அவனுடைய பெருமூச்சின் எதிரொலியைப் போல் மற்றொரு பெருமூச்சின் ஒலி கேட்டுத் திடுக்கிட்டான். ஓடிப் போய் பார்த்தான். நீராழி மண்டபத்தின் மறு பக்கத்துப் படிக்கட்டில் மணிமேகலை கிடந்தாள். ஒட்டி உலர்ந்து வாடி வதங்கிக் கிடந்தாள். அவள் சேலை பல இடங்களில் கிழிந்திருந்தது. அவள் மேனியில் பல இடங்களில் கீறல்கள் காணப்பட்டன. முதலில் அந்த உடம்பில் உயிர் இருப்பதாகவே தோன்றவில்லை. பலநாள் பட்டினி கிடந்து திக்குத் திசை தெரியாமல் காட்டில் அலைந்து கடைசியில் களைத்து விழுந்து இறந்து போனவளின் உடலாகவே தோன்றியது. அந்தக் காட்சியைக் கண்ட கந்தமாறனுடைய உள்ளத்தில் ஆயிரம் வேல்கள் பாய்வது போன்ற வேதனை உண்டாயிற்று. மணிமேகலையை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு புலம்பினான். பெருமூச்சின் ஓசை நினைவுக்கு வரவே, ஒருவேளை உயிர் ஒட்டிக் கொண்டிருக்கலாம் என்ற ஆசை ஏற்பட்டது. நல்ல தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்தான்; வாயில் ஊற்றினான். சூடு பிறக்கும்படி உடம்பெல்லாம் தேய்த்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் மணிமேகலை கண் திறந்து மலர மலர அவனை நோக்கி விழித்தாள். ''அண்ணா! நீதானா? நான் நினைத்தது உண்மை

யாயிற்று. சொர்க்கத்துக்கு போனால் உன்னையும் அவரையும் காணலாம் என்று எண்ணினேன். அவர் எங்கே?'' என்று மிக மெல்லிய குரலில் கேட்டாள். கந்தமாறன் பொங்கி வந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, ''வருவார், அம்மா, வருவார்!'' என்றான்.

மணிமேகலை தான் சொர்க்கத்தில் இருப்பதாக எண்ணுகிறாள். கந்தமாறனையும் சொர்க்கத்தில் பார்ப்பதாகவே கருதுகிறாள். வந்தியத்தேவனைப் பற்றி விசாரிக்கிறாள் என்பதையெல்லாம் கந்தமாறன் அறிந்துகொண்டான். அவளுக்கு மன அதிர்ச்சி ஏற்படாதபடி அவளுடைய நம்பிக்கையையொட்டிப் பதில் கூறிச் சமாளித்தான்.

இதன்பிறகு, மணிமேகலையின் உடம்பில் மேலும் உயிர் தளிர்க்கச் செய்வதற்குத் தான் செய்த முயற்சிகளைப் பற்றியும், அவசரமாக ஓலை எழுதி வந்தியத்தேவனுக்கு அனுப்பி வைத்தது பற்றியும் இளஞ் சம்புவரையன் கூறினான். கடைசியாக,

"நண்பா! நீ என் ஓலையை மதித்து வந்ததற்காக என் மனத்தில் எழும் நன்றியைச் சொல்ல முடியாது. மணிமேகலை இனி அதிக காலம் ஜீவித்திருக்க மாட்டாள். அணையுந் தறுவாயில் உள்ள தீபச் சுடரைத் தூண்டி விட்டால் சிறிது நேரம் எரியுமல்லவா? அது போலத்தான் அவள் உயிர்ச் சுடர் பிரகாசிக்கிறது. முக்கியமாக, உன்னைக் காணும் ஆசையே அவளை இன்னும் உயிரோடு வைத்திருக்கிறது! நாம் எல்லாரும் சொர்க்கத்தில் இருப்பதாக அவள் நம்பியிருக்கிறாள். அதற்கு மாறாக நீ எதுவும் சொல்ல வேண்டாம்! அவளைப் பார்த்ததும் உனக்குத் துக்கம் உண்டாவது இயல்பே. அதையும் நீ கட்டுப்படுத்திக் கொண்டு அவளிடம் முக மலர்ச்சியுடன் பேச வேண்டும்!" என்று வேண்டிக்கொண்டான்.

படகு நீராழி மண்டபத்தை நெருங்கி விட்டது. யாழிசையும் மெல்லிய குரலில் பாட்டிசையும் கலந்து கேட்டன. வந்தியத்தேவன் கந்தமாறனை நோக்கினான். "ஆம், நண்பா! மணிமேகலை தான் யாழிசையுடன் சேர்ந்து பாடிக் கொண்டிருக்கிறாள்!" என்றான்.

படகிலிருந்து படிக்கட்டில் அவர்கள் இறங்கினார்கள். மணிமேகலை பாடுவது என்ன பாடல் என்பதை வந்தியத்தேவன் கவனமாகக் காது கொடுத்துக் கேட்டான். முன்னொரு சமயம் அதே நீராழி மண்டபத்தில் அவள் யாழிசையுடன் பாடிய அதே பாடல்தான்.

"இனியபுனல் அருவிதவழ்
இன்பமலைச் சாரலிலே
கனிகுலவும் மரநிழலில்
கரம்பிடித்து உகந்ததெல்லாம்
கனவுதானோடி - சகியே
நினைவுதானோடி!
புன்னைமரச் சோலையிலே
பொன்னொளிரும் மாலையிலே
என்னைவரச் சொல்லி அவர்
கன்னல்மொழி பகர்ந்ததெல்லாம்
சொப்பனந்தானோடி - அந்த
அற்புதம் பொய்யோடி!

கட்டுக்காவல் தான்கடந்து
கள்ளரைப்போல் மெள்ள வந்து
மட்டில்லாத காதலுடன்
கட்டிமுத்தம் ஈந்ததெல்லாம்
நிகழ்ந்ததுண்டோடி - நாங்கள்
மகிழ்ந்ததுண்டோடி!"

பாடல் முடிகிற வரையில் வந்தியத்தேவன் படிக்கட்டிலேயே காத்துக்கொண்டிருந்தான். முடிந்தவுடன் படிகளில் ஏறி மண்டபத்தை அடைந்தான்.

மணிமேகலை அவனைப் பார்த்ததும் யாழைக் கீழே உருட்டி விட்டு எழுந்திருக்க முயன்றாள். உடலில் பலமில்லாமையால் கால்களை ஊன்றி நிற்க முடியாமல் தள்ளாடி விழப் பார்த்தாள். வந்தியத்தேவன் பாய்ந்து சென்று அவள் கீழே தரையில்

விழாமல் தாங்கிக்கொண்டான். மெள்ள மெள்ள அவளை உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்து கொண்டான். மணிமேகலையைத் தன் மடியில் சாத்திக்கொண்டான்.

மணிமேகலை அடிக்கடி அடிக்கடி அவன் முகத்தை அண்ணாந்து பார்த்தான். அவன் வந்தியத்தேவன்தானா, அவன் படுத்திருப்பது அவனுடைய மடியில்தானா என்பதைப் பலமுறை பார்த்து உறுதி செய்துகொண்டதாகத் தோன்றியது.

"என் அண்ணன் என்னை ஏமாற்றவில்லை. சொர்க்கம் வெறும் சொப்பனமில்லை. இந்த அற்புதமும் பொய்யில்லை!" என்று அவள் இதழ்கள் மெதுவாக முணுமுணுத்தன.

"பொய்யில்லை, மணிமேகலை, பொய்யில்லை. இது நிச்சயமாகச் சொர்க்கந்தான்! நான் வந்திருப்பதும் உண்மைதான்!" என்றான் வந்தியத்தேவன்.

அவன் எவ்வளவு அடக்கிக் கொள்ளப் பார்த்தும் முடியாமல் கண்களில் நீர் ததும்பியது. மணிமேகலையின் முகத்தில் அவனுடைய கண்ணீர்த் துளிகள் முத்துப் போல் உருண்டு விழுந்தன. அவனையறியாமல் விம்மல் ஒலியும் எழுந்தது.

மணிமேகலையின் முகம் சிறிது நேரம் தெய்வீகமான சோபையினால் ஜொலித்தது. அவளுடைய நீண்ட கண்களிலிருந்து வெண்ணிலவின் கிரணங்கள் சுடர் வீசிப் பிரகாசித்தன.

மாதுளை மொட்டை நிகர்த்த அவளுடைய இதழ்கள் விரிந்து ஏதேதோ மதுரமான சொற்களைப் பொழிந்தன. வந்தியத்தேவன் எவ்வளவோ கவனமாகக் கேட்டான். ஆனால் அவள் என்ன சொன்னாள் என்பதை மட்டும் அவனால் தெரிந்து கொள்ளமுடியவில்லை.

எதற்காகத் தெரிந்து கொள்ள வேண்டும்? அவள் கூறியவை என்ன வார்த்தைகளாயிருந்தால் என்ன? இதயமாகிய பொற்கலசமும் திறந்து அன்பாகிய அமுதம் பொங்கிவரும் போது வெறும் சொற்களின் உபயோகம் என்ன?

சிறிது நேரத்துக்கெல்லாம் மணிமேகலையின் கனி இதழ்கள் குவிந்தன; கண்ணிமைகள் மூடின. முகத்தில் தவழ்ந்த தெய்விக சோபை குன்றியது: அமைதி குடிகொண்டது.

நீராழி மண்டபத்தின் மேலே படர்ந்திருந்த மரக்கிளையின் மீது இளந்தென்றல் வீசியது; மரக்கிளையில் குலுங்கிய செந்நிற மலர்களில் சில உதிர்த்தன.

மணிமேகலையின் உயிரும் அவளுடைய உடலிலிருந்து உதிர்ந்தது.

உடலைப் பிரிந்த உயிர் எங்கே சென்றது? எவ்வழியே சென்றது? மந்தமாருதத்துடன் கலந்து சென்றதா? இளங்காற்றில் எழுந்த சிற்றலைகளின் இனிய ஓசையில் ஏறிச் சென்றதா? இதய தாபம் தொனிக்கப் பாடிய பூங்குயில்களின் மதுர கீதத்துடன் ஒன்றாகி விண்ணில் பறந்து சென்றதா?

எங்கே சென்றது? சகல புவனங்களையும் சகல ஜீவ ராசிகளையும் ஆக்கி அளித்து அழிக்கும் பரம் பொருளின் பாதார விந்தத்துக்குச் சென்றதா?

அல்லது கண்ணீர் பெருக்கும் கற்சிலைபோல் நினைவற்றுச் செயலற்று உட்கார்ந்திருந்த வந்தியத்தேவனுடைய உள்ளத்திலேதான் கலந்து போய்விட்டதா?

யாருக்கும் தெரியாது; தெரிந்தாலும் சொல்ல முடியாது.

ஒன்று மட்டும் நிச்சயம்.

வேடிக்கையும் விளையாட்டும் குறும்பும் குதூகலமும் துணிவும் துடுக்கும் துணிச்சலும் உருக் கொண்டவனாக இருந்த வந்தியத்தேவனை இனி நாம் காணப் போவதில்லை.

கனிந்த உள்ளமும் கருணையும் விவேகமும் வந்தியத்தேவனை அந்தக் கணத்தில் வந்து அடைந்தன.

மணிமேகலையாகிய தெய்வம் அவன் இதயக் கோவிலில் குடிகொண்டாள்.

இனி அவன் எங்கே சென்றாலும் என்ன காரியம் செய்தாலும், அந்தத் தெய்வம் அவனுக்குத் துணை புரியும்.

வல்லவரையன் வந்தியத்தேவன் நல்ல பணிகள் பல செய்ய வல்லவனானான்; அவனை அறிந்த அனைவராலும் வந்தனை செய்வதற்கு உரியவனாக விளங்குவான்.

வீரனே! உன்னிடமிருந்து தற்சமயம் விடைபெற்றுக் கொள்கிறோம். உன் துயரம்



நிறைந்த சிந்தனைகளில் நாங்கள் குறுக்கிட விரும்பவில்லை.

அருள்மொழி வர்மனின் அருமை நண்பனே! நீடூழி நீ வாழ்வாயாக! வீரத் தமிழரின் மரபில் உன் திருநாமம் என்றும் நிலைத்து விளங்குவதாக!

(அடுத்த இதழில் முடிவுரை)

ஜெயலலிதாவுடன் இரண்டு நிமிடம்!

சென்னை செயின்ட் தாமஸ் மவுண்டிலுள்ள அந்த வீட்டுக்குள் நுழைந்ததுமே ஏதோ புரானக் காலத்து இடத்துக்குள் கால் வைத்த உணர்வு ஏற்படுகிறது. மரங்களடர்ந்த, சுண்ணாம்புகாணாத சுவர்களாலான பழங்கால வீட்டில் கனம் கனமாய் மர நாற்காலிகள், மேஜை, வண்ணம் இழந்த ஓவியங்கள் என்று அதிசயமாகத்தானிருக்கிறது.

“நீங்க நினைக்கிறது சரிதான். இருநூறு வருட பழைமை வாய்ந்த, எங்க தாத்தாவுக்குத் தாத்தா வாங்கிய வீடு இது. இன்னும் மாற்றப்படாம அப்படியே இருக்கு” என்று ஆச்சர்ய மூட்டியவர் சான்ட்ரா டான் கிரேவல் பன்னிரண்டாவது தமிழக சட்டப் பேரவையின் ஆங்கிலோ இந்திய நியமன எம்.எல்.ஏ.!

“திடீர்னு ஒரு நாள் ஃபோன். தலைமைச் செயலகத்திலிருந்து பேசறோம்; உங்க பயோடேட்டா வேணும்னு கேட்டாங்க. நான் ஏதோ வேலைக்காக இருக்குமோன்னு நினைச்சு அனுப்பினேன். அப்புறம்தான் விஷயம் தெரிந்தது. மனசுல சந்தோஷமும், ‘ஷாக்’கும்! என்னோட பெயரை அங்க யார் ரெக்கமண்ட் பண்ணினாங்கன்னு தெரியலை. ஒரு வேளை என் சமூக சேவையைப் பார்த்து யாராவது சொல்லியிருக்கலாம்னு நினைக்கிறேன்.

“அப்புறம் முதல்வர் ஜெயலலிதாவைப் பார்க்கச் சொன்னாங்க. பார்த்தேன். இரண்டு நிமிஷம்தான் பேசினாங்க. உங்க ஆங்கிலோ இந்தியன் கம்யூனிட்டிக்கு என்னென்ன தேவைகள் இருக்கோ அதையெல்லாம் சொல்லுங்க; நிறைவேற்றித் தர்றோம்னு சொன்னாங்க. அப்புறம் இந்த எம்.எல்.ஏ. ஆகறதுல விருப்பம்தானே?’ன்னு கேட்டாங்க. நான் ஆமான்னு சொன்னேன்” என்கிற சான்ட்ராவுக்கு வயது நாற்பத்தி ஏழு.

ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்துகொண்டிருந்த இவர், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் ‘வாலன்டரி ரிடையர்மென்ட்’ வாங்கிவிட்டு சமூக சேவையில் இறங்கி விட்டாராம்.

“ஆங்கிலோ இந்தியன் கம்யூனிட்டியைச் சேர்ந்தவங்களுக்கு மட்டுமல்ல; எல்லோருக்குமே நான் உதவி பண்ணிட்டு இருக்கேன். நகரத்துல இருக்கிற சில ஸ்கூல்களுக்குப் போய் ஏழை மாணவர்களுக்குத் தேவையானதைக் கொடுத்து உதவறது! ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவுவது, சில தொண்டு நிறுவனங்களுக்குப் போய் அவங்களோட சேர்ந்து செயல்படறதுன்னு நான் ஈடுபட்டுட்டிருக்கேன்.

“சர்ச், ப்ரேயர், சமூக சேவைன்னு இருக்கிற எனக்கு என் சமூகத்தைச்



• சான்ட்ரா டான்

சேர்ந்தவங்கலுக்கு உதவி செய்ய அழைப்பு வந்திருக்கு. இதைச் சந்தோஷமாகவே ஏத்துக்கறேன். மக்கள் சேவையை விட வேறென்ன மகத்துவம் இருக்க முடியும்'' என்கிறார் இந்த சான்ட்ரா.

காற்றுக்குக் காயம்படாமல் மெதுவாகவே பேசும் இவருக்குத் தமிழக அரசியல் நிலவரம் பற்றி சுத்தமாகத் தெரியாதாம். முன்னாள் முதல்வர், அமைச்சர்கள், சபாநாயகர்கள் பெயர்களைக் கூட இனிமேல்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிறார்!



• அம்மா ரோசாரியாவுடன்

இங்கேயே பிறந்து இங்கேயே படித்து வளர்ந்தாலும் தமிழ் பேச வரவில்லை என்கிறார் சான்ட்ரா.

''கொஞ்சம் தெரியும். ஆட்டோல, கடைகள்ல பேசற அளவுக்குத் தமிழ் தெரியும். அது ஒரு கஷ்டமாக எனக்குத் தெரியலை. ஏன்னா எல்லோருமே ஆங்கிலம் பேசறாங்களே...'' என்றவரிடம், ''சட்டசபை தமிழ்ல நடக்கும் போது எப்படி புரிஞ்சுக்குவீங்க'' என்றால் சிறிது நேரம் யோசித்து விட்டு,

''என் மக்களுக்கான தேவைகளை, அரசுக்குச் சொல்லி, உதவிகளைப் பெறணும், அதுதான் என் வேலை. அதுக்குத் தமிழ் தெரியாதது ஒரு பெரிய குறையில்லைன்னு நினைக்கிறேன்'' என்கிறார்.

''எங்க சமூகத்துல பொருளாதார வசதியில்லாம நிறைய பேர் படிக்க முடியாம இருக்காங்க. அவங்களுக்கு உதவறதுதான் என் முதல் நோக்கம். கல்வி இருந்ததுன்னா வாழ்க்கையில அவங்களால முன்னுக்கு வர முடியுமில்லையா? என் மக்களுக்கு நான் உதவி செய்வதில் ஒரு சேவகன் மாதிரி இருப்பேன்'' என்று சொல்லும் சான்ட்ரா, திருமணம் செய்திருப்பது ஹரீந்திர சிங் என்ற சீக்கியரை.

'**கா**தல் திருமணம்தானே?' என்றால் ரொம்பவே வெட்கப்படுகிறார் இந்த எம்.எல்.ஏ. பிறகு மெதுமெதுவாக தமது காதல் வாழ்க்கை பற்றிப் பேசுகிறார்.

''நான் கிறிஸ்டியன் காலேஜ்ல படிச்சிட்டிருந்த சமயம் காலேஜ் போறதுக்காக வீட்டு வாசல்ல நின்னேன். அப்போ வீட்டு முன்னாடி ஒரு 'பைக்' ரிப்பேராகி நின்னுது. ஒருத்தர் ஏதோ நோண்டிட்டு இருந்தார். ரொம்ப நேரமா ட்ரை பண்ணியும் பைக் சரியாகலை. அப்புறம் அவர் என்கிட்ட ஏதோ ஹெல்ப் கேட்டார். பண்ணினேன். அந்த முதல் சந்திப்புக்குப் பிறகு அடிக்கடி மீட் பண்ணினோம். எங்க வீட்டுக்கு கொஞ்சம் தூரத்துலதான் அவர் வீடு. அவர் அப்பா இராணுவத்துல வேலை பார்த்தவர். அப்புறம் இரண்டு பேர் வீட்டு சம்மதத்தோட கல்யாணம் பண்ணிக்கிட்டோம்!'' என்கிறார் கண்களை மூடி.

சண்டிகரில் வேலை பார்த்து வரும் கிரேவல், மனைவியின் பதவியேற்பு நிகழ்ச்சிக்காக விரைந்து வந்திருக்கிறார் இப்போது.

— செ. ஏக்நாத்

படங்கள்: ஐரிஸ்



மூன்று ஜோடி இரட்டையர்களைத்தான் இங்கே காண்கிறீர்கள். ஆனால் ஐரோப்பா முழுவதிலும் உள்ள நூறு ஜோடி இரட்டையர்கள் ஒரே இடத்தில் ஒன்று கூடி மாநாடு நடத்தப் போகிறார்கள்!

நன்றி : பிஸினஸ் லைன்.

- கலா.



தோல் சத்து!

வாழைப் பழத்திற்கு ஒரு மருத்துவ குணம் உண்டு என்றால் அதன் தோலுக்கும் முக்கிய குணமுள்ளது என்று பம்பாய் அணு ஆராய்ச்சி மையத்தைச் சார்ந்த அறிஞர்கள் கண்டு பிடித்துள்ளனர். சிறுநீரக கல் நோயைக் குணப்படுத்தும் தன்மை வாழைப் பழத் தோலுக்கும், பசலைக் கீரைக்கும் உண்டு என்று அவர்கள் கூறுகின்றனர்.

- தேனி முருகேசன்

பாம்பு யுத்தம்!

கிராமப்புறத்தில் சாரைப் பாம்பும், நாகப் பாம்பும் பின்னிப் பிணைந்து கொள்ளும் போது பார்ப்பவர்கள் புணர்ச்சி என்று நினைக்கின்றனர். இச் சந்தர்ப்பத்தில் ஒரு பட்டுத் துணியை அந்த பாம்புகள் மீது வீசி, பாம்புகள் சென்ற பின் துணியை எடுத்து வைத்துக் கொண்டால், அதை எங்கு எடுத்துச் சென்றாலும் காரியம் வெற்றியடையும் என்று ஒரு நம்பிக்கை. இந்த பாம்புகள் விளையாட்டு நான்கு அல்லது ஐந்து மணி நேரம் கூட நீடிக்கும்.

சாரைப் பாம்பும் நாகப்பாம்பும் சில சமயம் தன்னிச்சையாக சந்தித்துக் கொள்ளும் போது (அருகில் ஒரு பெண் பாம்பு சாரையோ அல்லது நாகமோ - இருக்கும் பட்சத்தில்) இரண்டு ஆண் பாம்புகளும் பின்னிப் பிணைந்து சண்டை போட்டுக் கொள்ளும். அதாவது பெண் பாம்புக்கு முன்னால் தன் பலத்தை இரண்டுமே நிரூபிக்க முயற்சி செய்யும். எனவே, பார்வையாளர்கள் உஷார். அருகில் சற்றுத் தொலைவிலேயே பெண் பாம்பு நிச்சயம் இருக்கும்!

- தங்கவேல், கோவை





ஸ்கூல் உண்டா சார்!

ஆசிரியர் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

"மாணவர்களே... இந்த உலகம் என்றாவது ஒரு நாள் அழியப் போகிறது... எரிமலை குமுறப் போகிறது... வானம் இடிந்து விழப் போகிறது..." என்றார்.

உடனே ஒரு மாணவன் எழுந்து, "சின்ன சந்தேகம் சார்..." என்றான்.


"கேளு..."

"அன்னிக்கு ஸ்கூல் உண்டா சார்..."

– இன்று ஒரு தகவல் தென்கச்சி

– ராஜிராதா, திருச்சி

பயம் இல்லா பயணம்!



ஒரே பாதையில் எதிரும் புதிருமாக வந்து கொண்டிருக்கும் இரயில்கள் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்வதாலும், நின்று கொண்டிருக்கும் வண்டியின்மீது, அதே பாதையில் பின்னாலிருந்து வரும் இரயில் மோதுவதாலும் விபத்துகள் ஏற்படுகின்றன.

இந்திய இரயில்வே இது போன்ற விபத்துகளைத் தடுக்க ஒரு புதிய முறையை விரைவில் அமுல்படுத்த உள்ளது. இதன் மூலம், ஒரு பாதையில் எதிரில் இரயில் வருகிறது என்பதை முன்கூட்டியே (5 கிலோ மீட்டர் தூரத்தில்) தெரிந்து கொண்டு, வண்டியை அங்கேயே நிறுத்த முடியும். இதே போன்று பின்னால் வரும் ரயில், முன்னால் நின்று கொண்டிருக்கும் ரயிலை அறியவும் சில ஏற்பாடுகள் செய்துள்ளதாக இரயில்வே அமைச்சர் நிதிஷ் சிங் கூறுகிறார். இனி, பயமில்லா இரயில் பயணம்!

- அகமதாபாத் பாண்டு



உலகப் புகழ்பெற்ற 'கோஹினூர்' வைரம் பற்றிய ஒரு சுவையான தகவல் : ஆங்கில வைஸ்ராய் டல்ஹௌசி, பஞ்சாப் மாநிலத்தைக் கைப்பற்றிய பிறகு, கோஹினூர் வைரம் அவர் கைக்கு வந்தது. ஜான் லாரன்ஸ் என்ற உயர் அதிகாரியின் பொறுப்பில் அது விடப்பட்டது. அவர் அதைத் தமது 'கோட்' பையில் வைத்து, பின்பு அதைப் பற்றி மறந்தே போய்விட்டார். 1½ மாதங்களுக்குப் பிறகு, லண்டனிலிருந்த விக்டோரியா மகாராணிக்கு அதை அனுப்புவதற்காகக் கேட்டபோதுதான் மனிதருக்கு அதைப் பற்றிய நினைப்பே வந்ததாம்!

பயந்துபோன அவர், தமது வேலையாளிடம் ஓடிச் சென்று தம்முடைய 'கோட் பாக்கெட்'டில் ஏதேனும் இருந்ததா என்று கேட்க,



'வேறு ஒன்றுமே இல்லையே, இந்தச் சிறிய கண்ணாடித் துண்டு ஒன்றுதான் இருந்தது.' என்று அதை எடுத்துக் கொடுத்தாராம்.

பிறகு யாரும் அறியாமல் சாதாரண தபாலிலேயே லண்டனுக்கு அந்த வைரம் அனுப்பப்பட்டதாகவும் ஒரு செய்தி உண்டு.

- ஆர். மார்க்கண்டன், சென்னை.

மனம், மனமறிய ஆவல்...

"டாக்டர் சிவப்ரியா வரலீங்களா?" என்று கேட்ட எட்டாவது அறை நோயாளியை, மனத்திற்குள் பளாரென்று அறைந்தான் ஆனந்த். 'என்னைப் பார்த்தால் டாக்டராகத் தெரியவில்லையா?'. இத்தனைக்கும் அந்த நோயாளி ஒரு பெண் கூட அல்ல. பெண்களுக்கே உரிய பிரச்னைகளை ஒரு பெண் டாக்டரிடம் சொல்வது வசதியாக இருக்கிறது என்று சமாதானப்படுத்திக் கொள்வதற்கு. நாற்பது வயதுத் தொழிலதிபர்.

"ஹலோ மிஸ்டர் சுகுமார் எப்படி இருக்கீங்க?" என்றபடி மலர்ச்சியுடன் உள்ளே



நுழைந்தாள் சிவப்ரியா.

சுகுமாரின் முகம் விரிந்தது.

"இப்பதான் உங்களைப் பற்றி டாக்டர் ஆனந்த்கிட்ட விசாரிச்சுக்கிட்டிருந்தேன்" என்றார்.

"என்ன விசேஷம்? உங்க மனைவி இப்ப வர டைமாச்சே. எண்ணெய்ப் பண்டம் எதுவும் எடுத்துக்கிட்டு வர வேண்டாம்னு சொன்னீங்களா? இல்லையா?"

"அதெல்லாம் கவனமா இருப்பேன் டாக்டர்" என்றபோது அவர் முகம் சற்றே மாறியது. "கொஞ்சம் உடல் நடுக்கமாக இருக்குது."



அருண் சரண்யா

15

''ஏ.ஸி.யைக் கொஞ்சம் குறைச்சுக்கலாமே'' என்ற ஆனந்த் ஒரு நர்ஸைக் கூப்பிட்டு ஏ.ஸி.யைக் குறைக்கச் சொன்னான்.

"நடுக்கத்துக்குக் காரணம் வெளியிலேதான் இருக்கணும்னு இல்லே மிஸ்டர் சுகுமார். ட்ரிப்ஸ் கொஞ்சம் வேகமாக இறங்க ஆரம்பிச்சிருக்கு. அதனாலேயும் நடுக்கம் இருக்கலாம்" என்றபடி அவர் உடலில் நுழைந்து கொண்டிருந்த க்ளுக்கோஸ் நீரின் வேகத்தைக் குறைத்தாள்.

"இந்தப் பாட்டில் முடிஞ்சவுடனே என் நரம்பிலே குத்தியிருக்கிற ஊசியை எடுத்துடுவாங்களா?"

"இன்னும் ஒரு நாள் வச்சிருக்க வேண்டியிருக்கும் சார்" என்று ஆனந்த் கூற, "ஏன் வலிக்குதா? ரொம்ப வலிச்சுதுன்னா இன்னொரு கையிலயும் ஊசியைப் பொருத்தச் சொல்றேன்'' என்றாள் சிவப்ரியா.

"வேண்டாம் வேண்டாம். முன்னே ஒரு தடவை மலேரியா வந்திருக்கான்னு செக்கப் செய்துக்க இந்தக் கிளினிக்குக்கு வந்தப்போ கைவிரல் நுனியிலேயிருந்துதானே இரத்தம் எடுத்தாங்க. இப்போ மட்டும் ஏன் இப்படி முழங்கை நரம்பையெல்லாம் தேடி எடுத்துக் குத்தி இரத் தம் எடுத்துக்கறீங்க?"

"விரலிலே இருப்பதெல்லாம் ரொம்ப மெல்லிசான இரத்த நாளங்கள். அதைக் காபில் லரிஸ்னு சொல்வோம். அங்கே ஒருமுறை சுருக்குனு குத்தினா கொஞ்சம் இரத்தம்தான் வெளியாகும். இப்போ உங்க விஷயத்திலே இரத்தப் பரிசோதனைக்குக் கொஞ்சம் அதிக அளவிலே இரத்தம் தேவைப்படும். இவ்வளவு இரத்தம் வரும் வரை விரல் நுனியைக் குத்திக் கிட்டே இருந்தா விரல் அதோகதிதான்."

நோயாளியின் முகத்தில் ஒரு திருப்தி தெரிந்தது.

"ஓகே. அடுத்த அறைக்குப் போகலாமா?" என்ற டாக்டர் ஆனந்த், சட்டென்று திரும்பினாலும், சிவப்ரியா உடனடியாக அவனைத் தொடரத் தொடங்கவில்லை.

"அப்புறம் சார், நீங்க சொன்னதிலே இன்னொரு கரெக்ஷன். நரம்பிலே குத்தியெல்லாம் இரத்தம் எடுக்க மாட்டோம். கைமுட்டிக்கு மேல் பகுதியில் உள்ள இரத்த நாளத்திலிருந்துதான் ஊசி மூலமாக இரத்தம் எடுப்போம். அங்கே இரத்த நாளம் கொஞ்சம் புடைத்துத் தெரிவதால் கண்டுபிடிப்பது ஈஸி. தவிர அங்கே கொழுத்த பல தசைகள் சப்போர்ட்டாக இருப்பதால் ஊசியைச் செருகின பிறகும் அந்த இரத்தக் குழாய் அதிகம் நகர்ந்து ஆட்டம் காண்பிப்பதில்லை."

அறையைவிட்டு வெளியே வந்து வராண்டாவில் நடந்தபோது ஆனந்தால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. "நோயாளிகளின் உடல் பிரச்னைகளைக் கண்டுபிடிப்பதும் அதைத் தீர்ப்பதும்தான் நம்மவேலை."

"நான் இல்லேன்னு சொன்னேனா?"

"அதைத் தவிர வேறெதுவும் நம்ம வேலை இல்லேன்னு சொன்னேன்."

"புரியலே."

"சிகிச்சை முறை பற்றிய சந்தேகங்களையெல்லாம் பேஷண்ட்ஸுக்கு விளக்குவது அனாவசியம். தவிர ஏதோ மெடிக்கல் மாணவனுக்குப் பாடம் எடுக்கிற மாதிரி நீ பல நோயாளிகளிடம் நடந்துக்கிறே."

"இரண்டு விதத்திலே நான் இதை மறுக்கிறேன் டாக்டர். நோயாளியின் எந்தவித மருத்துவச் சந்தேகத்தையும் போக்குவது நம்ம கடமை. சரியான சிகிச்சை கொடுத்தாலும் அது சரியான சிகிச்சைன்னு அவங்களை நம்ப வைப்பதும் முக்கியம். நோய் குணமாக மனசும் ஒரு காரணம்னு உங்களுக்கு நல்லாத் தெரியும்."

"உன்னுடைய இன்னொரு அப்ஜெக்ஷன் என்னவோ?"

"என்னை ஒருமையிலே நீங்க கூப்பிடுவது."

பொட்டிலடித்தாற்போல் அவள் கூறியதில் ஆனந்த் நிலைகுலைந்தான்.

சிவப்ரியாவின் போக்கை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவன் கண்களை நேருக்கு நேராக சந்தித்துப் பேசுகிறாள். தனது காதலன் – குறைந்தபட்சம் ஒருகாலத்தில் காதலித்தவன் என்கிற எண்ணத்தைக் கூட முழுதுமாக வழித்துப் போட்டுவிட்டாள். தான் இன்னொருத்தியை மணந்தது அவளுக்குப் பெரும் இடியாகவும் ஆயுள் தண்டனையாகவும் இருக்குமென்றும், அவளை ஓரளவாவது சமாதானப்படுத்த வேண்டியிருக்குமென்றும், அவளது முட்டாள்தனமான முடிவால்தான் அவன் வேறொருத்தியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டி வந்தது என்றும் சமாதானம் கூற வேண்டியிருக்கும் என எதிர்பார்த்தவனுக்கு இது பயங்கர அதிர்ச்சி.

போதாக்குறைக்கு அவ்வப்போது சிரிக்கிறாள். நோயாளிகளிடம் வெகு உற்சாகமாகப் பேசுகிறாள். சோகம் என்பது ஒரு வைரஸ் அளவுக்குக் கூட அவளிடம் இருப்பதாகத் தோன்றவில்லை.

வழியில் டாக்டர் முகர்ஜி அவர்களைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

"என்ன டாக்டர் ட்யூட்டி முடிஞ்சிடுச்சா?" என்ற கேள்விக்கு "ஆமாம். இப்போ வீட்டுலே ட்யூட்டி ஆரம்பமாகுது. போய் பையனுடைய நோட்டுப் புத்தகங்களுக்கு அட்டை போடணும்" என்றார் பலத்த சிரிப்போடு.

"டாக்டர் முகர்ஜி, நானும் என் ட்யூட்டியை முடிச்சிட்டேன். சிகாகோவிலே போன வாரம் நடந்த மருத்துவ ஆராய்ச்சி ஒன்னைப் பற்றி சில விவரங்கள் கேட்டிருந்தீங்களே. ஒரு வழியா அதை 'நெட்'டிலே தேடிக்

"தலைவர் புதுப்படம் எடுக்கப் போறாராமே...படத்துக்கு என்ன பெயராம்?"

"புழுத்த அரிசி புண்ணாக்காகிறது!"

– புளியரை கணேசன்



கண்டுபிடிச்சுட்டேன். நோட்ஸ் எடுத்து என் கைப்பையிலே வச்சிருக்கேன். இருங்க எடுத்துத் தரேன்" என்ற சிவப்ரியா, "டாக்டர் ஆனந்த், இரண்டு நிமிஷத்திலே உங்களோட ஜாயின் பண்ணிக்கிறேன்; ஸாரி" என்றபடி முகர்ஜியோடு நடக்கத் தொடங்கினாள்.

"உங்ககிட்டே எந்தப் பொறுப்பை ஒப்படைச்சாலும் அதை மறக்காமல் நீட்டா செய்துடறீங்க. உங்ககிட்டே எனக்கு ரொம்பப் பிடிச்ச குணம் இதுதான்." டாக்டர் முகர்ஜியின் பாராட்டுக்குப் புன்னகையை பதிலாக்கினாள் சிவப்ரியா.

"நம்ம லோலிடாவுக்கு என்ன வருத்தம் தெரியுமா?" என்றபடி திடீரென்று சப்தம் போட்டுச் சிரித்தார் முகர்ஜி.

அந்தக் கிளினிக்கின் நிர்வாக அதிகாரி அவள். ஆங்கிலோ இந்தியப் பெண். அவளுக்கு என்ன வருத்தம் வந்தது இன்று?

"அதை நீங்களே அவங்ககிட்டே கேளுங்க. ரொம்ப வேடிக்கையான வருத்தம் அது" என்றார் நமுட்டுச் சிரிப்புடன்.

முகர்ஜிக்காக எடுத்த நோட்ஸ்களைக் கொடுத்தனுப்பிய பிறகு லோலிடாவுக்கெதிராக வந்து அமர்ந்தாள் அவள்.

"மிஸஸ் லோலிடா, ஏன் டல்லாயிருக்கீங்க? உடம்பு சரியில்லையா? வீட்டுக்குப் போகணும்னா போங்க. நான் வேணா சீஃப்கிட்டே சொல்லிக்கிறேன்."

"அதில்ல ப்ரியா. உன்கிட்டே சொல்றதுக்கு இன்னா" என்று அவள் தொடங்கிய போது வாசலில் ஏதோ கூச்சல் கேட்டது.

ஆனந்த் அங்கு விரைந்து கொண்டிருந்தான். அடுத்த நொடியே திரும்பி வந்து, "டாக்டர் சிவப்ரியா அவர்களே, வாசல்ல சில பேருக்கு ஏதோ சந்தேகமாம். நீங்க வந்து தீர்ப்பீங்களா? உங்களுக்குத்தான் விளக்கமளிப்பதுன்னா க்ளுக்கோஸாச்சே."

நாடகபாணியில் அவன் கூறியதில் சற்றே குழப்பமடைந்த சிவப்ரியா, வாசல்புறமாகச் செல்ல அங்கு ஆறேழு இளைஞர்கள்.

"அட நம்ம சிவப்ரியா வந்துட்டாங்கடா" என்ற கூக்குரல் எழுந்தது.

தொடர்ந்து சரமாரியான கேள்விகள். "எப்பம்மா உங்க அடுத்த படம்?", "ஹீரோவின் தங்கச்சிகிட்ட அழுவீங்க பாருங்க, ஒரு சீன்ல கலக்கிட்டீங்கம்மா", "உங்க நடிப்புக்கே படம் சில்வர் ஜூபிளி கொடுத்திருக்கணும். ஐம்பது நாளிலே தூக்கிட்டாங்களே. நம்ம ஜனங்களுக்கு ரசனையேதுங்க?"

இதையெல்லாம் பார்த்த டாக்டர் ராம்ஷேகர் சற்றே முகம் சுளித்தபடி உள்ளே நுழைய, ஆனந்த் ஒரு குரூர திருப்தியுடன் கிளினிக்கின் உள்ளே நடந்தான்.

(தொடரும்)

நல்ல இரவு எங்கே கிடைக்கும்?

எங்கு
நல்ல இரவு கிடைக்கும்?
பகல் வாடை
பனிச்சென்று நீங்கிய
வெயில் வடுக்கல் முற்றிலும்
விலகிய நல்ல இரவு
எங்கே கிடைக்கும்?

பசிக்குத்
தாயைப் பரிமாறிவிட்ட
தகப்பன்,
சாராயக் கடையில்
ஊறுகாய் உறைப்பில்
புண்ணாக்காத
இரவு எங்கே கிடைக்கும்?

எவனை எப்படிக் கவிழ்ப்பது
என்று நரித்தனவாதிகள்
விரிக்கும் வலையில்
விழாத இரவு
எங்கே கிடைக்கும்?

மக்களின்
கண்களுக்குள் நுழையப்
பதுங்கியிருக்கும் கனவுகளின்
பாரத்தால் உடையாத இரவு
எங்கே கிடைக்கும்?


பாதி தூரம்
மரணத்திற்குள்
சென்று விட்டவர்களின்
மீதி தூரத்தைக்
கணக்கெடுக்கும்
குடும்பங்களைக் கடந்துவந்த
இரவு
எங்கே கிடைக்கும்?

காத்திருப்புகளுக்குள்
புகுந்து
காதலர்களின் முத்தங்களைக்
கைப்பற்றும்
நிகழாத சந்திப்புகளால்
நிறம் வெளிறாத இரவு
எங்கே கிடைக்கும்?

பாடம் பட்டுப் பாடம் பட்டுச்
சூடுபட்ட
பள்ளிச் சிறுசுகளைத் தீய்க்கும்
தேர்வு வினாக்கள்
தீண்டாத
போதி இரவு எங்கே கிடைக்கும்?

வரும் இரவுகள்
வயிற்றிலும்
கவலைக் கருக்களை
வளர்க்காத இரவு
எங்கே கிடைக்கும்?

தமிழன்பன்



'சாடிஸ்ட்!'

✉ கவர் ஸ்டோரி படித்தேன். பத்மவாசன் ஓவியப் பணியை ஒரு தவமாகவே மேற்கொள்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. படங்களில் ஒளி வீசும் தெய்வீகத்திற்கு அவரது குடும்பமும் சுற்றமும் முக்கிய காரணம். அதெல்லாம் சரி! உபவாசம் விஷயத்தில் மட்டும் பத்மவாசனுடன் நான் வேறுபடுகிறேன். உபவாசம் உடம்புக்கு நல்லதுதான். அதற்காக ஒவ்வொரு படம் வரையும் போதும் இருந்தால் என்னாவது? சுவரை வைத்துத்தானே சித்திரம் வரைய முடியும்? அமரர் கல்கியின் 'மகுடபதி'யில் வரும் சுவாமிகளைப் போல் நன்றாக உணவருந்தி, நன்றாகச் சேவை செய்ய வேண்டும்.

பாளையங்கோட்டை,
தி.ச. பாலசுப்ரமணியன்.

✉ சரித்திர கால ஓவியம் வரையும்போது அதில் ஒன்றி விடும் பத்மவாசனுக்கு வரலாற்றில் மிக முக்கிய இடமுண்டு.

சென்னை – 92, என். ரஜினி.

✉ பொதுவாக டாக்டர்கள் என்றாலே பணம் கறப்பவர்கள் என்றுதான் தோன்றும். ஆனால் ஐந்து ரூபாய் ஃபீஸ் பெற்றுக் கொண்டு ஒப்பற்ற சேவை செய்யும் வேலூர் லட்சுமணனின் செயல் போற்றுதலுக்குரியது. கின்னஸில் மட்டும் இவர் பெயர் இடம் பெறவில்லை. வாசகர்களின் இதயங்களிலும் நீங்கா இடம் பெற்று விட்டார்.

விசலூர் – 1,
ஜி.ஜி. கிருஷ்ணன்.

✉ போலீஸ் ராஜ்ஜியம் – தலையங்கத்தின் மூலம் காவல் துறையின் காட்டுத் தர்பாரையும், ஜெ.யின் மனிதநேயமற்றத் தன்மையையும், நெருப்புச் சவுக்கடியாய்த் தாக்கிய விதம், கலைஞர் மீது இழைக்கப்பட்ட கொடுமை கண்டு புண்பட்டுப் போன இதயங்களுக்கு ஆறுதலாய் இருந்தது.

அயன்புரம், த. சத்தியநாராயணன்.

✉ கவிதைக்குக் கற்பனையும், பொய்யும் மட்டுமே அழகு என நினைக்காமல், தன் பாடல்கள் மூலம் நல்ல கருத்தையும் அறிவியல் உண்மைகளையும் பரப்ப நினைக்கும் கவிஞர் பா. விஜய் பாராட்டுக்குரியவர்!"

திருவானைக்காவல்,
எஸ். கௌரிலக்ஷ்மி.

✉ 'முதல்வன்' சிறுகதை இன்றைய தமிழக ஆட்சியில் உள்ளவர்கள் செய்யும் அராஜகங்களை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது.

தஞ்சாவூர் – 9,
இரா. ஆதிநாராயணன்.

✉ பத்திரிகையாளர்கள் போராட்டத்தை 'அரசியல் பண்பு ஆப்சென்ட்' என்ற தலைப்பின் மூலம் வெளியிட்டு – பத்திரிகை சுதந்தரம்தான் ஜனநாயகத்தின் முதுகெலும்பு என்பதை உணர்த்திய உங்கள் வரிகள் அட்சர லட்சம் பெறும்.

விழுப்புரம், ஆர். ராஜகோபால்.

✉ தேமே என தானுண்டு தன் வேலையுண்டு என்றிருந்த எஸ்.ஏ. ராஜ்கண்ணுவை, மலையாளக் கருமாடிக்குட்டன், '16 வயதினிலே'வாக மறுபிரவேசம் செய்துள்ளதென உமது சிண்டு முடியும் நாரதர்த்தனமான வாய் மொழியில் உசுப்பி விட்டு விட்டீரே...! ஏற்கெனவே 'கன்னிப் பருவத்திலே' தெலுங்குக்கு 'வாய்தா வாய்தா' என அலைந்த மனிதரை, மீண்டும் நிம்மதி இழுக்கச் செய்த உமது விஷ்வல்தாசன் சரியான 'சாடிஸ்ட்'டய்யா!"

கோபிசெட்டிப்பாளையம்,
ஜி.கே.எஸ். மூர்த்தி



அந்தக் கற்பகச் சோலைக்குள் நுழைந்ததும் குடிக்கத் தண்ணீர் கேட்டோம். "முதலில் உங்கள் கையால் ஒரு மரக் கன்றினை நட்டு விடுவோம். பின்னர் பழச்சாறே அருந்துவோம்" எனக் கூறிவிட்டு அந்த வனத்திற்குள் நம்மை அழைத்துச் செல்கிறார் அவர். மரங்களடர்ந்த அச்சோலைக்குள் நம் கையால் ஒரு மரக்கன்றை நட்டதும், ஒரு பணியாள் பழச்சாறு தருகிறார். தமது வனத் தோட்டத்தைப் பார்வையிட வருபவர்கள் அவர்களது கைகளால் மரக்கன்று ஒன்றினை நட்ட பிறகே தமது உபசரிப்பு, என்பதை ஒரு விதி போலக் கடைப்பிடித்து வருகிறார் இச்சோலையின் உரிமையாளர் சேந்தன்குடி பெ. தங்கசாமி.

புதுக்கோட்டை மாவட்டம், கொத்தமங்கலம் அருகே இருக்கிறது சேந்தன்குடி கிராமம். அங்கு தமக்குச் சொந்தமான பத்து ஏக்கர் தரிசு நிலத்தில் மரங்கள் வளர்த்து அதனை ஒரு கற்பகச் சோலையாக மாற்றிக் காட்டியுள்ளார் மரங்களை நம்பி வாழ்ந்து வரும் இந்த மனிதர்.

வானம் பார்த்த பூமி எனச் சொல்வார்கள் அதை. வறட்சியான பகுதி. அந்தப் பகுதியில் இப்போது எங்கு திரும்பிப் பார்த்தாலும் மரங்கள், மரங்கள், மரங்கள். தனியொரு மனிதரால் எப்படி முடிந்தது இந்த மரப் புரட்சி?

அறுபத்தி நான்கு வயதாகும் பெ. தங்கசாமிக்குத் துவக்க காலத்தில் பசுமைப் புரட்சி அடிப்படையில் விவசாயம் செய்து வந்ததில், முப்பதாயிரம் ரூபாய் கடன் சுமை. விவசாயத்தில் தொடர்ந்து நஷ்டம். கடனைத் திருப்பித் தர இயலவில்லை. அப் பொழுது தமது நிலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் வளர்ந்து நின்ற மரங்களை விற்று விட்டால் என்ன? என்கிற எண்ணம் வர, விற்றார்.' கைக்குப் பணம் வந்ததில் கடன் அனைத்தும் அடைந்து போயிற்று. அப்போதுதான் மனக்குள் மரம் வளர்க்கும் எண்ணம் வர, இப்பொழுது பத்து ஏக்கர் முழுவதும் மரங்கள்!

கற்பக





"மிகப் பெரிய பரப்புதான் வேண்டும் என்றில்லை. வீட்டுப் பின்புறத்தில் இருக்கும் சிறிய காலியிடம் கூட போதும்" என்கிறார் மரம் வளர்க்க. "இருபதுக்கு இருபதடி சதுர இடத்தில் இயல்பாகவே வெப்பம் தாங்கி வளரும் தன்மை

சோலையில் திருவோடு மரம்!



யுடைய இரண்டு ரோஸ்வுட் மரக் கன்றுகளும், இரண்டு சிவப்புச் சந்தன மரங்களும் நட்டு வைத்தால் போதும். அவைகள் நன்கு வளர்ந்த பின்னர் லட்சக்கணக்கான ரூபாய் ஈட்டித் தரும்" என்கிறார் அவர்.

"மரப் பயிர் ஒரு அருமையான பணப் பயிர்!" என்பதை தம் அனுபவத்தில் உணர்ந்து கொண்ட அவர் மரக்கன்றுகள் நட்டு வளர்ப்பதை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார். கற்பகச் சோலைக்குள் நம்மைச் சுற்றிக் காண்பிக்கும் போது 'இந்த மரம் வைகோ நட்டு வைத்தது' 'அந்த மரம் ராமதாஸ் நட்டு வைத்தது!' என்று நினைவுபடுத்திக் கொண்டே வருகிறார்.

வெளியூர் செல்லும்போது யார் வீட்டிலாவது சாப்பிட நேர்ந்தால் அவர்கள் வீட்டில் ஒரு மரக்கன்று நட்டு வைத்து விட்டுத்தான் உணவருந்த அமருவாராம்.

இந்த மரங்களுக்குத் தண்ணீர் எப்படி வழங்கப்படுகிறது? அதற்காக சோலையில் ஓரிடத்தில் ஐந்நூறு அடி ஆழத்தில் எட்டு அங்குல இரும்புக் குழாய் இறக்கப்பட்டு நிலத்தடி நீர் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், மழைக் காலங்களில் கொட்டுகின்ற மழை நீர் அந்தப் பத்து ஏக்கர் நிலப்பரப்பை விட்டு வெளியேறிச் சென்று விடாமல் தடுப்பதற்காக ஆங்காங்கே பல இடங்களில் அறுபதடி நீளத்திற்கு இரண்டடி அகலம் இரண்டடி ஆழத்துக்கு குழிகள் வெட்டி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மரக் கழிவுகள், கம்போஸ்டு குப்பைகள் போட்டு வாரம் ஒருமுறை அதன் மீது சாண நீர் தெளித்து மூன்று மாதங்கழித்து மூடி விடுகிறார்கள். இந்த வகையில் உருவாகும் உரக்குழிகள் மழை நீரை அதிக அளவு உறிஞ்சி மண்ணுக்குள் உட்செலுத்தி விடுகின்றது. இதனால் கடும் வெப்ப காலங்களிலும் மரங்களும், செடிகளும் பட்டுப் போகாமல் பாதுகாக்கப் படுகின்றன. இதனால் கற்பகச் சோலையின் நில மட்டத்திற்குக் கீழே இயற்கை உரத் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருவது போல் இருக்கிறது.

இங்கு இருபது வகையான மரக்கன்று பாத்தித் தோட்டம் உள்ளது. நூற்றியெழுபது வகையான மரங்கள், நூற்றியிருபது வகையான மூலிகைகள் இங்கு வளர்ந்து வருகின்றன. அபூர்வமான மரங்களில் ஒன்றான திருவோடு மரம் ஒன்றும் இங்கு இருக்கின்றது.

இங்கு இருக்கும் செஞ்சந்தன மரங்கள் இங்கு வருபவர்களை ஆச்சர்யமூட்டுகின்றன.

"சிவப்புச் சந்தன மரத்திற்கு விலை மதிப்பு வெகு அதிகம். ரேடியம் கதிர் வீச்சுகளைத் தடுக்கக் கூடிய ஆற்றல் செஞ்சந்தன மரப் பலகைகளுக்கு உண்டு. அணுசக்தி நிலையங்களின் கட்டுமானப் பணிகளுக்கு இவை அவசியம் தேவை. வெளிநாடுகளில் இதற்கு நல்ல கிராக்கி. எதிர்காலத்திலும் செஞ்சந்தன மரங்களுக்கு அதிக விலை கிடைக்கும் என்பதால் அவற்றை அதிகமாக வளர்த்து வருகிறேன்" என்கிறார் தங்கசாமி.

உறவினர்கள், நண்பர்கள் என்று எந்த வொரு மங்கள நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும் அங்கு அவர்களுக்கு இவர் அன்பளிப்பாகத் தருவது மரக் கன்றுகளைதானாம்!

கட்டுரை, படங்கள்:

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

3



சுதந்தரத்துக்கு முந்தைய இந்தியாவில் வெவ்வேறு காலகட்டங்களில் பஞ்சாயத்து அமைப்புகள் சிறப்பாக இயங்கி வந்திருந்தாலும் பெண்கள் பெரிய அளவில் பங்கேற்க அந்தக்கால கட்டத்தின் சமூக, கலாசார சூழல் இடம் கொடுக்கவில்லை. (அப்போது ஆண்களிலேயே எல்லாருக்கும் வோட்டுரிமை இருக்கவில்லை. பணக்காரர்களுக்கு மட்டுமே உண்டு!)

1920களில் இருந்த பஞ்சாயத்து சட்டங்களில் ஆண்களின் பங்கேற்பு பற்றி மட்டுமே கூறப்பட்டது. பாம்பே கிராம பஞ்சாயத்து சட்டம், பெண்கள் பங்கேற்க முடியாது என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டது.

உள்ளாட்சித் தேர்தல் விரைவில் வரவிருக்கிறது. கடந்த ஐந்தாண்டுகளில் உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்றுள்ள பெண்களின் செயல்பாடுகள் பற்றி கள் ஆய்வு அடிப்படையில் கட்டுரையாளர் மேற்கொண்ட ஆய்வுத் தொகுப்பு இக்கட்டுரை.

மௌனப்



1947ல் வந்த இந்தூர் கிராம பஞ்சாயத்து சட்டம் எழுதப் படிக்கத் தெரிந்த சொத்துள்ளப் பெண்களுக்கும் பஞ்சாயத்தில் வோட்டுப் போட, தேர்தலில் நிற்க தகுதி உண்டு என்பதை வரையறுத்தது. 1957ல் வந்த பஞ்சாயத்து சட்டத்தில் 20 பேர் அடங்கிய பஞ்சாயத்தில் பெண்கள், குழந்தைகள் மத்தியில் வேலை செய்ய ஆர்வம் உள்ள இரண்டு பெண்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

இப்படிப் பெண்களை நியமன உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பது குறித்து இதற்கு முன்னதாகப் பல்வேறு சமயங்களில் பெண்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பெண்களுக்கு அரசியலில் இட ஒதுக்கீடு தேவையில்லை என்று சுதந்தரத்துக்கு முன்பு பெண் தலைவர்களே மறுத்துள்ளனர். 1931ல் இந்திய தேசிய காங்கிரஸின் தலைமை உரையில் சரோஜினி நாயுடு, "பெண்கள் போர்க்களத்திலும் ஆட்சியிலும் ஆண்களோடு இணைந்து எப்பொழுதுமே பணியாற்றி வந்திருக்கிறார்கள். பெண்களுக்கென்று முன்னுரிமை அளிக்கக் கோருவது அவர்களே தங்களுடைய கீழ்நிலையை ஒப்புக் கொள்வதாகிறது" என்று சொன்னார்.



1933ல் நடந்த ஏழாவது அகில இந்திய பெண்கள் மாநாட்டில் அருணா அசஃப் அலி "சமத்துவத்துக்கான கோரிக்கை உண்மையானது என்றால் பெண்களுக்காக இட ஒதுக்கீடு கேட்பது என்பது அர்த்தமில்லாதது. அபத்தமானது" என்றார். (இந்தப் பெண் தலைவர்கள் ஏற்கெனவே படித்து முன்னேறிய வசதியான குடும்பப் பின்னணி உடையவர்கள் என்பதும் கவனிக்கத்

தக்கதாகும்)

ஆனால் காந்தியின் வரவிற்குப் பிறகு, ஏராளமான படிப்பறிவற்ற, ஏழை, நடுத்தரக் குடும்பப் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்து ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கெடுக்க ஆரம்பித்தனர். ஆயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்பு, பெண்களுக்கும் வோட்டுரிமை வேண்டும் என்ற உரிமை கோஷத்துக்கு வழி வகுத்தது.

புரட்சியில் பெண்கள்!

விடுதலைக்குப் பிறகு 1952ல் நடந்த முதல் தேர்தலில் நிறைய பெண்கள் போட்டியிட்டனர். இந்திய தேசிய காங்கிரஸ் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற பெண்களைக் கௌரவிக்க எண்ணி அவர்களை கவர்னர்களாகவும், தூதுவர்களாகவும் நியமித்தது.

ஆனால், ஆரம்ப காலத்தில் இருந்த உத்வேகம் கொஞ்சம், கொஞ்சமாக குறையத் தொடங்கியது. தவிரவும், அரசியல் கட்சிகள் வாய் வார்த்தையாக பெண்களுக்கு அதிகாரத்தில் இடமளிப்பது பற்றிப் பேசினார்களே தவிர உண்மையில் அதை நடைமுறைப் படுத்துவதில் பெரிய ஆர்வம் காட்டவில்லை.

1970களில் தன்னார்வ பெண்கள் அமைப்புகள் தோன்ற ஆரம்பித்தன. இவர்கள் கட்சி அரசியலில் அவ நம்பிக்கை கொண்டிருந்தனர். பெண்கள் அமைப்புகளுக்கும், அரசியல் அமைப்புகளுக்கும் உள்ள உறவுகள் பற்றி கேள்விகள் எழுப்பினர். அதிகார அமைப்புகளுக்கு மத்தியில் பெண்களாக ஒருங்கிணைவது பற்றிய தேவையை உணர்ந்தனர்.

காலப்போக்கில் இடதுசாரிக் கட்சிகளின் பெண்கள் அமைப்புகளும் சுயேச்சைப் பெண்கள் அமைப்புகளும் சில பிரச்னைகளில் ஒன்றிணைந்தும் செயல்பட ஆரம்பித்தார்கள். பாலியல் வன்முறை, வரதட்சணைத் தொடர்பான சட்டங்களில் மாற்றங்கள் ஏற்பட, இந்த அமைப்புகளின் போராட்டங்கள் காரணமாக இருந்தன.

ஆனாலும் எண்பதுகளில், முஸ்லிம் பெண்ணின் ஜீவனாம்சம் பற்றிய ஷாபானு வழக்கில் பெண்கள் அமைப்புகள் பெருத்த தோல்வியைச் சந்தித்தன. 1986ல் முஸ்லீம் பெண்கள் தொடர்பான பாதுகாப்பு மற்றும் விவாகரத்துச் சட்டம் உருவானது.

ஷா பானு வழக்கு, அதைத் தொடர்ந்து 1987ல் ரூப் கன்வார் சதி, 1992ல் பாபர் மசூதி இடிப்பு முதலிய தொடர்ச்சியான சம்பவங்கள் அரசியலில் பல்வேறு மதவாத சக்திகளின் கைகள் ஓங்க ஆரம்பித்ததைக் காட்டின.



இப்பொழுது பெண்கள் புதிய

அரசியல் அமைப்புகளை மட்டுமல்லாமல், பழைய மதவாத சக்திகளையும் மறுபடியும் எதிர்கொண்டாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. இனி பெண்கள் அமைப்புகள் அரசியல் அமைப்புகளில் அதிகாரத்தில் பங்கு பெறாமல் வெளியிலிருந்து வேலை செய்து சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதில் பெரிய பாதிப்புகளை உண்டாக்க முடியாது என்பதை உணர ஆரம்பித்தனர். பஞ்சாயத்து முதல் பாராளுமன்றம் வரை பதவிகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

அதன் விளைவுதான் இன்று நாடு முழுவதும் லட்சக்கணக்கான பெண்கள் பஞ்சாயத்து தலைவிகள் ஆகியிருக்கிறார்கள்.

இந்த ஐந்து ஆண்டு காலத்தில் தமிழ் நாட்டில் பஞ்சாயத்துப் பெண்கள் என்ன செய்திருக்கிறார்கள்? எதை செய்ய முடிந்தது: தொடர்ந்து அரசியலில் பெண்கள் பங்கேற்பது பற்றி என்ன நினைக்கிறார்கள்? கேட்கலாம் அவர்கள் குரல்களை...

"பத்து தெருவுக்குப் பைப் போட்டிருக்கோம். போர் பைப்பு 60 வீடுகளுக்குப் போட்டிருக்கோம். நாலு ஜல்லி ரோடு போட்டிருக்கோம். இரண்டு சாக்கடை கால்வாய் கட்டியிருக்கோம். எங்க ஏரியாவிலே காலனிக்காரங்களுக்கு 20 தொகுப்பு வீடு கட்டி கொடுத்திருக்கோம்" என்கிறார் மங்கையர்க்கரசி- ஊராட்சி மன்ற உறுப்பினர்.

"இருட்டிச்சன்னா பொம்பளைங்க தனியா போறது பிரச்னையாயிடும். டியூப் லைட் போட்டா பசங்க கல்ல எடுத்து அடிக்கறாங்க. இப்ப கடலோரம் எட்டு சோடியம் லைட் போட்டிருக்கோம். மீனவர்களுக்குத்தான் கடலோரத்துப் பிரச்னை புரியும். பாம்பு பயம், பொம்பளைங்க தனியா வர முடியாத கஷ்டம். லேடீஸுக்குத்தான் குடும்பத்தப் பத்தி தெரியும். குடும்பம், குழந்தைன்னு எல்லார் வீட்டு பிரச்னை பற்றியும் அவங்கதான் கவலைப் படுவாங்க" என்கிறார் பஞ்சாயத்து தலைவர் சம்சாரணி.

"முன்னாடி எல்லாம் இந்த ரோடு, கரடு, முரடா, பாறைகளோட இருந்தது. நிறைய பொம்பளைங்க தண்ணி எடுத்துக்கிட்டு வரும்போது, கல் தடுக்கி கீழே விழுந்துடுவாங்க. அதிகாரிகளை இங்க நேரடியாகக் கூட்டிகிட்டு வந்து காட்டி, இப்ப கான்கிரீட் ரோடு போட்டிருக்கிறோம். அதேமாதிரி மக்களுக்கு ரேஷன் கார்டு பிரச்னை, தண்ணீர்ப் பிரச்னை எதுன்னாலும் அந்தப் பகுதி மக்களை ஒன்று திரட்டி, அவங்களையே வந்து அதிகாரிகளைச் சந்திக்கச் சொல்லுவேன்.

> "கோடீஸ்வரன் நிகழ்ச்சில கஷ்டமானக் கேள்வி கேட்டுட்டாங்களா?"
> "ஆமா, ஒரு மெகா தொடரின் ஆயுட்காலம் என்னன்னு கேட்டாங்க!"
> – வந்தவாசி பா. ஜெயக்குமார்

"ரேஷன் கார்டுக்குப் ஃபோட்டோ ஒட்டி கார்டு வாங்க எவ்வளவு காக ஆகுமோ, அதைச் சொல்லி, அவங்களையேக் கூட கூட்டிக்கிட்டுப் போய் வாங்கிக் குடுப்பேன். பின்னாடி, கார்டு வாங்க, கவுன்சிலர் காக வாங்கினாங்கன்னு சொல்லக்கூடாது பாருங்க" என்பது வார்டு மெம்பர் – அன்புச்செல்வி.

"ஸ்கூலுக்குப் போற வழியில ஒரு ஒயின் ஷாப் இருக்கு. பிள்ளைங்க சின்ன சந்து வழியா போறபோது எதிர்ல பைக் வேகமா வருது. ஸ்கூல் பசங்க ஒதுங்கிப் போகலாம்னா, சைடுல டிச்சில விழ வேண்டியிருக்கு. இந்தப் பிரச்னையத் தீர்க்கறதுக்காக, சந்து முனையில வழியைக் குறுக்கி, நாலு கல்லு வச்சோம். அதுக்கு எதிர்ப்பு வந்தது மட்டுமில்ல, கல்லே காணாம போயிடுச்சு. ஆனா, மறுபடியும் கல்லு வச்சிட்டு, குழந்தைங்கதான் முக்கியம்; பெரியவங்க சுத்திக்கிட்டு போகலாம்னு சொல்லிட்டேன்"- என்பவர் நகராட்சி மன்ற உறுப்பினர் தேவகுமாரி.

"ஆம்பளைகளைவிட பொம்பளைக்குத்தான் தண்ணிக் கஷ்டம், பைப்பு கஷ்டம், சாக்கடைக் கஷ்டம் எல்லாம் அதிகம் தெரியுது. இதையெல்லாம் ஆம்பளைங்க கவனிச்சுப் பண்றதைவிட பொம்பளைங்க நல்லா பண்றாங்க" என்று சொல்லும் ஈஸ்வரி, வார்டு உறுப்பினர்.

இவர் சொல்வது ஒரு முக்கியமான உண்மை. பெருவாரியான பெண்கள் பஞ்சாயத்துக்குள் வந்தபிறகு இந்த ஐந்தாண்டுகளில் குடிநீர் பிரச்னை, சாக்கடை பிரச்னை, தெருவிளக்குப் பிரச்னை, கழிவறைகள், ரோடுகள் போன்ற அன்றாட வாழ்வின் பிரச்னைகளுக்கு முன்னுரிமை கிடைத்திருக்கிறது. இதைச் சாத்தியமாக்கியதில் பெண்களுக்குப் பெரிய பங்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. பஞ்சாயத்தில் பெண்கள் செய்தது ஒருபுறமிருக்க, பஞ்சாயத்துக்குள் வந்தது இந்த பெண்களை எந்தவிதத்தில் மாற்றியிருக்கிறது?

"வீட்டுக்குள்ளேயே இருந்தோம்னா, வெளியே போக, நாலு பேரு கூட பழகத் தெரியாது. இப்ப தைரியம் வந்து இருக்கு" என்

கிறார் வார்டு மெம்பர் வீரமணி.

"இந்த ஐந்து வருஷத்துல நல்ல எக்ஸ் போஷர் கிடைச்சிருக்கு. பொதுமக்களோட நிறைய உறவாட முடிஞ்சிருக்கு" என்பது நகர் மன்ற உறுப்பினர் மாதங்கி. "இதற்கு முன்பு வீட்டிலும் வெளியிலும் அதிகம் பேசாதவர்களாக இருந்த நாங்கள் இப்போது தைரியமாகவும் தன்னம்பிக்கையுடனும் அதிகாரிகளிடம் கூடப் பேசுபவர்களாக மாறியிருக்கிறோம்" என்று பல பெண் உறுப்பினர்கள் சொல்கிறார்கள். இதுவரை நாம் கேட்ட குரல்கள் எல்லாம் பஞ்சாயத்தில் பெண்களின் பங்கேற்பு பற்றி பெரும் நம்பிக்கையைக் கொடுத்துள்ளன. சரி, அப்படியானால் பஞ்சாயத்தில் பெண்களின் வருகை முழுக்க முழுக்க வெற்றி என்று சொல்லி விட முடியுமா? நாம் விரும்பும் ஆண் பெண் சமத்துவம் வந்துவிட்டதா? வீட்டிலும் வெளியிலும் பெண்கள் பற்றிய கலாசார, சமூக மதிப்பீடுகள் எல்லாம் மாறிவிட்டதா? பஞ்சாயத்தில் பெண்களின் பயணம் முழுக்க முழுக்க மலர்ப் பாதையா?

இல்லை. அப்படி முழுமையாகச் சொல்ல முடியவில்லை.

"லேடீஸ் கேட்டா இங்க யாரும் ஒழுங்கா பதில் சொல்றது இல்ல. ஒரு தடவை கலெக்டருக்குக் கொடுத்த மனு பஞ்சாயத்துக்கு வந்தது. பஞ்சாயத்து தலைவர் அதை எங்கிட்டேயேத் திருப்பி கொடுத்துட்டாரு. அடிப்படை வசதிகளுக்காக மனு கொடுத்தா நாம வார்டு மெம்பரா இருந்தும்கூட கலெக்டர்க்கு கொடுக்கற மனு நமக்கே திரும்பி வரும்னா நாம என்ன காரியம் பண்ண முடியும்? இந்த ஐந்து வருஷத்துல பெரிசா எதுவும் பண்ண முடியாமப் போனது பத்தி வருத்தமா இருக்கு" என்று சலித்துக் கொள்கிறார் சுயேச்சை உறுப்பினர் எம். பிரேமா.



"இத்தனை பிரச்னைகளுக்கும் எதிராக நீச்சல் போட்டு உறுதியாக நின்ற பெண்களும் உண்டு. மதுரை லீலாவதி, ஊரப்பாக்கம் மேனகா போல உயிரையே விலையாகக் கொடுத்த பெண்களும் உண்டு.

"பெண்களைத் தாக்கக்கூடிய ஆயுதம், அவங்க நடத்தையைப் (character) பத்தி தப்பா பேசறதுதான். முதல்லல்லாம் வீட்டுக்கு வந்து ரொம்ப அழுவேன். நாளாக, நாளாக, இப்படி பேசறதக் கேட்டுட்டு, சும்மா விடறதில்லன்னு பிடிவாதம் வந்துது" என்று தனக்குள் நடந்த மாற்றத்தைப் பதிவு செய்கிறார். நகராட்சி மன்ற உறுப்பினர் சிவகாமி

"அமைதியா இருந்தா ஒரு காரியமும் நடக்காது. மொதல்லல்லாம் கூட்டத்துல கூ குடிச்சுட்டு சும்மா இருந்தேன். ரெண்டே ரெண்டு பொண்ணுங்கதான் எழுந்து பேசுவாங்க. எங்க முனிசிபாலிட்டியில 30ல் 10 உறுப்பினர்கள் பெண்கள். சத்தம் போட ஆரம்பிச்ச பிறகு காரியங்கள் நடக்குது" என்கிறார் நகராட்சி உறுப்பினர் பி. கீதா.

இந்த அனுபவங்களுக்குப் பிறகு மறுபடியும் அடுத்த உள்ளாட்சித் தேர்தலில் நிற்க எத்தனை பெண்கள் விரும்புகிறார்கள்?

"மக்கள்கிட்டே இவ்வளவு நாள் நான் செஞ்சதை வச்சு திரும்ப இன்னும் செய்வேன்னு சொல்லி வோட்டு கேட்கற தைரியம் இருக்குங்க" என்கிறார் வார்டு உறுப்பினர் ஈஸ்வரி.

"நானேதான் திரும்ப நிக்கணும்னு இல்லீங்க. வேற யாராவது பெண்களைக் கூட ஊக்கம் கொடுத்து நிக்க வைக்கணும்னு நினைக்கறேன்" என்கிறார் இன்னொரு வார்டு உறுப்பினரான அன்புச்செல்வி.

"அடுத்த தடவையும் எங்க ஊர் பஞ்சாயத்து தலைவர் பதவியைப் பெண்களுக்கு ஒதுக்கிடு பண்ணினா பிரச்னை இல்ல. ஆண்களுக்கு எதிரா நின்னா ஒரு மாதிரி பேசுவாங்க" என்கிறார் பஞ்சாயத்து தலைவர் கம்சராணி.

உற்சாகக் குரல்களுக்கு மத்தியில் வருத்தமான குரல்களும் உண்டுதான்.

"எங்க ஊராட்சி பஞ்சாயத்து நடக்கிற எடத்துல குடிக்கிறதுக்குத் தண்ணி கூட கிடையாது. ஒருதடவ கூட்டத்துக்குப் போனா 25 ரூபாய் உண்டுன்னு சொன்னாங்க. ஆனா



அதையும் ஒரு வருஷமா தர்றதில்ல. மீட்டிங்குக்குப் பதினோரு மணிக்குப் போனா மூன்றரை மணி ஆயிடும்' என்கிறார் வார்டு உறுப்பினர் வள்ளி. "அன்னிக்கு கூலி வேலைக்கே போக முடியாது. நான் திரும்ப அடுத்த தேர்தல்ல நிக்க மாட்டேன். நீ நின்னு என்ன செஞ்சேன்னு எல்லோரும் கேக்கறாங்க. வார்டு மெம்பர்னா என்ன பெரிய பெருமை. மீட்டிங் போனா பொழப்புப் போயிடுது. பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தது சரிதான்னு நெனைக்கிறேன். நல்ல வேலை செஞ்சி நல்ல பேர் வாங்கணும்னு நெனைக்கிறேன். ஆனா, எஸ்.சி.க்கு ரிசர்வேஷன் கொடுத்தா எத வச்சி நாங்க வேலை செய்ய? காசு இல்லை. எங்கள நம்பி யார் காசு கொடுப்பாங்க. நம்ப சப்போட்டுக்கு ஆளு இருந்தா நாம சாதிக்கலாம். 3 வருஷமா கொறைகளை எழுதிக் கொடுக்கிற வேலை தான் நடந்தது. வேற எதுவும் நடக்கல" என்கிறார் வார்டு உறுப்பினர் வள்ளி.

பஞ்சாயத்தில் பெண்கள் இன்னும் சிறப்பாகச் செயல்பட என்ன தேவை என்று இவர்கள் நினைக்கிறார்கள்?"

"முதல்ல கொஞ்ச நாளைக்குப் பொம்பளைங்களுக்கு ஆம்பள துணை தேவைப்படலாம். ஆனா, கொஞ்ச நாள் கழிச்சு படிக்காத முட்டாளுக்குக் கூட நாட்டு நடப்பு புரிஞ்சுடும். நீ என்னடா, நானே பாத்துக்கிறேன்னு வேலை பண்ண ஆரம்பிச்சிடுவாங்க. படிப்பு அறிவு இல்லாட்டாகூட மூளை இருந்தா படிச்சவங்களகூட அவங்களுக்கான இடத்துல நிறுத்தி வைக்க முடியும். முதல்ல பட்டா, வரி, மனு போடறது இதெல்லாம் பத்தி மத்தவங்ககிட்ட கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டேன். இப்ப மத்தவங்களுக்குச் சொல்ற அளவுக்கு வளர்ந்துட்டேன். லேடீஸ் பஞ்சாயத்துல சட்டபூர்வமா போலீஸ் பாதுகாப்பு தரணும். அப்பதான் பயம் இல்லாம லேடீஸுங்க வேலை செய்ய முடியும்" என்று வாதிடுகிறார் கம்சராணி.

சரியா, தப்பா என்ற கேள்விகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு ஆயிரக்கணக்கான அடிமட்டத்துப் பெண்கள், பொது வாழ்வில் பங்கேற்க ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தப் பெண்களின் பங்கேற்பை சாதனைகளாகவும் பார்க்கலாம், சமூகத்திற்கு வந்த சோதனையாகவும் பார்க்கலாம். பெண்களால்தான், விளக்கு வசதி, நோய்க்கிருமிகள் தாக்காமல் இருக்க கழிப்பறைகள், சாக்கடை வசதிகள், போன்ற அடிப்படைப் பிரச்னைகளுக்கானத் தீர்வுகள் கிட்டிய

தாகக் கருதலாம். இல்லை, பெண்களுக்கு இதைத் தாண்டி யோசிக்க அறிவில்லை என்று குற்றம் சாட்டலாம். பெண்கள் அரசியலுக்குள் வருவது பற்றி நேர்மறையான உதாரணங்களைக் காட்டுவதுதான், ஏற்றுக் கொள்வதுதான் அவர்களையும் சமூகத்தில் ஒரு அங்கமாக பார்ப்பதன் அடையாளம். அதை விட்டுவிட்டு சின்ன சின்ன இடர்பாடுகளைப் பூதாகாரப்படுத்தி அவர்களைப் பொது வாழ்க்கைக்கு லாயக்கற்றவர்களாகச் சித்திரிப்பது பெண்கள் வளர்ச்சியை மட்டும் ஒடுக்கும் விஷயமல்ல. ஒட்டு மொத்த மனிதகுல மேம்பாட்டுக்கே முட்டுக் கட்டை போடும் செயலாகும்.

ஒரு குழந்தை நடக்க ஆரம்பிக்கும்போது தத்தக்கா, பித்தக்கா என்றுதான் நடக்கும். அதற்காக 'உனக்கு நடக்க வராது' என்று சொல்லி உட்கார வைத்தால் வளர்ச்சி தடைப்படுவது குழந்தைக்கு மட்டுமல்ல... அந்தக் குழந்தையே சுமையாகிப் போகும் ஆபத்தும் உண்டு.

மக்கள் தொகையில் சரிபாதி பேர் முடங்கிக் கிடந்தால், முடக்கப்பட்டுக் கிடந்தால் அந்த சமூகம் முன்னேறுவது எப்படி? சுதந்தர இந்தியாவில் உள்ளாட்சி முறைகள் ஒழுங்காக இயங்காததால் சுதந்தரம் பெற்று 54 ஆண்டுகள் ஆனபிறகு கூட மைல் கணக்காக குடி தண்ணீருக்கு அலைகிறோம். இயற்கை உபாதையிலிருந்து விடுபட வெளியிடங்களைக் கழிப்பிடமாக ஒதுக்குப் புறங்களைத் தேடி அலைகிறோம். இன்றைக்கு ஐந்தாண்டு பஞ்சாயத்து ஆட்சிக்குப் பிறகு பெண்களால் இந்த அடிப்படை பிரச்னைகள் தீர்ந்துள்ளதா? இல்லையா? என்பதைக் கிராமப் புறத்திலுள்ள யாரை வேண்டுமானாலும் கேட்டுப் பார்த்தால் நமக்கே தெரியும் பெண்கள் அரசியலுக்கு வந்தது சரியா, தப்பா என்பது.

பெண்களுக்குத் தொடர்ந்து வாய்ப்புக் கொடுத்தால் இன்னும் என்னவெல்லாம் நடக்கும் என்று சிந்திப்போம். இறந்து போகும் எண்ணிக்கையைக் குறைப்பது சிறு குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைப்பது, அரசின் திட்டங்களை நேர்மையோடும், திறமையோடும் செயல்படுத்தி நாட்டின் பொருளாதார சீர்குலைவைச் சரிசெய்வது போன்ற ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளைச் செய்வார்கள். பஞ்சாயத்து தேர்தல்கள் போல சட்டசபை மற்றும் பாராளுமன்றத்திற்கான தேர்தல்களிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதன் மூலமே நாட்டை பரிணாம வளர்ச்சியில் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல முடியும்.

இது பெண்களால் முடியும் என்பதை பஞ்சாயத்துப் பெண்கள் நிரூபித்து விட்டார்கள். ●



சிக்கலில்



* சம்மா சம்மா

“இந்தியப் பெண்ணின் மனத்தை நன்கு தெரிந்து வைத்திருக்கிறோம். வெறும் நிறம், வடிவம், கலை என்ற எல்லைகளைத் தாண்டி இந்தியப் பெண்ணின் துடிப்பையும் துள்ளலையும் பிரதிபலிக்கும் வகைகளில் இந்த ஃபேஷன் ஷோ அமையும்.” - வாக்குறுதி அளிப்பது ஃபாஷன் டிசைன் கவுன்ஸில் ஆஃப் இந்தியா (FDCI) ‘லாக்மே இந்தியா ஃபாஷன் வீக்” என்ற நவயௌவன வார கொண்டாட்டங்கள் ஆகஸ்டில் நடக்கப் போகின்றன. ஏழு நாட்களில் 28 ஷோ இருக்குமாம்; 44 டிசைன்களின் படைப்புகள் காட்சிக்கு வருமாம். லாக்மே தவிர ஏழு பிரபல ஸ்பான்ஸர்கள் இந்த கொண்டாட்டங்களைத் தூக்கி நிறுத்தப் போகிறார்கள்!

தொழில் ரகசியத்தை அமுக்க முடியாமல் ஒரு காலத்தில் தத்தளித்தவர் அனுமாலிக். இவரின் ‘ஹிட்’டான ‘மெட்டுகளெல்லாம், அந்நிய ட்யூன்களை அப்படியே லபக்கி, கொஞ்சம் இந்திய மசாலா சேர்த்து இசையமைக்கப்பட்டவை என சில எட்டப்பர்கள் எப்படியோ கண்டு பிடித்து வெட்ட வெளிச்சமாக்கி விடுவார்கள். ஆனால் இன்று... ஹாலிவுட்டிலே அனுமாலிக்கின் ‘சம்மா சம்மா’வை (சைனா கேட்) தூக்கித் தலையில் வைத்து ஆடுகிறார்களே! ‘மௌலின் ரூஜ்’ படம், 1900ல் பாரீசில் நிகழும் காதல் இசைக் காவியம், க்ளப் பாடகியாக வரும் கதாநாயகி நிக்கோல் கிட்மான் பாடும் பாட்டில், இடைச் செருகலாக அல்கா யக்னிக்கின் குரல் ஃபாஸ்ட் ட்ராக்கில் ஒலிக்கிறது. இயக்குனர் பாஸ் லுஹ்ரமான் மும்பை வந்து, அனுமாலிக்கை நேரில் சந்தித்து ‘சம்மா சம்மா’வைப் பாராட்டியதை வைத்து, “நீ எங்கியோ போயிட்ட தலைவா” என்று அவர் காலில் சாஷ்டாங்கமாக விழ, பலர் தயாராகி விட்டார்கள்?

சாஷ்டாங்க நமஸ்காரமென்றால் உங்களுக்கு ‘அம்மா’ நினைப்பு வருவது போல் எங்களுக்கு ‘ஐயா’ நினைவு வரும். குரு பூர்ணிமா என்றால், தாக்கரேயின் காலில் விழுந்து ஆசிபெற்றால்தானே தொண்டர்களின் வாழ்க்கையே பூரணமாகும்? ஆனால் இம்முறை ஒரு நமஸ்காரத்துக்கு வழியில்லை! ஏன்... குருவேயில்லை. அன்றைய நிகழ்ச்சிகளை எல்லாம் ரத்து செய்து விட்டு, தாக்கரே பாட்டுக்கு கர்ஜத்திலுள்ள தம் ஃபார்ம் ஹவுசுக்குள் புகுந்து கொண்டுவிட்டார். இவர் ஆதரவை நாடி வந்த முன்னாள் போலீஸ் கமிஷனர் தியாகி, தீவிர சிகிச்சைப் பிரிவில் சென்று படுத்துவிட்டார். இரண்டுக்கும் சம்பந்தமிருக்கலாம் என்று பட்சி சொல்கிறதே?

மும்பைக் கலவரங்களை ஒட்டிய ‘சுலைமான் பேக்கரி’ வழக்கில், (பேக்கரியில் சிலர் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டனர்) தியாகி



* ஆகஸ்டை நோக்கி...

மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அவர் கைதாவதைத் தவிர்க்க, அன்று அரசாண்ட சிவசேனையின் உதவியை நாடியிருக்கிறார். சிவசேனை கிடப்பில் போட்ட ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் ரிப்போர்ட்டைத் தேடி எடுத்து, இன்றைய காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் அரசு ஆக்ஷன் எடுத்திருக்கிறது.

ஸ்ரீகிருஷ்ணா ரிப்போர்ட் நடுவு நிலையற்றது. நாங்கள் புறக்கணித்ததை இவர்கள் கௌரவிப்பது எங்களைப் பழிவாங்கும் நோக்குடன்தான் என்று ஹிட் லிஸ்டில் அடுத்து உள்ள சிவசேனைத் தலைவர் கஜானன் கீர்த்திகர் புலம்பியுள்ளார். 'போலீஸ் தற்காப்புக்காகத் தான் சுட்டது'



* கரிஷ்மா

ஜின்னா ஹவுஸ்!



* சிக்கலில்

என்பது அவர்கள் வாதம்! போலீஸின் செய்கை நியாயமா? அநியாயமா? என்று, அம்புக்குறி போட்டு, கேள்விகளை எழுப்பத் தோதாக, அன்றே டி.வி.யிலும் சுட்டுத் தொலைத்திருந்தால், இன்று இந்தத் தடுமாற்றம் இருந்திருக்காதே? (தமிழ் நாட்டிலிருந்து கற்றுக் கொள்ள இவர்களுக்கு எவ்வளவோ இருக்கிறது...)

டி.வி. ஷூட்டிங் என்றதும், ஒரு விஷயம் நெருடுகிறது. கோவிந்தா நடத்தும் 'ஜுதோ சப்பர் ஃபாட்கே' நிகழ்ச்சியில் (ஸோனியின் கோடீஸ்வரன்) முகம் காட்ட கரிஷ்மா கபூர் அழைக்கப்பட்டு, அதற்கான தொகையாக 50 லட்சமும் 'ஸோனி'க்காரர்களால் பேசி முடிக்கப்பட்டதாம். ஆனால் கடைசி நிமிடத்தில், "விலை மதிப்பிட முடியாத உங்கள் முகத்துக்கு 50 லட்சம்தானா? ப்பூ...!" என்று யாரோ மூட்டிக் கொடுக்கவே, கரிஷ்மா பங்கேற்க மறுத்துவிட்டாராம். 50 லட்சங்களுடன் நிகழ்ச்சியில் வெல்லும் பரிசுகளைச் சேர்த்தால் கோடி காணாதா?

என்னவோ... விலை பேச முடியாதவை சர்ச்சைக்குள்ளாவது மும்பையில் வழக்கமாகிவிட்டது. கரிஷ்மாவாவது புது முகம். இது 1930த்திய பழைய முகம்... ஆனால் மினுமினுப்பும் கம்பீரமும் குறையாத வஜ்ஜிர தேகம்.

ஆம். மலபார் ஹில்ஸிலுள்ள 'ஜின்னா ஹவுஸை'த்தான் சொல்கிறோம். ஒவ்வொரு கல்லையும், சில்லையும் பார்த்துப் பார்த்து ஜின்னா கட்டினாராம். அதைக் 'கொடு கொடு' என்று பாகிஸ்தானும், விடுவிடு என்று இந்திய - மராத்திய அரசும் நெடுங்காலமாக இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கின்றன. 'என் இதயம் அது. அதைத் துண்டாடி விடாதீர்கள்' என்று ஜின்னாவே அந்தக் காலத்தில் நேருவிடம் மன்றாடியிருக்கிறாராம். இந்திய கலாசாரக் கழகத்திடம் இருக்கும் ஜின்னா ஹவுசுக்கு மறுபடியும் சொந்தம் கொண்டாட முஷாரஃப் முனைவார் என்று பேச்சு அடிபடுகிறது. ம்ம்... நாட்டின் நலனும் வீட்டின் நலனும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தது என்று சும்மாவா சொன்னார்கள்?

- ஜெயஸ்ரீ ராஜ்

முதியோர் இல்லம் பற்றிய செய்தித் தொகுப்பு தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருந்தது.

இடிந்த அரண்மனை போல கம்பீரம் தொலைந்து, பலமிழந்து, சாறு பிழிந்த சக்கையான மேனியுடன் டீவிப் பெட்டிக்குள் உலாவந்த பழுத்த இலைகளைப் பார்க்க, மனத்தின் மூலையில் வலித்தது.

"ப்ச, எனக்கு மட்டும் லாட்டரி சீட்லே பரிசு விழுந்தால், அப்படியே தூக்கிக் கொடுத்துடுவேன் இந்த மாதிரி சேவை மையங்களுக்கு" என்றேன் மனசு கனத்துப் போய்.

அதற்கு மேல் வேறு நிகழ்ச்சிகளைப் பார்க்க மனசு வராமல், மனைவியைப் பார்த்தேன்.

என் பார்வைப் புரிந்தவளாய், டீவியை அணைத்துவிட தலையசைத்தாள்.

அடுத்த நாள் காலையில் அலுவலகம் போக பேருந்து நிலையத்துக்கு வந்தபோது பெட்டிக் கடைக்காரன் 'கார்ல் லூயிசாய்' ஓடி வந்தான். அவன் வேகத்தில் பயந்து போய் நின்றேன்.

"சார், உங்களுக்கு லாட்டரியிலே லட்ச ரூபாய் பரிசு விழுந்திருக்கு."

ஒரே மூச்சில் சொல்லி முடித்து, வாயைத் திறந்து காற்றை உள்வாங்கினான்.

"ஒரு லட்சமா? எனக்கா?"

அதற்குள் அக்கம், பக்கம் நின்றவர்கள் எங்களைச் சுற்றி வந்து நின்றனர். திடீர் ஹீரோ?

"லாட்டரிச் சீட்டு எங்கே சார்?"

"வீட்டுலே இருக்கு."

மனசு புலிப்பாய்ச்சலில் ஓட, வீட்டை நோக்கி விரைந்தேன்.

"என்னாச்சு? எதை விட்டுட்டுப் போயிட்டீங்க இன்னிக்கு?"

வழக்கமான கிண்டல் தொனியுடன் கதவைத் திறந்தவளுக்குப் பதில் சொல்லாமல் என் அலமாரியைக் குடைந்து– யுரேகா! லாட்டரிச் சீட்டுக் கிடைத்துவிட்டது.

பெட்டிக் கடைக்காரன் பரிசு விழுந்ததை மறு ஒலிபரப்புச் செய்ய, மனைவியின் கண்களில் ஜொலிப்பு.

"வாயைக் காட்டுங்க. கருநாக்கான்னு பார்ப்போம். நேத்துதான் டீவியைப் பார்த்துச் சொன்னீங்க, பரிசு விழுந்தால் அப்படியே கொடுத்துடப் போறதாக. நடந்துடுச்சே" என்று அவள் சொன்னதும் திகைத்துப் போய் நின்றேன்.

என்னிடம் ஒரு பழக்கம். அம்மா சொல்லித்தந்த வாழ்க்கைப் பாடம். ஏதாவது ஒரு குறிக்கோளில் தீவிரமாய், விடாப்பிடியாய் இருக்கணும்னு அம்மா சொல்வாள்.

வாழ்க்கை முழுக்க ஸ்வீட் சாப்பிட மாட்டேன், இல்லை, மீசை வச்சுக்க மாட்டேன், இல்லை, பொய் சொல்ல மாட்டேன், இல்லை, கெட்டவார்த்தைப் பேச மாட்டேன்!

கிருஷ்ணா



கர்வம்

'ஒன்றைச் சொல்லிவிட்டால், நிறைவேற்றியே ஆகணும்' என்கிற குறிக்கோளை மனத்தில் சபதமாய் ஏற்றுக் கொண்டேன். இது நடந்தது என் கல்லூரிப் பருவத்தில். இன்று வரை நடந்து கொண்டு வருகிறேன்.

அலுவலகத்தில் கூடச் சொல்வார்கள்.

"அவர் முடியும்னு சொல்லிவிட்டால், கவலையே படவேண்டாம். தலைகிழே நின்னு தண்ணி குடிச்சாவது காரியத்தை முடிச்சுடுவாரு."

பெட்டிக்கடைக்காரன் போன பிறகு மனைவி கேட்டாள்,

"பணத்தை என்ன செய்யப் போறீங்க?"

"ஏதாவது முதியோர் இல்லதுக்குக் கொடுத்துட வேண்டியதுதான் நேத்து சொன்ன மாதிரி" என்றேன் அமைதியாய்.

"அத்தனையையுமா?"

தலையசைத்தேன். அருகில் வந்து கன்னத்தில் பூ மாதிரி முத்தமிட்டாள்.

அவளுக்கு என் மேல் பிரியம் அதிகமாகும் தருணங்களில் கிடைக்கும் அற்புதப் பரிசு இது.

மீண்டும் வீட்டிலிருந்து புறப்பட்டு அலுவலகம் வந்தடைந்தேன்.

"ஹேய் ரமணா, கையைக்கொடு. பெட்டிக்கடைக்காரன் சொன்னான்" என்று கைகுலுக்கினார் வெற்றிலை மணி, உதட்டுச் சிவப்புடன்.

அலுவலக நண்பர்கள் குழு சூழ்ந்து கொண்டது.

பணத்தை வங்கியிலே போடு, வீட்டுலே போடு, நிலத்துலே போடு, நகையிலே போடு என்று தர்மமாய் நிறைய யோசனைகள்!

அவர்கள் பேசி ஓய்ந்த பிறகு சொன்னேன் என் திட்டத்தை. நம்ப முடியாமல் பார்த்தனர் ஒட்டு மொத்தமாய் அனைவரும்.

எப்போது எனக்குள் அது வந்து ஒட்டிக் கொண்டது என்று தெரியவில்லை.

"என்னப்பா லட்ச ரூபாய் பரிசு கிடைச்சிருக்காமே? என்ன செய்யப்போறே?"

"முதியோர் இல்லத்துக்குக் கொடுக்கப் போறேன்."

"நிஜமாவா? பெரிய மனசுப்பா உனக்கு."

மேற்படி உரையாடல் கிட்டத்தட்ட நூறு பேருடன் நடந்தபோது கொஞ்சம், கொஞ்சமாய் என் மனசுக்குள் அது புகுந்து, அனைத்து இரத்த நாளங்களிலும் புகுந்து புறப்பட்டு, உச்சி முதல் பாதம் வரை ஒரு அணு இடம் கூட விடாமல் பரவி விட்டது போலிருக்கிறது.

அது? கர்வம்!

தரையில் கால் பாவாமல் நடந்தேன்.

சந்திரனின் நீல் ஆம்ஸ்ட்ராங், கால்பந்தாட்ட பீலே, செஸ் ஆனந்த் இவர்கள் வரிசையில் என் பெயரும் சேர்ந்துவிட்டது போன்ற பிரமையில் பொழுது நகர்ந்தது.

'ஜானகி முதியோர் இல்லத்தில்' எனக்குப் பூரணகும்ப வரவேற்பு.

"எங்க அம்மா ஞாபகார்த்தமாய் இதை நடத்தறேன் சார். உங்களைப் போன்ற பெரியவங்க தயவாலேதான் இதை நடத்த



முடியுது'' என்று உச்சி குளிரக் குளிரப் பேசினார் இல்லத்தின் காப்பாளர்.

யாருமே சாதிக்காததைச் செய்துவிட்ட எக்களிப்புடன் பணத்தைக் காப்பாளரிடம் கொடுத்து விட்டு வீடு திரும்பினேன்.

இரவு முழுக்கத் தூக்கமே வரவில்லை நிறைந்த மனத்தால்.

அடுத்த நாள் ஸ்கூட்டரில் வெளியே சென்ற பொழுது முதியோர் இல்லக் காப்பாளரை ஒரு பஸ் நிறுத்தத்தில் கண்டேன். "எங்கே சார் போறீங்க? வாங்க நான் கொண்டு விடறேன்."



''போலீஸ் ஸ்டேஷன்ல திருடர்களோட போட்டோவை மாட்டி வச்சிருக்காங்களே, ஏன்?''

''ரெகுலரா மாமூல் கொடுக்கிறாங்கில்ல... அதுக்கான ஒரு மரியாதைதான்!''

– சீர்காழி ரேவதி

அவர் போக வேண்டிய இடம், நான் செல்லும் வழியிலேயே இருந்தது சௌகர்யமாகிப் போனது. கொஞ்சம் தொலைவு போனதும் திடீரென நிறுத்தச் சொன்னார் அவசரமாய்.

ஸ்கூட்டர் குலுக்கலுடன் நின்றது.

"ஏன் சார்? என்னாச்சு?" என் கேள்விக்குப் பதில் சொல்லும் பொறுமையின்றி சாலையின் குறுக்கே ஓடினார். எதிர்ப்புறமுள்ள மரத்தடியில் யாரோ விழுந்து கிடப்பது தெரிந்தது. சைகையால் என்னை அழைத்தார். ஸ்கூட்டரை ஓரம்கட்டிவிட்டு, அங்கு சென்றேன்.

கீழே விழுந்துகிடப்பவனின் தலையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டார் இல்லக் காப்பாளர்.

'தண்ணீ, தண்ணீ' என்று முனகுவது ஈனமாய்க் கேட்டது.

தன் தோள் பையிலிருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து, மெல்ல அவன் வாய்க்குள் ஊற்றினார்.

நான் அந்த ஆளைப் பார்த்தேன்.

அழுக்கடைந்த ஆடை, அதைவிட அசுத்தமான உடம்பு, ஏதோ துர்நாற்றம் அவனிடமிருந்து வந்தது. பிச்சைக்காரனோ?

இல்லக்காப்பாளர் கொஞ்சம் நீரை அவன் முகத்தில் தெளித்தார். நினைவு வந்து அசைந்தான் அவன். கையில் அதென்ன காயம்? அடிபட்ட காயமா, இல்லை, வேறு ஏதும் பெரும் வியாதியா?

அருவருப்பாய் அவனையும், அவன் காயத்தையும் பார்த்தேன்.

"சார், அந்த ஆட்டோவை நிறுத்துங்க" என்றார் இல்லக்காப்பாளர்.

ஆட்டோ நின்றது.

"ஒரு கை பிடிங்க" என்று அவர் உதவி கேட்டதும் தயங்கி நின்றேன்.

புரிந்து கொண்டவராய், தாமே தனியாளாய் அவனைத் தூக்கி ஆட்டோவில் அமர வைத்தார். அருகில் அமர்ந்து அவனைப் பிடித்துக் கொண்டார்.

"மன்னிச்சுக்குங்க சார். உங்களை அனாவசியமாய்த் தாமதமாக்கிட்டேன். மிகவும் நன்றி."

அவர் விடைபெற, ஆட்டோ புறப்பட்டது. ஆட்டோ சென்ற திசையையே வெறித்தபடி சற்று நேரம் நின்றேன்.

வீட்டுக்குத் திரும்பியதும் எதிர்வீட்டு கோவிந்தன் ஓடிவந்தார்.

"சார், நான் ஒருவாரமாய் ஊரிலில்லே. காலையிலே வந்தேன். விஷயம் கேள்விப்பட்டேன். கையைக் கொடுங்க. எவ்வளவு பெரிய மனசு சார் உங்களுக்கு?"

கையைப் பற்றிக் குலுக்கியவரிடம் சொன்னேன்,

"என்னத்தை சார் பெரிதாய்ச் செஞ்சுட்டேன். கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்குக் கொடுத்த மாதிரிதான் என் செயலும்!" ○



* உங்கள் குழந்தைகளிடம் படிக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள்.

* கோகுலம் அவர்களுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கச் செய்யுங்கள்.

* கல்கி வார இதழுக்கு ஓராண்டு சந்தா ரூ.275/- செலுத்தினால் போதும்; ரூ.36/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஆறு மாதங்களுக்கு (ஆறு இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக வந்து சேரும்.

* கல்கி வார இதழுக்கு இரண்டு ஆண்டு சந்தா ரூ.550/- செலுத்தினால் ரூ.72/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஓராண்டுக்கு (12 இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

* ஏற்கெனவே சந்தாதாரர்களாக உள்ளவரும் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொண்டு பயன்பெறலாம். சந்தா முடிவு தேதி நீடிக்கப்படும்.

* கல்கி என்ற பெயருக்கு மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராஃப்ட் அனுப்பவும். வெளியூர் காசோலைகள் ஏற்பதற்கில்லை.

கல்கி சந்தா செலுத்தினால் கோகுலம்/GOKULAM இலவசம்!

டி.டி. அல்லது எம்.ஓ. அனுப்ப முகவரி :
மானேஜர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

என் பெயர் : ....

என் மகன் / மகள் பெயர் : ....

....

விலாசம் : ....

....

....

....


கல்கி வார இதழுக்கு ஓராண்டு / இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ. .... அனுப்பியுள்ளேன். என் மகன் / மகள் பெயருக்கு கோகுலம் தமிழ் / ஆங்கிலம் 6/12 இதழ்கள் * அன்பளிப்பாக அனுப்பவும்.

** தேவையற்றதை அடித்து விடவும்.*

கையொப்பம் : ....

ஜூலை இறுதி வரை மட்டுமே இந்தச் சலுகை! முந்துங்கள்!

எந்த 'முகூர்த்தத்தில் 'ஹம் ஆப்கே ஹைன் கௌன்' எடுத்தார்களோ? காதலை மையமாக வைத்துக்கொண்டு, தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, அத்தை மாமா, சித்தி சித்தப்பா, சிண்டுகள் நண்டுகள் என்ற திருவிழா கூட்டத்திற்கு நடுவில் சினிமா வைத் தேடும் பாலிவுட் பேமிலி டிராமாக்கள், பக்கென்று நம்மையும் பற்றிக்கொண்டு விட்டன. அதற்குச் சமீபத்திய உதாரணங்கள் பலவுண்டு. அதில் இதுவும் ஒன்று. என்ன இதில் செண்டிமெண்டுக்குப் பதிலாக காமெடி என்பதால் கொடுத்த காசுக்கு வயிறு நிறையச் சிரித்து விட்டுப் போகச் சொல்கிறார்கள்.



கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறேன் பேர் வழி என்று வசனங்களைக் கடித்து மென்னும் கார்த்திக்கின் நடிப்பில் இளமையின் துறுதுறுப்பு. இருந்தும் இது போன்று, டூயட் பாடிக் களைத்துப் போன கார்த்திக்கை, பார்த்துப் பார்த்து நொந்து போனதில் தொண்டை வரையும் புளிக்கிறது.

சரி... மாளவிகாதான் கார்த்திக்கின் காதலி, மோனல் எதற்கு என்றால், ஏடா கூடமாய் இரண்டு பாடல்களுக்கு ஆட்டம் போடவென்றே வலியத் திணித்திருக்கிறார்கள். (அய்யோ... பாவம்! டிஸ்னி - கார்ட்டூன்கள் மாதிரி திடீர் திடீரென்று மோனல் காட்டும் அத்தனை முக பாவங்களும் அஷ்ட கோணல்!)

மாளவிகாவின் 'டம்மி' காதலனாக வரும் விவேக் படம் முடிகிறவரை அடிக்கடி அடி வாங்கும் தேமே அழகு, சோர்ந்து போகிற நம்மைச் சுறுசுறுப்பாக்குகிறது.

காதலால் மணிவண்ணன் தன் குடும்பத்தையே இழந்து விடுவதாகக் காட்டப்படும் ப்ளாஷ்பேக் - காற்று போன பலூன் மாதிரி சப்!

ஒரு தேர்ந்த நடிகர் என்பதை நிறைவாகச் செய்து நிருபித்திருக்கிறார் வினுச்சக்கரவர்த்தி.

தேவாவின் இரவல் டியூன்களில் உறுத்தல் இல்லை என்றாலும், முன்னணி ஹீரோக்களின் படங்களுக்குக் காட்டுகிற கரிசனத்தை எல்லாப் படங்களுக்கும் ஏன் காட்டுவதில்லை என்பது புரியாத புதிர். பிரசன்ன குமாரின் வசனங்களில் மிகையில்லை என்றாலும், ஃபார்முலா படங்களுக்கு எழுதிய பாதிப்பு அங்கங்கே தெரிகிறது.

இயக்குனருக்கு இது இரண்டாவது படம் என்பதால் கவனமாய்த் திரைக்கதை அமைத்திருக்கிறார். அதைக் காட்சி அமைப்புகளிலும் காட்டியிருந்தால் அடிக்கடி வரும் கொட்டாவியைத் தவிர்த்திருக்க முடியும்.

● அவெரேஜ்

— விஷுவல்தாசன்

தி.மு.க. ஒரு கட்டுக்கோப்பான அமைப்பு என்பதை விளக்குவதற்காக ஓர் உதாரணம் சொல்வார்கள். அறிவாலயத்தில் ஸ்விட்சைத் தட்டினால் கன்யாகுமரியில் விளக்கெரியும் என்பதுதான் அது. அந்த அளவுக்குக் கட்சித் தலைமை அலுவலகத்தில் உந்து சக்தியாக விளங்கியவர் கருணாநிதிதான். ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, சென்னையில் இருந்தால், மாலை ஆறரை மணிக்கு அறிவாலயத்தில் ஆஜராகி விடுவார் கலைஞர். நிர்வாக சம்பந்தப்பட்ட சின்ன, சின்ன விவகாரங்கள் கூட அவர் பார்த்து முடிவு செய்வதாகத்தான் இருக்கும். அறிக்கை

தடுமாறிய அறிவாலயம்!

விடுவது, பல சிக்கலான பிரச்னைகளுக்குச் சீனியர் பிரமுகர்களுடன் அமர்ந்து தீர்வு காண்பது என்று அறிவாலயத்தைப் பரபரப்பாக இயங்கச் செய்வார் கலைஞர். "கட்சி அலுவலகத்துக்கு வருவதையே பெரிய செய்தியாக்கும் தலைவர்கள் இருக்கும் தமிழ்நாட்டில், கலைஞரின் இந்தச் செயல்பாடு பாராட்டத்தக்க ஒன்று" என்கிறார்கள் மாற்றுக் கட்சித் தோழர்கள்.

இப்படி எல்லாவற்றுக்கும் கழகத் தலைவரைச் சார்ந்திருப்பதால்தானோ என்னவோ சமீபத்தில் கலைஞர் கைது செய்யப்பட்டபோது அறிவாலய நிர்வாகம் கொஞ்சம் தடுமாறித்தான் போய்விட்டது. அந்த 'சனிக்கிழமை' காலை அதிர்ச்சி, கழகப் பிரமுகர்களைச் செயலற்றதாக்கிவிட்டது. அந்த ஷாக்கிலிருந்து பிரமுகர்கள் மீளுவதற்கு முன்னர் தடுப்புக் காவல் சட்டப்படி பலர் கைது செய்யப்பட்டார்கள். சன் தொலைக் காட்சியில் கலைஞரை இழுத்துக் கொண்டு போகும் காட்சி ஒளிபரப்பாகிய நிலையில், பதற்றப்பட்டு அறிவாலயத்தைத் தொடர்பு கொள்ளத் துவங்கினார்கள் தொண்டர்கள். ஆனால், வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன் போன்றோர் மத்திய சிறை வாசலில் தவம் கிடக்க, மிசா கணேசன், ஆலந்தூர் பாரதி போன்றோர் வழக்கறிஞர்களை ஒருங்கிணைப்பதில் பிஸியாகிவிட, தலைமையகமான அறிவாலயத்தில் முக்கியப் பிரமுகர்கள் எவரும் இல்லை. ஆற்காடு வீராசாமியும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்ததால் நிலைமை கொஞ்சம் சிக்கலாகவே போய்விட்டது. ஆர்.டி.எக்ஸ் என்று அழைக்கப்படும் ஆர்.டி. சீதாபதி, வழக்கறிஞர் கே.எஸ். ராதாகிருஷ்ணன், அலுவலக பணியாளர்கள் பத்மநாபன், ஜெயகுமார் போன்றவர்கள் மட்டுமே அங்கு இருந்தனர். முதல் நடவடிக்கையாக தே.ஜ.கூ. தலைவர்களின் கூட்டத்தை கூட்டுவது என முடிவு செய்யப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குள் மாவட்டங்களிலிருந்து கழகப் பிரமுகர்கள் கைது பற்றிய விவரங்கள் வந்து கொண்டே இருந்தன. கலைஞர் கைது





காட்சிகளால் பாதிக்கப்பட்ட தீவிரத் தொண்டர்கள் தீக்குளிக்கவும் துவங்கிவிட்டார்கள். 'தீக்குளிக்க வேண்டாம்' என்று பேராசிரியர் அறிக்கை விட்டார்.

இதற்கிடையில் ஸ்டாலின் சரண்டர் ஆகிவிட, அவர் மதுரை சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். தே.ஜ.கூ. தலைவர்கள் கூட்டத்தில் பந்த் நடத்த முடிவு செய்யப்பட்டதால் மிச்சம் மீதி இருந்த கழகப் பிரமுகர்களைக் கைது செய்யும் படலத்தைத் துவங்கியது போலீஸ். இந்த சம்பவங்களுக்கெல்லாம் ரீ-ஆக்ட் செய்வதற்கு அறிவாலயப் பிரமுகர்கள் ரொம்பவே தயங்கினார்கள்.

மறுநாள் பெர்னாண்டஸ் வருகையின் போது கொஞ்சம் சுதாரித்துக் கொண்டு விட்டார்கள் கழகப் பிரமுகர்கள். மத்திய சுகாதார இணை அமைச்சர் ராஜா, ஆலடி அருணா போன்றோர் பெர்னாண்டஸ் பணிக்குத் துணையாக இருந்தார்கள். இருந்தாலும் முதல் நாள் அறிவாலய நிர்வாகம் கொஞ்சம் தடுமாறித்தான் போனது. "இதுபோன்ற பெரிய நெருக்கடிகளைக் கழகம் சந்திக்கும்போது crisis management group ஒன்று அமைத்து செயல்பட்டால் பல்வேறு பிரச்னைகளை அந்தந்த கோணத்தில் சந்திப்பதற்குச் சுலபமாக இருக்கும்" என்கிறார்கள் சில தி.மு.கவினர். "கலைஞர் கைதைத் தொடர்ந்து இதைப் போன்ற சூழலை அமைத்து இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை பத்திரிகையாளர்களைச் சந்தித்து, கழகம் செய்திகளைப் பரிமாறிக் கொண்டிருக்க வேண்டும். அந்த நெருக்கடியான கட்டத்தில், பத்திரிகையாளர்களை அறிவாலய வளாகத்துக்கு அழைத்துச் செயல்பட்டது சன் தொலைக் காட்சி நிர்வாகம் தானே தவிர, தி.மு.க. நிர்வாகம் அல்ல" என்கிறார்கள் அவர்கள்.

"தி.மு.கவைப் பொறுத்தவரை அதன் ஒரே செய்தித் தொடர்பாளர் கலைஞர் ஒருவர்தான். அவரது எழுத்தும் பேச்சும்தான் தி.மு.கவை உயிர்த் துடிப்போடு வைத்துக் கொண்டிருக்கிறது. பத்திரிகையாளர்கள் அவரைச் சுலபத்தில் சந்திக்க முடியுமாதலால், பத்திரிகையாளர்களுக்கும் தி.மு.கவுக்கும் இடையே நெருங்கிய உறவு இருப்பதுபோல தோன்றுவது இயற்கை. ஆனால் கலைஞர் இல்லாத அறிவாலயத்துக்கும் செய்தியாளர்களுக்குமிடையே ஒரு வெற்றிடம் இருப்பது கண்கூடாகத் தெரிந்தது. வரும் காலத்தில் ஜெயலலிதா அரசு இது போன்ற பல சோதனைகளைக் கட்சிக்கு உருவாக்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே திட்டமிட்டுச் செயல்படாவிட்டால், சரியான நேரத்தில் பல செய்திகளைச் சொல்ல முடியாமல் போகலாம். கழகத்துக்கு இப்போதைய உடனடித் தேவை கலைஞர் வேகத்துக்கு ஈடு கொடுத்து அறிவாலயத்தில் உழைக்கக் கூடிய இளைஞர் பட்டாளம்.


"உழைப்பு என்றால் உடலுழைப்பு மட்டுமல்ல, அறிவையும் பயன்படுத்தக் கூடிய உழைப்பு. உதாரணமாகச் சொல்வதென்றால் பல்வேறு பொதுப் பிரச்னைகளில் இன்றைய பொது ஜனத்தின் கண்ணோட்டம் மாறிவிட்டது. கழகத்தின் இலட்சியங்களான சமூகநீதி, மாநில சுயாட்சி ஆகியவற்றில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே அன்றாட அரசியல் தவிர இன்றையப் பிரச்னைகளான, புதிய பொருளாதாரக் கொள்கை, சுற்றுச் சூழல், மனித உரிமை மீறல் ஆகியவற்றில் தனது வேலைத் திட்டங்களை அமைத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு தி.மு.க.வுக்கு இருக்கிறது. இதன் மூலம், இதுவரை அரசியல் சார்பு இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் இளைஞர்களைக் கூட கட்சிக்குள் இழுக்க முடியும். வாக்கு வங்கிக்கும் இந்த பிரச்னைகளுக்கும் நிறையவே தொடர்பு இருக்கிறது. தி.மு.கவின் தீவிரத் தொண்டன் கூட, போராட்டம், மறியல் என்றால் தெருவுக்கு வரத் தயங்கும் நிலைதான் இன்று இருக்கிறது. பந்த் மற்றும் பொதுக் கூட்டங்களை மக்கள் புறக்கணிக்கிறார்கள். எனவே கட்சித் தொடர்பு, பொது ஜனத் தொடர்பு, இரண்டிலும் கழகம் நிறையவே கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இவற்றில் கோட்டை விட்டால் சர்வ ஆயுதங்களுடன் தி.மு.கவை நசுக்க முயற்சிக்கும் மாநில அரசை எதிர்த்துப் போராடுவது மிகவும் கடினமாகிவிடும்" என்கிறார் ஒரு முக்கிய தி.மு.க. பிரமுகர்.

பத்து நாட்கள் இடைவெளிக்குப் பின்னர் அறிவாலயத்தில் மீண்டும் சுறுசுறுப்பாகிவிட்ட கலைஞருக்குச் சவால்கள் நிறையவே காத்திருக்கின்றன.

— தில்லப்பா

அட்டை, படங்கள்: ராஜன்


அறுக்கும் வியர்வை அரைக்கும் தண்ணீர்!



நகரம் உலர்ந்து கிடந்தது. தெருவெங்கும் குடங்கள், காலிக்குடங்கள் கிடந்தன. முக்கியப் பிரமுகர் வருகைக்குக் காத்திருக்கும் பொது ஜனம் போல அவை கிடந்தன. பூமியே காய்ந்து தாகித்துக் கிடந்தது. நெருக்க நெருக்கமாய் விவசாய நிலங்களில் வீடு கட்டிய ஜனங்களே, விவசாயிகளைப் போல மழையை எதிர் பார்த்து வானத்தை வானத்தைப் பார்த்தார்கள். பெய்யெனப் பொய்த்தது மழை. வானத்தில் இருந்து சிறு சொட்டுக்கும் அவர்கள் நாக்கை நீட்டக் காத்திருந்தார்கள்... ஓடிக் களைத்த பட்டிநாய்ப் போல நாக்கை நீட்டிக் காத்திருந்தார்கள். பட்டினி நாய்கள் போல. மழை அறிகுறியே இல்லை. பிறகு அவர்கள் தெருவின் மூலைவரை தண்ணீர் லாரி வருகிறதா? என்று பார்த்தார்கள். இருந்த வெயிலுக்குத் தெருவெங்கும் வெப்பக்காற்று அனலைச் சிதறடித்து அவர்கள் தாகத்தை அதிகரித்தது. தூரமெங்கும் அலை அலையாய் நெளிந்தது கானல்நீர். கனவுத் தண்ணீர். அது அவர்களது தாகத்தை இன்னும் இன்னுமென அதிகப்படுத்தியது.

வீட்டுக் கிணறுகளிலோவெனில் சொட்டுத் தண்ணீர் இல்லை. எட்டிப் பார்த்தால் பெரும் குப்பைத் தொட்டியெனத் தோன்றிற்றே தவிர அது கிணறு எனவே நம்பவியலாதிருந்தது. சாதாரணமாக தெருவெங்கும் பொங்கி வழியும் சாக்கடைகளே காய்ந்து விட்டன. நகரத்தின் பெருமைமிக்க கூவமே கருமை மாறி சாம்பல் மண்ணாய்ச் சுடுகாடாய்க் கிடந்தது. எங்கும் தண்ணீர்ப் பஞ்சம். வறட்சி. வெப்ப மூச்சுக்கள். பெருமூச்சுக்கள்.

தண்ணீர் என லாரிகளில் ஏதோ வழங்கப்படுகிறது. தெருவோரங்களில் விநாயக சதுர்த்தி 'சீசன்' பிள்ளையார்களாய்ச்



எஸ். சங்கரநாராயணன்

சின்டெக்ஸ் ஜாடிகளில் நிரப்பப்பட்ட தண்ணீரைப் பிடிக்க மூச்சைப் பிடித்துப் போராட வேண்டியிருந்தது. அது பெண்களின் ராஜ்ஜியம். அவர்களுடே ஆண்கள் உட்புக இயலாது. பெண்களோவெனில் சண்டையிட்டார்கள். கூச்சலிட்டார்கள். அவர்கள் போட்ட குடங்களின் வரிசை தண்ணீர் வந்ததுமே கலைந்து சிதறிப் போனது. கல்லெறியப்பட்ட காக்கை கூட்டம். சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து போனது. ஒரு குடம் தண்ணீருக்கு ஒவ்வொருத்தரும் பெரும் போராட்டம் நிகழ்த்த வேண்டி வந்தது. வாரி முடிந்த, வகிடெடுத்த தலை கலைய, அந்த வெப்பத்தில் உடம்பெங்கும் வியர்த்து விறுவிறுக்க, அவர்கள் அந்தக் கூடத்துள் புகுந்து தண்ணீர் பிடிக்கிறது சாதனை அம்சமேதான். அவர்கள் பிடித்த தண்ணீரைவிட தரையில் வீணான தண்ணீரே அதிகம். ஒரு குடம் தண்ணீர் பிடித்து அந்தக் கூட்டத்தில் முட்டி மோதி வெளிவந்து ஆசுவாசப்பட்டுப் பார்த்தால் அரைக்குடம் தண்ணீரே தேறியது...

ரேஷனாய்... ஒரு வீட்டுக்கு இரண்டு குடம் ஒரு நாளைக்கு என்று விநியோகிக்கப் படுகிற தண்ணீர். எங்கே எப்படி அதை வைத்துக் கொண்டு சமாளிக்க முடியும்? அதுவும் குழந்தைகள் உள்ள வீடுகளில்? குழந்தைகள் இல்லாத வீடு எது? குடிக்கவே பற்றாது அந்தத் தண்ணீர். சமையலுக்கு என்ன பண்ணுவது?

அது மாநகராட்சித் தண்ணீர். குடி தண்ணீர். மற்ற தேவைகளுக்கு என்ன செய்வது? குளிக்க, துணிகள் துவைக்க, கைகழுவ, கால் கழுவ என்று தண்ணீருக்கு ஆயிரம் தேவைகள் இருந்தன. அதை எங்கிருந்தும் எத்தனை தூரமானாலும் கொண்டு வர வேண்டியது ஆண்களின் பொறுப்பாக ஆகிவிட்டது நகரத்தில்... அவர்கள் சைக்கிளில் குடங்களைக் கயிறுகட்டி இருமருங்கிலும் தொங்கவிட்டு தெருக்களில் அலைந்தார்கள். தெருவெங்கும் ஆண்களின் சைக்கிள் ஊர்வலம். மௌன ஊர்வலம்.

எங்கேயாவது ஆழ்குழாய்க் கிணறுகள் இருந்தால் உடனே ஆண்கள், வாத்தியாரைக் கண்ட மாணவன் போல சைக்கிளில் இருந்து இறங்கி, கைவலிக்க வலிக்க எக்கி எக்கித் தண்ணீர் அடித்தார்கள். தெருக்களில் குடங்கள் அணிவரிசை ஒருபக்கம் என்றால் சைக்கிள் அணிவரிசை இன்னொரு பக்கம்.

அவர்கள் வெகுதூரத்தில் இருந்து சைக்கிளில் தண்ணீர் தேடி வந்தவர்கள். ஏற்கெனவே அவர்கள் பிற ஆண்களால்... அந்தக் குழாய்க்கிணறு இருந்த தெரு ஆண்களால் விரோதிகளைப் போல நடத்தப்பட்டவர்களாய் இருந்தார்கள்.

நகரத்தில் தண்ணீர்ப் பிரச்னை உக்கிரமாய் இருக்கிறது என்றால் வெங்கடாஜலத்துக்கு இத்தோடு இன்னுமொரு பிரச்னை. தண்ணீர்ப் பிரச்னை இந்தக் கோடையில் ஆரம்பித்த பிரச்னை அல்லவா? வெங்கடாஜலத்துக் கோவெனில் ஒரு பெரிய பிரச்னை... நிரந்தரப் பிரச்னை... அவனைக் கனவிலும் கலவரம் ஊட்டும் பிரச்னை... அவனுக்குச் சைக்கிள் விடத் தெரியாது. குறைந்தபட்சம் சைக்கிள் உருட்டவாவது அவன் கற்றுக் கொண்டிருக்கலாம். சைக்கிள் விடத் தெரியாதவனுக்கு உருட்டவும் ஏனோ தெரியவில்லை. இதுபற்றி யாராவது ஆராய்ச்சி செய்தால் நல்லது.

ஊரில் எல்லோரும் ஆம்பளையாய் லட்சணமாய் 'சைக்கிள்-காவடி' எடுத்து அலைகிறார்கள். இது அலைவதும் இல்லை. தண்ணீர் கொண்டுவருவதும் இல்லை. அட நான் பிடிச்சி வெச்ச தண்ணீரையுமல்லவா விழுந்து விழுந்து செலவழிக்கிறது என மத்தாப்பூ போல எரிந்து விழுந்தாள் காவேரி.

அவன் பெயரில் மாத்திரம் ஜலம் இருந்து என்ன பிரயோஜனம்? அதிலும் பூஞ்சை உடம்புக்காரன். சிறு வெயிலுக்கும் சிறு குளிருக்கும் அவனுக்குச் சளி பிடித்துக் கொண்டது. வறண்ட சளி. அல்லது ஒழுகும் மூக்கு. ஜலத்துக்கும் அவனுக்கும் நிரந்தரப் பகை. அவனுக்கு வெங்கடாஜலதோஷம் என்று பெயர் வைத்திருக்கலாம்.

ஜலத்துக்குச் சைக்கிள் தெரியாவிட்டால் என்ன? அவன் மகனாவது, சினிமாவில் வருவது போல, தலையெடுத்து அப்பாவின் கனவுகளை நிறைவேற்றக் கூடாதா? கனவுகள் நிறைவேறுவது எல்லாம் ஏனோ சினிமாவில் மாத்திரமே நடக்கின்றன. சினிமா மனைவிகள் கணவனைத் தெய்வமாய் மதிக்கிறார்கள். தாலியைக் கண்ணில் ஒற்றிக் கொள்கிறார்கள். தண்ணீர் ஊற்றெனத் தெறித்து விழும் பின்னணியில் பாட்டுப் பாடித் துள்ளிக் குதிக்கிறார்கள். மழையில் நனைகிறார்கள்... அப்படி



நனைந்தும் ஏனோ அவர்களுக்கு ஜலதோஷம் பிடிப்பதேயில்லை!

கல்யாணம் ஆன நாளில் இருந்தே காவேரி அவனை மதிப்பதில்லை என்பதிருக்கட்டும். பிறந்த பிள்ளையும் அப்படியே இருந்தான். அப்பா கொஞ்சம் பயந்த சுபாவம். கொஞ்சம் என்ன, நிறையவே பயந்த சுபாவம் என அவன் அறிந்து வைத்திருந்தான். இந்தக் காலப் பிள்ளைகள் எது வேண்டுமோ அதைத் தெரிந்து கொள்வதேயில்லை. வேண்டாததையெல்லாம் தெரிந்து கொள்கின்றன...

அப்பா தனக்குச் சைக்கிள் விடத் தெரியவில்லை என வருத்தப்பட்டால், சுதாகர் நல்ல வேளை தனக்கு சைக்கிள் ஓட்டத் தெரியவில்லை என நினைத்தான். அவனுக்கு இன்னும் வேலை என்று எதுவும் சிக்கவில்லை. தூண்டிலை எவ்வளவு வீசிப் போட்டும் அவன் வலையில் இன்னும் எந்த மீனும் சிக்கவில்லை. வீட்டில் இருப்பதற்கும் அதற்கும் தண்ணீர் சுமப்பது அவன் தலையில் விடிந்திருக்கும். நல்லவேளை...

தண்ணீர் கிடைக்காதது ஊரெங்கும் துக்கமாய் உணரப்பட்டது என்றால் இளைஞர் பட்டாளம் அதை உற்சாகமாய்க் கொண்டாடியது. தண்ணீர்.... தண்ணீர் சார்ந்த இடங்களை அவர்கள் சுயம்வர மண்டபங்களாய் உணர்கிறார்கள். தண்ணீர் லாரிகள் வரும்போது ஊரே எப்படிப் பரபரப்பாய்த் தன்னை அலங்கரித்துக் கொள்கிறது. இளம் பெண்கள் பரபரப்பாய் ஓடுவது அவர்களுக்குச் சினிமாவின் பாடல் காட்சி போல இருந்தது. அதைப் பார்க்க அவர்கள் அந்த இரவிலும் சற்று பவுடர் கிவுடர் எல்லாம் அடித்துக் கிளம்புகிறார்கள்.

உள்ளூர் மாடுகள் விலை போவதில்லை. அது இளைஞர்களுக்கும் தெரியும். ஆகவே அவர்கள் சமாதானமான முறையில் வெளித் தெருக்களில், தங்களை இந்த வீட்டுப் பிள்ளை என அடையாளம் கண்டு கொள்ளாத தெருக்களில் நடமாடினார்கள். எல்லாத் தெருக்களிலும் பெட்டிக் கடைகள் இருக்கின்றன.



பெட்டிக்கடைகள் இளைஞர்களின் சரணாலயங்கள். குடத்தில் தண்ணீர் வழிகிறதோ இல்லையோ, அங்கே இவர்களுக்கு உற்சாகம் ஊற்றெனப் பொங்கி வழிகிறது. இவர்களைப் பார்க்க அந்தப் பெண்களுக்கும் உற்சாகம்தான் என்றாலும் அவர்கள் சற்று கழுத்து நொடிப்புடன் முகத்தைச் சுளித்துக் கொள்கிறார்கள். அதை இந்த ஆண்கள் பரந்த மனத்துடன் அலட்சியப் படுத்துகிறார்கள்.

ஒவ்வொரு இளைஞனின் சட்டையிலும் பை இருக்கிறது. அதில் துட்டு கிடக்கிறதோ இல்லையோ, கட்டாயம் ஒரு கடிதம் இருக்கிறது. மானசீகக் காதலிக்கு என எழுதிய காவியம். காதல், இளைஞர்களைக் கவிஞனாகக் 'கேவலப்'படுத்தி விடுகிறது என்பது பெரியோர் வாக்கு...! கிரிக்கெட் தனது பரபரப்பான ஆட்டத்தினால் ஜனங்களைச் சோம்பேறிகளாக ஆக்கி விடுகிறதில்லையா... அதைப் போல....

இன்னொரு ஆன்றோர் மூதுரையும் உண்டு. பிரச்னை இல்லாத மனிதனே இல்லை, என்பார்கள். சுதாகருக்குக் காதலிப் பிரச்னை. ஜலத்துக்கு சைக்கிள் விடத் தெரியாது. காவேரிக்கு அல்சர். எல்லாருக்கும் பொதுப் பிரச்னை- இது தண்ணீர்ப் போராட்ட காலம். ஜலத்துக்குப் போதாத காலம். சுதாகரும் சைக்கிள் விடக் கற்றுக் கொள்கிறானில்லை. ஜலம், சுதாகரிடம் சைக்கிள் கற்றுக் கொள்ளும்படி மனுக் கொடுத்துவிட்டு அவனது பரிசீலனைக்காகக் காத்திருந்தார். அவரது மனுக்களை அரசியல்வாதி போல அவன் வாங்கி வாங்கி குப்பைக் கூடையில் கிழித்துப் போட்டான். இந்த வயதில் நானாவது சைக்கிள் கற்றுக் கொள்வதாவது...

ஜலத்துக்கு ஒரு விஷயம் புரிபடவே இல்லை. என் மீது இத்தனை ஆவேச ஆத்திரம் கொண்டவள் காவேரி. ஆனால் சுதாகரிடம் அவளுக்குப் பாசம் தோசைமாவு போலப் பொங்கி வழிந்தது. அவன் என்ன செய்தாலும் அவள் அவனைக் கொஞ்சுவதும் கெஞ்சுவதும் ஆச்சரியமாய் இருந்தது. அவனிடம் இருந்தது இளமையின்... பருவத்தின் வசீகரம். முளைத்ததும் முளைக்காமலுமான சிறு மீசை. இளமைப் பொலிவு. நடையின் உற்சாகம்.

இந்நாட்களில் சுதாகரிடம் நல்ல முன்னேற்றம் வந்திருக்கிறது. இப்போது அவனிடம் பெரியாம்பளைத்தனங்கள், பந்தாக்கள், தோரணைகள் வந்திருந்தன. சுதாகர் சரணாலயங்களில் சற்று நட்சத்திர அந்தஸ்து பெற்றவன் ஆனான். இளைஞர் மத்தியில் அவன் பைச் செழிப்பால் அவன் வருகை கொண்டாடப்பட்டது. அவனும் சிகரெட்டைப் பல்வேறு

விதமாய்க் கையில் பிடிப்பது போன்ற வித்தைகளில் தேறிக் கொண்டு வந்தான். அவன் நடையில் சற்று துள்ளல் தன்னம்பிக்கை வந்திருக்கிறது. ஆகவே அவன் அம்மா அவனைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தாள்.

இரவில் கிளம்பும் முன் பவுடர் அடித்துக் கொள்கையில் முகம் கழுவத் தண்ணீர் எடுத்துக் கொண்டால் அம்மா மறுக்கவில்லை. "எங்கடா போறே?"– "ஒரு ஃப்ரெண்டைப் பாக்கணும்..."– "சாப்ட்டு போயேண்டா" என்றாள் அம்மா அன்பொழுக. "இதோ வந்துர்றேம்மா..."– "வெளில சாப்ட்டு வந்திராதே..." என்று கொஞ்சினாள் அம்மா. இதையெல்லாம் ஜலம் பார்த்துக் கொண்டு மௌனமாய்ப் பல்லைக் கடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவனால் வேறென்ன செய்ய முடியும்?

"எங்கடா போறே?" என்றான் ஜலம் எழுந்து வந்தபடியே. "கதவைச் சாத்திக்கங்கப்பா..." என்றபடி வெளியேறினான் சுதாகர்.



வெளியே வந்தபோது நகரம் அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. இங்கே மழை இல்லை என்றாலும் வேறு பகுதியில் மழை பெய்யும் என்பதைப் போல, அவன் வழக்கமாய்ச் சிகரெட் வாங்கும் தெருப்பக்கம் தண்ணீர் லாரி வந்திருக்கலாம். அந்தப் பகுதியின் ஒரு பெண் அவன் மனசைக் குறுகுறுக்க ஆரம்பித்திருந்தாள். அவன் கனவுகளைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்திருந்தாள். பல்வேறு முறைகளில் துப்பறிந்து செய்திகளைத் திரட்டி அவள் அவள் பெயர் காயத்ரி என்று கண்டு கொண்ட பரவசத்தில் இருந்தான். நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன், காயத்ரி எனும் நாமம். அதை நேற்று அவன் சரி பார்த்துக் கொள்ளவும் ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததே அதைச் சொல்ல வேண்டும்.

புதுசா தங்கப்பல் கட்டிக்கிட்டவ பக்கத்து வீட்டுக்குப் போய் "இஞ்சி இருக்கா இஞ்சி?" என்று கேட்டாளாம்– என்பது முதுமொழி. சுதாகர் இப்படி நடந்து வருகிறான். தண்ணீர் பிடித்தபடி அவள்... அந்தப் பெண்... ஸ்டைலாய் சிகரெட்டைக் கையில் பிடிக்கிறான் சுதாகர். கூட வரும் நண்பனிடம் ரொம்ப அவசியம்போல் "ஏண்டா நீ காயத்ரி படம் பாத்திருக்கியா? அதுல ஸ்ரீதேவி சூப்பர் ஆக்டிங் குடுத்துருக்கா இல்ல?" என்றான்.

அவரிடம் சட்டென அந்த விறைப்பு... செத்த பல்லியின் நிலை மாறி சற்று இளக்கம் வந்திருந்தது. அவள் கண்கள் சட்டென நிமிர்ந்து அவன் கண்களை ஒரேயொரு விநாடி சந்தித்தன. எத்தனை மகத்தான கணம் அது. இருபத்திநாலு காரட் காலம்... அந்தப் மைதீட்டிய விழிகளில் சிறு ஆச்சரியம். ஒரு கேள்வி. "எம்பேர் உனக்கு... உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்பதைப் போன்றதோர் வியப்பு லயிப்பு தொக்கி நின்றது, மாநகர பஸ் ஃபுட்போர்டு பயணிபோல.

ஆகா அவள் பேர் காயத்ரிதான்.... என முடிவே செய்து விட்டான் சுதாகர். என்ன ஒரு ஆராய்ச்சி. என்ன ஒரு முடிவு. ஜலம் என்கிற மனிதனுக்கு இத்தனை அறிவாளியான மகனா?... என அவன் தன்னையே மெச்சிக் கொண்டான்.

திருவீதி உலா ஆரம்பித்த நேரம் நல்ல நேரம் போலும். அவன் எதிர்பாராத இன்ப அதிர்ச்சி ஒன்றும் நிகழ்ந்தது. இப்படி அவன் திரும்புகிறான். அவள் அந்த அபிநய சிரோன்மணி காயத்ரி சைக்கிளில்... ஆம் சைக்கிளில் திரும்பி குடம் நிறைந்த தண்ணீரை அவன் மேல் சிதறி... திகைத்து நிற்கிறான். ஸாரி சொல்ல அவள் நா எழுகிறது. திட்டுவானா என்று பயமாயும் இருக்கிறது — அவளுக்கு. நிமிர்ந்து பார்த்தால் ஆ, அவன்.

சண்டையை எதிர்பார்த்து நின்றவள் சற்று குனிந்து தனக்குள் நகைத்துக் கொண்டபடி மீண்டும் சைக்கிளை மிதித்து காயத்ரி அவனைக் கடந்து போனாள். திரும்பி நின்று மனசெல்லாம் பேச்சாக... காயத்ரி காயத்ரி... என மனம் தந்தியடிக்க அவன் பார்த்துக் கொண்டிருந்தான் அவள் வீட்டு வாசலில் இறங்குவதையும் இ போது இறங்கி, அரைக்குடம் தண்ணீருடன் உள்ளே செல்வதையும் அவன் பார்த்தான். ஆ, அவள் வீடு அவனுக்குத் தெரிந்து விட்டது. தன்னையும் பார்த்துக் கொண்டான். அந்த மீதித் தண்ணீர் என்மேல்... பரவசமாய் இருந்தது.

ஜலத்துக்கு நம்பவே முடியாத மகிழ்ச்சியைச் சொன்னான் சுதாகர். எத்தனை மகத்தான நாள் இது... "அப்பா சைக்கிள் கத்துக்கறேம்ப்பா. தண்ணி கொண்டுவர கொள்ள வீட்டுக்கு உதவியா இருக்கும்ல?" என்றான் சுதாகர். ○

ராஜாஜி எடுத்த ஆயுதம்!

அது 1917 ஆம் ஆண்டு. சேலம் மாவட்ட ஆட்சியர் லே (Ley) தமது நகரசபை நிறைவேற்றிய தீர்மானத்திற்கு இத்தனை ஆதரவு தருவார் என்று இராஜாஜி நினைக்கவில்லை.

சேலத்தில் வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கிய மூதறிஞர், 1906ல் கொல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டு திரும்பிய பிறகே முழுநேர அரசியலுக்கு வந்தார். ஆனால் அதற்கு முன்பு சேலம் கைத்தறி நெசவாளர்கள் மது அடிமைகளாக, ஈட்டும் வருவாயைக் கள்ளுக்கடையில் கொடுத்து விட்டு ஓட்டாண்டிகளாக வாழ்ந்து கொண்டிருந்ததைக் கண்டு கொதித்தார். சேலம் நகரசபைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அந்த வாய்ப்பை வகையாகப் பயன்படுத்தி சாராயம், கள் இரண்டையும் நகரில் விற்க வழங்கப்பட்டிருந்த உரிமங்களை ரத்து செய்யத் தீர்மானம் கொண்டு வந்தார். அத்தீர்மானத்துக்கு ஆட்சியர் லே முழு ஆதரவு தந்தார்!

காந்தி ஆசிரம வாழ்க்கையில், இராஜாஜி தீவிரமாக இருந்த காலகட்டம். பல இரவுகளில் நன்கு அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டி இராஜாஜியையும், ஆசிரமத் தொண்டர்களையும் பக்கத்துக் கிராமங்களுக்கு ஏற்றிச் செல்லும். ஆசிரமத் தொண்டர்களில் ஒருவர், இராஜாஜியின் வருகையை முரசொலித்துத் தெரிவிப்பார். மதுவிலக்குப் பாடல்களைப் பாடிக் கொண்டு ஊரைச் சுற்றி வருவார்கள். பிறகு பெட்ரோமாக்ஸ் விளக்கை ஊர்ச் சாவடியில் ஏற்றுவார்கள். அங்கே ஊரே கூடி விடும். மதுவிலக்குப் பிரசாரப் படங்களை ஒரு தொண்டர் விளக்கு வெளிச்சத்தில் விரித்துக் காட்ட, ராஜாஜி படத்தைக் காட்டி, விளக்கியபடி சொற்பொழிவு நிகழ்த்துவார். இந்தப் பிரசார உத்தியின் பலனாக நாமக்கல், திருச்செங்கோடு, ராசிபுரம் வட்டங்களில் இருந்து இருபத்து ஏழு கள், சாராயக் கடைகளுக்குக் கூட்டம் வராமல் போகவே, அவற்றை இழுத்து மூடும்படி 1.4.1930–ல் அரசு உத்தரவிட்டது.

வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்த 'நல்லதம்பி' என்ற தமிழ்த் திரைப்படம் பற்றிக் கேள்விப்படுகிறார் இராஜாஜி. 1949–ல் தலைமை ஆளுநராக, அவர் தில்லியில் பொறுப்பு வகித்த நேரம் அது. கலைவாணர் நடித்திருந்த அந்தப் படத்தில் 'இந்திரசபா' என்றொரு தெருக்கூத்து நிகழ்ச்சி. தமிழகத்தில் மதுவிலக்குக் கொள்கை முழு வெற்றி அடைந்த பிறகு, ஒரு தமிழ்த் தம்பதியர்



• திரிபுரசுந்தரி

தேவலோகம் சென்று அங்கேயும், மதுவிலக்குப் பிரசாரம் செய்கிறார்கள். மதுவின் தீமைகளையும், அது ஒழிக்கப்பட்டால் விளையும் நன்மைகளையும் எடுத்துக் கூறி, இந்திரனை மது ஒழிப்பிற்கு இணங்க வைக்கிறார்கள்.

படத்தைப் பார்த்த இராஜாஜி நெகிழ்ந்து போகிறார். மதுவிலக்குத் திட்டத்திற்கு இந்தப் படம் சிறந்த பிரசார சாதனம் என்பதைச் சுட்டிக்காட்டி, இதற்கு வரி விலக்கும், பாராட்டுப் பத்திரமும்

அளிக்கும்படி அன்றைய தமிழக அமைச்சர் பக்தவச்சலத்திற்கும், கல்கிக்கும் கடிதம் எழுதுகிறார்.

பொது வாழ்க்கையைத் தொடங்கிய நாள்தொட்டு, வாழ்வின் இறுதிநாள் வரையிலும் மதுவிலக்கை இராஜாஜி மறக்கவில்லை என்பதற்கு ஆதாரமாக "இதழாளர் இராஜாஜி" *(டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம். ஆறாவது நிழற்சாலை டி.1, கே பிளாக், அண்ணா நகர் கிழக்கு சென்னை – 102)* என்ற ஆய்வு நூலில் ஏராளமான குறிப்புகள் உண்டு!

இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் அ. திரிபுரசுந்தரி. இவரது ஆய்வுக்கு ஆதாரமாகப் பயன்பட்டிருப்பவை இராஜாஜி நடத்திய 'விமோசனம்' மாத இதழ்கள்.



"**ம**க்கள் நல்வாழ்வு ஒன்றையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த இராஜாஜி மதுவின் பிடியிலிருந்து அவர்களை மீட்பதற்காக, படைக் கருவியென அவர் தொடங்கிய இதழே விமோசனம். நாற்பது பக்கங்கள் கொண்ட மாத இதழாக, கல்கி கிருஷ்ண மூர்த்தியின் துணையோடு 1929- ஆகஸ்டில் தொடங்கிய இந்தப் பத்திரிகை, பத்து இதழ்களே வந்தது. இதழ்கள் வாழ்ந்த காலம் குறைவு என்றாலும் சாதித்தது மிகுதி.

"விமோசனத்தை வெறும் இதழாக இல்லாமல் இயக்கமாகவே நடத்தினார் இராஜாஜி. களிப்பூட்டுவதற்கென்று பல்சுவை இதழ்கள் வெளிவரத் தொடங்கி விட்ட முப்பதுகளில், மதுவிலக்கு பற்றியச் செய்திகளுக்காக மட்டும் விமோசனத்தைத் தொடங்கி, அதை அந்தக் காலக் கட்டத்தில் நாலாயிரம் பிரதிகள் விற்றுக் காட்டியது சாதனை. முக்கியமாக, பயமுறுத்தும் மொழிநடை நிலைபெற்றிருந்த அந்தக் கால கட்டத்தில், அடித்தள மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய அவசியத்தைக் கருதிய இராஜாஜி மிக எளிய மொழியில், சொல்லும் முறை இருக்க வேண்டும் என்பதை கோட்பாடாகவே கடைப்பிடித்துள்ளார். இதனால்தான் விமோசனம் இதழ்களை ஆய்வுப்பணிக்கு எடுத்துக் கொண்டேன்'' என்று சொல்லும் திரிபுர சுந்தரி, சென்னை அசோக்நகர் அரசு மேநிலைப் பள்ளியில் முதுநிலைத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இவரது கணவர் மா.ரா. அரசு, ஒரு தமிழ்ப் பேராசிரியர். இவரது மாமனார் காலம் சென்ற தமிழறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனார். ''எனது மாமனார் பெயரில் 1983-ல் இதழியல் ஆய்வு மையம் ஒன்றை எனது கணவர் தொடங்கினார். தமிழ் இதழியல் வரலாற்றை முறையாகத் தொகுத்து வெளியிடுவதும், இதழியல் தலைப்புகளில் மாணவர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்குகளை தொடர்ந்து நடத்துவதும்தான் இதன் நோக்கம்'' என்கிறார் இவர்.

பெட்டிச் செய்தி, துணுக்குகள் தொடங்கி, சிறுகதை, கவிதை, நாடகம் போன்ற வடிவங்களையும் விமோசனம் இதழில் முழுக்க முழுக்க மதுவிலக்குப் பிரசாரத்திற்காகவே பயன்படுத்தியதை ஆய்வில் சுட்டிக் காட்டியிருக்கும் திரிபுர சுந்தரி, தமது இந்த முதல் ஆய்வு நூலுக்கு தமிழ் இதழியல் முன்னோடி வே. சாமிநாத சர்மா நினைவுப் பரிசு கிடைத்திருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி என்கிறார். சிறந்த ஆய்வு நூலுக்கென ஆண்டுதோறும் வெ. சாமிநாத சர்மா நினைவாகப் பரிசு வழங்கி வருகிறார் மற்றொரு தமிழாராய்ச்சியாளரான பெ.சு. மணி. ரூ3000 பரிசுத் தொகையை இவ்வாண்டு திரிபுரசுந்தரிக்கு இந்திரா பார்த்தசாரதி தலைமையில் வழங்கினார்கள்.

— **ஜெயந்தன்**

படம்: **ராஜன்**

கங்கூலிக்குப் பிடித்தமான பாண்டம் கழுநீர்ப் பானை. முதல் நாலு மேட்சுகளில் கல்யாணச் சாப்பாடாக ஜமாய்த்து விட்டு ஐந்தாவது முக்கியமான ஃபைனலில் கழு நீர்ப் பானையில் கையை விடுவது வாடிக் கையாகிவிட்டது அவருக்கு.

சச்சினுக்குக் காயம் காலிலா, மனசிலா?

ஜிம்பாப்வே கதையும் அவ்வாறே. Once again returning empty handed.

டாஸ் ஜெயித்தவர் அழகாக பேட்டிங் எடுத்து மளமள வென்று ரன்கள் குவித்து மேற்கிந்தியத் தீவு அணியைத் திணரடிக்க வேண்டியதுதானே? ஃபீல்டிங்கை எடுத்துக் கொண்டுவிட்டு, அணியினரில் சிலர் எதிரியின் பந்தைத் தடுக்கத் தவறும்போதும் கேட்சைக் கோட்டை விடும்போதும், பரவாயில்லை என்று சொல்லி அவர்களுக்கு ஆறுதல் கூற வேண்டாமோ? கங்கூலி சீறிய சீறலையும், கத்திய கத்தலையும், காட்டிய கடுகடுப்பையும் ஈஎஸ்பிஎன்னில் பார்க்க அசிங்கமாயிருந்தது. சரியாக விளையாடாதவர்கள் என்று பட்டியல் கூறியபோது டெண்டுல்கரின் பெயரையும் அவர் சேர்த்தது நியாயமில்லை. It ill behoves a captain.

இலங்கை விஜயத்திலிருந்து சச்சின் கழட்டிக் கொண்டதற்குக் காரணம் காலில் ஏற்பட்ட காயமா, மனசில் ஏற்பட்ட காயமா?



• ரீமாசென்

தரையில் அந்த இளைஞன் படுத்திருக்கிறான். அவனுடைய மார்பின் மீதும் முகத்தின் மேலும் மூன்று நான்கு தேள்கள் ஊர்ந்து கொண்டிருக்கின்றன. (கொடுக்கு நீக்கப்பட்ட தேள்களோ ஒருவேளை?) முகத்தைக் கொஞ்சம் கொஞ்சம் சுளித்துக் கொண்டானே தவிர அவன் அலறவோ எழுந்து ஓடவோ இல்லை.

இன்னோர் இளைஞன். மோட்டார் சைக்கிளில் உட்காருகிறான். ஓட்டம் போகிற மாதிரி. ஆனால் ஓட்டவில்லை. இரண்டு கைகளாலும் பைக்கைத் தூக்கி, தவ்வித் தவ்வி, குறிப்பிட்ட 'தூரம் வரை நேரத்துக்குள் போகிறான்.



• ஷங்கர்

'இந்தா பிடி!' என்று இந்தச் சாதனையாளர்களுக்கு ஒன்று, இரண்டு, மூன்று என்று நூறு ரூபாய் நோட்டாக ஆயிரம் ரூபாய் வழங்குகிறான் நிகழ்ச்சி நாயகி.

ஜெமினி டீவி (தெலுங்கு) நடத்தி வரும் போட்டி (?) இது. Love of money is the root of all evil என்கிறார்கள். ஆனால் அது இல்லாவிட்டால் நூற்றுக்கு தொண்ணூறு நிகழ்ச்சிகள் பிராணனை விட்டுவிடும்.


(இந்த வாரம் 'ரிமோட்'டில் இரண்டாவது வாக்கியம் என்ன? சரியான விடை எழுதுவோர்க்கு...)

மதுரை, ஆலவாய், நான்மாடக் கூடல், கோயில் நகரம் என்றெல்லாம் ஏன் பெயர் வந்தது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. நாகை முகுந்தனின் நிறைவான சொற்பொழிவில் (விஜய், 'மீனாட்சி கல்யாணம்' என்று தலைப்புத் தந்திருந்த போதிலும் விஷயம் பெரும்பாலும் மதுரை சித்திரைத் திருவிழாவைப் பற்றியதாகவே இருந்தது.

கள்ளழகர் ஆற்றில் இறங்கும் திருவிழாவைச் சைவ வைணவ ஒற்றுமைக்காகத் திருமலை நாயக்கர் உருவாக்கினார் என்றார் நாகையார். தொடர்ந்து, விஷ்ணுவின் வைகுண்டத்தையும் சிவ பிரானின் கைலாயத்தையும் இணைத்துத்தான் வை-கை என்று கூறியது.

சரியோ தவறோ, கவையான கற்பனை. Imagination is more important than knowledge.

புதுப் படங்களுக்குப் பூஜை போடப்படும் நிகழ்ச்சிகள் கோலாகலம் குதூகலமாக இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்தால் அது கண்ட



• சிம்ரன்



லேறு கனவுதான். அதாவது அப்படித்தான் தோன்றியது 'பாரதி' காட்டியதைப் பார்த்தபோது.

பிரபுவும் கார்த்திக்கும் நடிக்கும் ஒரு படத்துக்கும், சிம்ரன், மணிவண்ணன் ஆகியோர் நடிக்கும் இன்னொரு படத்துக்கும் பூஜை நடத்தப்பட்டபோது திரையுலகப் புள்ளிகள் வருவதும், வரிசையாக நிற்பதும், குருக்கள் நீட்டும் கற்பூரத் தட்டைக் கண்ணில் ஒற்றிக் கொள்வதும், கன்னத்தில் போட்டுக் கொள்வதும் –

யாவும் யந்திர மயம். ஒளிப்பதிவு இல்லாத பொம்மை ஷூட்டிங். சிரிப்போ, பேச்சோ, பாட்டோ, கேவலம் நாற்காலி நகர்த்துகிற ஓசையோகூட இல்லாமல், மொத்தப் பேரும் பிசாசு மாதிரி நடமாடினார்கள்.

பார்த்துக் கொண்டேயிருந்தால் சுகமான தூக்கம் வருகிறது. Blessings on him that first invented sleep!

இந்த வாரம் இந்தப் பாட்டு ஏழாவது இடத்தைப் பிடிக்கிறது. இதற்கு மூன்றாவது இடம், முதல் இடத்தைப் பெறுவது இது- என்ற கணக்குகளுக்கு விஞ்ஞானபூர்வமான அடிப்படை என்ன என்று தெரியவில்லை. ஆனால் விஜய் டீவியின் 'கவுண்ட் டவுன்' தமது நூறாவது பிறந்த நாளைச் சிறப்பு நிகழ்ச்சியுடன் கொண்டாடிவிட்டது. பாலசந்தர், ரவிக்குமார், கதிர், ஷங்கர் முதலிய பல டைரக்டர்கள் வாழ்த்தினார்கள். தொடர்ந்து வந்தன சில பாடல்கள். கிட்டத்தட்ட ஒன்றைப் போல் ஒன்று. 'Immature poets imitate; mature poets steal' என்று சான்ஸ் கிடைக்காத சினிமாக் கவிஞரொருவர் சொன்னது சரியே. இருப்பினும், சிறப்பான இரண்டு.

1. கையிலும் கழுத்திலும் விலங்குச் சங்கிலியுடன் 'சேது' மல்லாந்து படுத்திருக்க, 'எங்கே செல்லும் இந்தப் பாதை?' என்ற பாட்டு சோகத்தைப் பிழிந்து தந்தது. 2. 'மின்னலே' படத்தில் ரீமாசென் தண்ணீருக்குள்ளிருந்து அரை வட்டமாகத் துள்ளி எழும்புகிற மீன் மாதிரி ஒரு தாவுத் தாவிக் காதலனைத் தழுவிக் கொள்கிறார். முன்னது பாகற்காய் ஜூஸ் (உடம்புக்கு நல்லது.) பின்னது ஐஸ்கிரீம். (அதிகம் சாப்பிட்டால் அவதி.)

வினோத்

அக்னிசர்மா பக்கம்
ஜூலை 18 முதல் 24 வரை



மேஷம் : கொடுப்பதும் சனி; கெடுப்பதும் சனி'ங்கிறது உங்க விஷயத்துல நூறு சதவிகிதம் 'டாண்'னு பலிக்கும். இரண்டாம் இடத்தில் சனி பகவான், தர்ணா செய்தபடி உட்கார்ந்திருக்கிறார். இடர்பாடுகளும், சிரமங்களும் கண்டிப்பா இருக்கும். சனீஸ்வரனுக்கு ஏதாவது செய்து, கொஞ்சம் 'ஐஸ்' வைத்துப் பாருங்கள். அரசு விவகாரங்கள் அளவோடு வளம் பெறும். சுக்கிரன் 2ல் ஆட்சியாக உலவுவதால், கலைத் துறைக்காரங்க விசிலடிச்சான் குஞ்சுகளாக கனக் குஷியாக இருக்கலாம். கைப்பொருள் பத்திரம்.



ரிஷபம் : ராப்டரை வீழ்த்தி, விம்பிள்டன் சாம்பியன் ஆனதிலிருந்து இவானிசெவிக்கின் மவுசு கூடியிருப்பது போல, உங்கள் செல்வாக்கு, அந்தஸ்து உயரும். குடும்ப நலம் சீராக இருக்கும். கடன்காரர்கள் தொல்லை கொசுத் தொல்லையைவிட அதிகமாயிருந்தது இல்லையா? இனி கொஞ்சம் குறையும். மருத்துவம், ரசாயனம், விஞ்ஞானம் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு ஏறுமுகம். ராசியில் சனி இருப்பதால் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். கவலைப் படாதீங்க. 'சிரமம் பார்த்தால் சிகரம் எங்கே'னு கிருஷ்ணதாசி டைட்டில் பாட்டைப் பாடிக்கிட்டே சாதிச்சுடுவீங்க.



மிதுனம் : விற்பனையில் சாதனை படைத்துக் கொண்டிருக்கும் கிரண்பேடியின் 'வாட் வெண்ட் ராங்' புத்தகம் போல, உங்கள் துறையில் நீங்கள் சாதிக்கப் போகும் நாள் நெருங்கியாச்சு! 6ல் செவ்வாய் கிராண்ட் என்ட்ரி கொடுத்திருக்காரே, அதைக் கொண்டாடாம விடலாமா? சுபிட்சம் விஸிட்டிங் கார்டு கொடுத்துவிட்டுப் போகும். உற்றார் உறவினர்கள் 'எனி ஹெல்ப்'? என்று கேட்டு வருவார்கள். போட்டி, பந்தயங்களில் ஜெயிச்சுடுவீங்க. ஆனா... கணவன் - மனைவி உறவுக்குள்ள ஏதாவது சலசலப்பு வரும். உஷார்!



கடகம் : அண்ணாந்து பார்த்தாலும் இங்கே சொட்டுத் தண்ணீர் விடாத வானம், மும்பையில வெள்ளமா கொட்டற மாதிரி, மத்தவங்ககிட்டே கறாரா இருக்கிற சனியும் கேதுவும், உங்க விஷயத்துல ஸ்வீட் பார்ட்டிஸா இருக்காங்க. இது உங்க நேரம். நல்ல ப்ரைம் டைமா வொர்க்-அவுட் ஆகும். எதிர்ப்புகள், இருந்த இடம் தெரியாமல் போகும். திறமை பளிச்சிடும். வாரப் பிற்பகுதியில் எதிர்பாராத செலவுகள் வந்து சேரும் வாய்ப்பிருக்கு. பர்ஸை பீரோவில் வெச்சு பூட்டி, சாவியைத் தொலைச்சுடுங்க.



சிம்மம் : பிரபலங்களின் வீடுகளில் பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டாலும் உங்கள் வாழ்வில் சந்தோஷ பட்டாசு சரவெடியாக வெடிக்கும். எண்ணங்கள் எல்லாமே சுலபமாய் முடியும். வியாபாரிகள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களுக்கு வளமான வாழ்க்கை பளிச்சுனு தெரியுது. வெளிநாட்டுத் தொடர்பு, பயணம் எல்லாமே ஆதாயத்தைக் கொண்டு வந்து 'லேண்ட்' பண்ணிடும். பயணத்தால் சங்கடங்கள் நேரும். பார்த்துப் போங்க.



கன்னி : பா.ம.க. ராமதாஸ் அடித்த பல்டியைப் போலவே, உங்க கிரக சஞ்சாரமும் சம்மர் சால்ட் பல்டி அடித்திருப்பதால், நிலைமை அப்படியே தலைகீழ். பராக்கிரமம் வெளிப்படும். பட்டம், பதவி வந்து சேரும். மனை, நிலம், வாகனம்னு சேர்க்கை நிகழும். குடும்பத்தில் மகிழ்ச்சி பல்கிப் பெருகும். கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ் இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். அரசாங்க விவகாரங்களுக்கு அழுத்தமாய் அனுகூலமாய் ஒரு முற்றுப் புள்ளி விழும். கேது - குருவுக்குப் ப்ரீதி செய்து வந்தால், சர்வம் மங்களமாகும்.

துலாம் : நீண்டகால சார்லஸ் - கமீலா திருமண திட்டம் நிறைவேறிவிடும் போன்றதொரு சூழ்நிலை நிலவுவது போலவே, துலாம் ராசிக்காரப் பெண்களின் கல்யாண எண்ணங்கள் நிறைவேறும். பொருளாதார சூழ்நிலை அபிவிருத்தியடையும். பக்தி மார்க்கத்திலும், ஞான மார்க்கத்திலும் ஈடுபாடு கொண்டு ஞானப்பழ சாலடாகி விடுவீர்கள். புண்ணிய நதிகளுக்குப் போய் முழுக்குப் போட்டு வர நல்ல சான்ஸ். புண்ணியம் சேர்க்குற வழியைப் பாருங்க.

நடக்குமென்பார்; நடக்கும்!

விருச்சிகம் : புதன் எட்டுல இருக்கறதே நல்ல அமைப்பு. அதுல ராசிநாதன் செவ்வாயில் இருப்பதால், விஷயமெல்லாம் நம்ம கட்சிக்குச் சாதகமாதான் இருக்கு. ஆனா பாருங்க, மற்ற கிரக சஞ்சாரம் "சாந்தமு லேகா... சௌக்கியமு லேது."னு பாடுதுங்களே. அதனால அமைதி குறையும். உடல் நலம் சுமாரா இருக்கும். குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள், ஆம்ப்ளிஃபையர் 'வீக்' ஆகிப்போன கேபிள் கனெக்ஷன் மாதிரி இரைச்சல் போடும். 'திருப்பதி வரோம்டா நாராயணா... திருப்பத்தைக் குடுடா நாராயணா'னு கோவை சரளா பாடற மாதிரி பாடி வையுங்க. நன்மையே நடக்கும்.

தனுசு : திடீரென்று டாபிகலாகிப் போன குருவாயூர் கோயில்போல, நீங்களும் பிரபலமடைவீர்கள். பண நடமாட்டத்துக்கு ஒரு குறைச்சலும் இல்லே. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பு, பதவி, பட்டம், விருந்து, கேளிக்கைனு உங்க 'வயலும் வாழ்வும்' நிகழ்ச்சியில அமோக விளைச்சல் காணப் போறீங்க. கோர்ட்டு, கேஸ்னு நெடிய நீதிமன்ற படிக்கட்டுகள் ஏறி இறங்கிட்டிருந்தீங்க இல்லிங்களா? இனி அந்தப் பிரச்னை இல்லை. அனுகூலமான முடிவு வந்து நிம்மதிப் பெருமூச்சு விடுவீங்க.

மகரம் : இந்த ராசிக் காரங்களுக்கு வாரம் முழுக்க சிறந்த பலன்களாகவே நடக்க வாய்ப்பிருக்குன்னு ஆரம்பத்துலேயே சொல்லிட்டோம். அதனால மனசஞ்சலப்படாம, துணிவா காரியத்துல இறங்குங்க. வெற்றி நிச்சயம். உடன்பிறப்புகளால் அதிக நன்மை உண்டாகும். வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். கல்லா நிரம்பி வழியும். நரம்பு சம்பந்தமான உபாதைகள் ஏற்பட்டால், அலட்சியம் கூடாது. பெரியவர்கள் ஆலோசனைப்படி நடக்கவும்.

கும்பம் : குரு பலம் ஓ.கே. 10ல் செவ்வாய் உலவுவதாலும் டபுள் ஓ.கே. அப்போ இந்த ஏழு நாட்கள் பற்றி பெரிசா கவலைப்பட்டுக்கிட்டு இருக்காதீங்க. மிஸ்டர் வெள்ளையப்பனின் வரவு தாராளமாக இருக்கும். தமிழ்நாடு ஆடிப் பெருக்கு பம்பர் பரிசுச்சீட்டு ஒண்ணு எதுக்கும் வாங்கி வையுங்க. விழுந்தா உங்களுக்கு. இல்லேன்னா நாட்டுக்கு. சுப காரியங்களில் பங்கு பெறும் வாய்ப்பிருக்கு. பெண்கள் நிலை உயரப் பெறுவார்கள். கிரக வழிபாடு சிக்கலைத் தீர்த்து வைக்கும்.

மீனம் : நல்ல அதிர்ஷ்டமான வாரம். காலேஜ் கவுன்சிலிங் வெற்றிகரமாக அமையும். நீங்கள் போகும் ரயில்கள் விபத்தில்லாமல் போய்ச் சேரும். போர்வெல் போட்டால் பாறை தட்டாது. தகவல், தொடர்புத் துறை ஆசாமிகளுக்கு அற்புதமான காலம். முகவசீகரம் பளிச்சிடும். புதிய எண்ணங்கள், செயல்களாக உருவாகும். திரு - திருமதி இடையே பாசம் இழையோடும். புதிய ஒப்பந்தங்கள் மகிழ்ச்சியை உண்டாக்கும். தாய் உடல் நலம் கவனம் தேவை. கிரக சாந்தி, ஹோமம் மூலம் நலமும் வளமும் பெறலாம். செஞ்சுதான் பாருங்களேன்.



ரிஷப ராசிக்காரரான நடிகர் ரகுவரனின் மனைவி ரோகிணியின் செல்வாக்கு உயரப் போகிறதாம்.



ஏகநாதரான இவானிசெவிக்!

ஓவென்று கூக்குரலிட்டார். பந்தை முத்த மிட்டார். நெஞ்சில் சிலுவைக் குறி போட்டுக் கொண்டார். இடது கையை வெறித்தனமாக ஆட்டிக் கொண்டார் (இடது கைக்காரர்). தரையில் உருண்டார். புல் தளத்தை முத்த மிட்டார்.

டென்னிஸ் ரசிகர் யாருமே இதையெல்லாம் 'ஆனாலும் கொஞ்சம் ஓவர்' என்று கருத வில்லை. காரணம் கோரன் இவானிசெவிக் கைப் பொறுத்தவரை விம்பிள்டன் பட்டம் வாராது போல வந்த மாமணி. "இப்போது கூட ஏதோ கனவு காண்கிறமாதிரி இருக்கிறது. திடீரென்று என்னை யாராவது உலுக்கி 'நீ விம்பிள்டன் கோப்பையை வென்றதெல்லாம் வெறும் கனவுதான்' என்று சொல்லி விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது" என்கிறார் பாவம். 'எந்த கிராண்ட் ஸ்லாம் பந்தயத்திலும் வெல்லாத உலகின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்' என்ற (அவப்) பெயரைச் சமீபத்திய விம்பிள்டன்தான் துடைத்து எறிந்திருக்கிறது.

வழக்கமான விம்பிள்டன் இறுதிச் சுற்றுக்கும் இந்தஆண்டு நடைபெற்ற இறுதிச் சுற்றுக்கு மிடையே இரண்டு முக்கிய வித்தியாசங்கள். சனிக்கிழமை பெய்த மழையால் பெண்கள் ஒற்றையர் இறுதிச் சுற்று தள்ளிப்போக, ஆண்கள் ஒற்றையர் போட்டியின் இறுதிச் சுற்று ஞாயிற்றுக் கிழமைக்குப் பதிலாக (விம்பிள்டன் சரித்திரத்தில் முதன்முதலாக) திங்கட்கிழமையில் ஆடப்பட்டது.

முதல் செட்டை ராப்டர் வெல்ல, அடுத்தது இவானிசெவிக்குக்கு. மூன்றாவது செட்டை ராப்டர் கைப்பற்றினாரென்றால், அடுத்ததைத் தன் வசப்படுத்திக் கொண்டார் இவானிசெவிக். ஐந்தாவது செட் ஆடப்பட்டபோது விம்பிள்டன் மைய மைதான அரங்கில் கடித்துத் துப்பப்பட்ட நகங்கள் நிறைய காணப்பட்டிருக்கும். 6-3, 3-6, 6-3, 2-6, 9-7 என்ற கணக்கில் வென்றார் 29 வயது குரோஷியாக்காரர்.

வென்றதும் அப்பாவையும் நண்பர்களையும் கட்டிக் கொண்டார். அடுத்து கட்டிக் கொள்ள அவரது காதலி அங்கு இல்லை. 'நீ வரலைனாதான் சென்டிமென்ட்டாக எனக்கு நல்லது' என்று சொல்லி விட்டாராம்!

ஏஸ் போடுவதில் கில்லாடியான இவரது (பந்து வீச்சின் வேகம் மணிக்கு 230 கிலோ மீட்டர்கள்!) தோளில் கடும்காயம். இந்த வருட ஆரம்பத்திலேயே, தொடரும் தோல்வி மற்றும் தோள்வலி காரணமாக விம்பிள்டனிலிருந்து விலகிவிட நினைத்தார் இவானிசெவிக். ஆனால் விதி யாரை விட்டது. 'விம்பிள்டனை வென்று விட்டுப்போ' என்று எழுதியிருக்கிறது போலும். இதனால்தான், "இனி அடுத்த ஆட்டங்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. இதுவே போதும்" என்றிருக்கிறார், 125ம் இடத்திலிருந்து முதல் நிலைக்கு வந்துள்ள இவர்.

விம்பிள்டனிலிருந்து தனியார் விமானத்தில் புறப்பட்டு, பின்னர் கப்பல் மூலமாக ஸ்ப்ளிட் என்ற தமது சொந்த ஊரை இவர் அடைந்தபோது அங்கு லட்சக்கணக்கில் திரளாக அவரை வரவேற்றனர் மண்ணின் மைந்தர்கள். ('நீங்கள்தான் எங்களது ஏகநாதர்' என்றெல்லாம் வாசகங்கள் காணப்பட்டன!) -

— குல்லு

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

நடுத்தர வருவாய் உள்ள அன்பர்களுக்கும் இல்லத்தரசிகளுக்கும் ஓர் அரிய வரப்பிரசாதம்

SWETHA walker


HEALTH FITNESS MACHINE

இந்த நவீன கம்ப்யூட்டர் காலத்தில் உடற்பயிற்சி செய்வதற்கு சிறிதும் நேரம் கிடைப்பதில்லை. அலுவலகம் செல்லும் சகோதர, சகோதரிகள் தினமும் 8 மணி நேரமும் நாற்காலியில் உட்கார்ந்து வேலை செய்வதால் உடல் தசைகளுக்கு வேலை இல்லாமல் எடை கூடவோ, பருமனாகவோ வாய்ப்புகள் அதிகம். நிறைய பேருக்கு காலையில் walking போக நேரம் கிடைப்பதில்லை. அப்படியே நேரம் கிடைத்தாலும் சென்னை போன்ற பெரு நகரங்களில் எந்தவித இடையூறும் இல்லாமல் நடந்து போகக் கூட சாலைகளில் இடமில்லை. எனவே இதை நாங்கள் மனதில் கொண்டு உங்களுடைய வீட்டில், தோட்டத்தில், முக்கியமாக அடுக்கு மாடி குடியிருப்புகளில், மாடியில் எங்கு வேண்டுமானாலும் ரிலாக்ஸ்டாக எந்த தொந்தரவும் இல்லாமல் ஹாயாக நடப்பதற்கு ஒரு புதிய இயந்திரத்தைச் சாதாரண நடுத்தர மக்கள் வாங்கும் விலையில் உருவாக்கியுள்ளோம். இதில் காலை (அ) மாலை சுமார் 10 நிமிடம் பயிற்சி செய்தால் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் நடந்த பலன் கிடைக்கும். தினம் தொடர்ந்து செய்து வந்தால் உடல் எடை நிச்சயம் குறையும். இதை உபயோகிப்பது மிகவும் சுலபம். பயிற்சி முடிந்த பின் இயந்திரத்தை மடித்து வீட்டில் எங்கும் வைத்துக் கொள்ளலாம். இந்த இயந்திரத்தை நாங்கள் தயாரிப்பு விலைக்கே கொடுப்பதோடு ஒரு வருடம் உத்தரவாதம் தருகிறோம்.

நடுத்தர மக்களின் வசதிக்கேற்ப இந்த இயந்திரம் ரூ. 1900 மற்றும் ரூ 2700/- ஆகிய விலைகளில் கிடைக்கும்.
(வரிகள் உட்பட).

சென்னை நகருக்குள் இலவச டெலிவரி.
தொடர்பு கொள்ள தொலைபேசி 4847701
(காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை)





CONTACT

ASIAN ENTERPRISES
Mfrs of: Health Fitness Machine &
Office Filing Systems
25 (Old, #16), Perumal Koil South 1st Cross Lane,
Vadapalani, Chennai - 600 026. Ph: 484 7701